Digital collection of Tamil Heritage Foundation

14170

உ

சிவராம ஜெயம்.

# MOOLIGAI MARMAM

உயிரெழுத்து,

# மூலிகைமர்மம்.

இஃது.

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரவர்களால்

பன்னூற்கிணங்க

இயற்றப்பட்டு.

மேற்படி

கிரந்தகர்த்தா அவர்களால்

சென்னை

ஸ்ரீலட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தனர்.

Registered Copy right.

1899.

இதன் விலை அணா 8.

Digital collection of Tamil Heritage Foundation

சிவராம ஜெயம்.

ரிஜிஸ்தர் காபிரயிட்

# அறிவிப்பு.

இதனால் சகலமானவர்கட்கும் தெரிவிப்பது யாதெனில், பூமியிலுள்ள சகலமான மூலிகைகளின் உபயோக முறைகளானவை அநேக நூல்வழிகளிலும் ஏட்டுப்பிரதியிலும் சிந்துண்டுக் கிடந்தவைகளை ஒருங்கே திரட்டித்தருவது சருவ பண்டிதற்குபயோகமாமென்று அநேகர் வேண்டுகோளின்படி நெடுநாட் பிரயாசை யெடுத்து பலநூற்களையும் ஆராச்சிசெய்து பல ஏட்டுப்பிரதியிலுள்ளவைகளையும் நோட்டாய்க் குறித்து யாவும் திரட்டி உயிரெழுத்து வரிசையாய் அங்கம் பிரித்து, யாவரும் எளிதில் உணர்ந்துக் கொள்ளுமாறு **சிறுமணவூர்-முனிசாமிமுதலியாரால்** எழுதி இன்னூலை சென்னை-சூளை-விஜயவிக்கினேஸ்வரர் கோயில் தெருவு 65-வது நெம்பருடைய கிரகத்தில் பதிப்பிக்கப்பட்டு ஷை கிரந்தகர்த்தாஅவர்களால் கனம்பொருந்தியஇந்தியா கெவர்ன்மெண்டாரது 1847-ஷூ த்திய 20-வது சட்டத்தின்படி ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கிறதாகையால், இதை யாவரேனும் சுலபமாய் அச்சிடத்துணிவார்களாகில் ஷை சட்டத்தின்படி நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஷை புத்தகம் 1-க்கு விலை அணா | 0 | 8 | 0. |
| வி. பி. போஸ்டுசார்ஜ் | 0 | 3 | 0. |

| | | | |
|---|---|---|---|
| நாவலர்பதிப்பு-தேவாரத்திரட்டு சுத்தமானபிரதி | 1 | 12 | 0 |
| நாவலர்பதிப்பு-திருவாசகம் சுத்தமானபிரதி | 0 | 12 | 0 |
| ஊர்வசி பஞ்சரத்தினம்-உயர்ந்தபதிப்பு | 0 | 12 | 0 |
| திருநேத்திரசிந்தாமணி உயர்ந்தபதிப்பு | 0 | 5 | 0 |
| கருவூரார் மாந்திரீகம் அட்டமாசித்து | 0 | 4 | 0 |
| பாரதம் 4-வாலியம் 18-பருவம் | 4 | 0 | 0 |
| பெண்களுக்குவேண்டிய சிங்காரகோலபுத்தகம் | 0 | 4 | 0 |
| பர்ம்மாதேசத்துசண்டை | 0 | 4 | 0 |
| ஸ்ரீமகா பக்தவிஜயம் முதற்பாகம் கிளேஸ்கடிதம் படத்துடன் | 1 | 8 | 0 |
| ஸ்ரீமகாபக்தவிஜயம் இரண்டாவதுபாகம் 12 தாசர்கள் சரித்திரமும் முன் 5 தாசர் சரித்திரம் முடிவாகாமையினால் பிற்பாதி சரித்திரமும்சேர்த்து கிக்குகடிதத்தில் அச்சிட்டது. | 2 | 0 | 0 |

தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை பிரம்பூர் போஸ்டு சிறுமணவூர் முனிசாமி முதலியார் என்றெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

1—2—99.

முதுசொம் THF

BRITISH MUSEUM

Digital collection of Tamil Heritage Foundation

உ

சிவராம ஜெயம்.



# மூலிகை சாபநிவர்த்தி.

ஓம் குருப் பிரம்மம் - குருசிவம் - குருவிஷ்ணு
சாக்ஷாத் குருமயம் ஜெகத்
குருமூலி - சிவமூலி - சத்திமூலி - விஷ்ணுமூலி
பிரம்மமூலி
ஓம் குருசாபம் நசி - சிவசாபம் நசி - சத்திசாபம் நசி
பிர்ம்மசாபம் நசி-அகஸ்தியரிட்ட சர்வசாபமும்
நசி - மசி, மசி - நசி, ஓம் சுவாஹா.

இந்த மந்திரத்தை ஓடுகிற ஜெலத்தில் நின்று, ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து உருவேற்றி வைத்துக் கொள்ளவேண்டியது கிரமம்.

## விபரம்.

எவ்வித மூலிகையாவது எடுக்க வேண்டியவர்கள், ஞாயிற்றுக்கிழமை-செவ்வாய்க்கிழமை-வியாழக்கிழமை இந்த வாரங்களில், சூரிய உதயத்தில் மனமும் தேகமும் சுத்தியுடையவராய் மூலிகை யருகில் சென்று, கிழக்கு முகமாயிருந்து சூடன் கொளுத்தி, மேற்கூரிய குருவாக்கியத்தை ஒன்பதுதிரம் ஓதி, சூரியனை நினைத்து மூலிகை எடுத்துக்கொள்ளவும்.

Digital collection of Tamil Heritage Foundation

ஸ்ரீ

சிவ[illegible]மஜெயம்.

# உயிரெழுத்து

# மூலிகை மர்ம்மம்

சித்தர் மூலிகைச் செய்தொழி லோதிட
அத்தி முகத்த நருங்கழல் போற்றுவாம்.

## மால்மருகன் துதி.

சித்தரொடு நேராய்ச் சிரித்தே விளையாடித்
தத்தமது வல்லமையைத் தானுரைத்த—பத்திரியாம்
மூலிகையின் போக்கை முழுது மினிதுரைக்க
மாலின் மருகன் றுணை.

## சித்தர் துதி

கற்றாலும் ஞானக் கருத்தரிந் தோர்கள் கமலபதம்
பெற்றாலும் சித்திப் பேரின்பக்கல்வி பிரவாமுத்தி
வைத்தாலும் வெற்றி மருவியவர் பதம் வணங்கவும்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர் தந்த திரவியமே.

கதிரவன்னொளி காட்டுமுலகெலாம்
பதினெண் சித்தர்கட் பரவி வாழ்கவே.

Digital collection of Tamil Heritage Foundation



# அ

## அருகு

### நாபிரெணத்திற்கு.

அருகு என்னும் வெள்ளறுகின் வேரைக் கொண்டு வந்து பசும் தயிர் விட்டு அறைத்து புன்னைக் காயளவு எடுத்து அரிக்கால்படி பசும் தயிரில் கலக்கி அதிகாலையில் சாப்பிடவும். இப்படி காலைமாலை இருவேளையும், 3-நாள்சாப்பிட மனிதனுக்கு ஆதாரமாகியநாபியில் எழுந்த சூட்டையும்வெட்டையும் ரிணத்தையும் தணித்து, வெள்ளை முதலிய ஒழுக்குகளை நீவர்த்தியாக்கும்.

### மேகசுரத்திற்கு.

அருகு சமூலம் கொண்டுவந்து,ஒருபிடியெடுத்து அத்துடன் 21-மிளகு சேர்த்து இடித்து அறைப்படி ஜெலத்தி விட்டு அறையாழாக்காக சுண்டும்படி கியாழமிட்டு காலையில் சாப்பிடவும். இப்படி காலை மாலை இருவேளையும் 10-நாள் சாப்பிட மேகசுரம்-உள்ளனல்-உடம்புசூடு யாவும் தீரும்.

### மருந்தை முரிப்பதற்கு.

அருகன் வேரு ஒருபங்கும் - மிளகுஜந்து பக்கும் எடுத்து, மிளகையொன்றிரண்டாயிடித்துகியாழம்வைத்துயிறக்கி இதில்பனங்கற்கண்டு-மாதளம்பூ-கூகைநீரு இவைகள் கொஞ்ச கொஞ்சம் எடுத்து நெய்விட்டு அறைத்து -மூன் கியாழத்துடன் கலந்து சாப்பிடவும். இப்படி 3-நாள் கொடுத்தால், எவ்விதமருந்து சாப்பிட்டாவது, உடம்பில் அனல்மீறி கடுப்பு பேதி -உதிர பேதியுண்டானால் இவைகளை நிவர்த்தியாகும்.

### அஸ்திவெட்டைக்கு.

அருகன் வேரை பசும்பாலில் அறைத்து மண்டலக் கணக்காக இருவேளையும் சாப்பிட்டுவந்தால் சகலவிஷமும்தீரும், அஸ்திவெட்டை-மூலவெட்டை-நீர்க்கடுப்பு இதுகள்யாவும் தீரும். தேகத்திலுள்ள நரம்புகள்யாவும் நன்றாயிருகி பலப்படும்.விஷவயித்தியம்முழுமையும்(பார்வதீபரணியத்தில்)பார்த்துக்கொள்க

### வெள்ளைக்கு.

அருகன் செடிசமூலமும் மிளகும் சமயிடையெடுத்து வெண்ணெபோல் அறைத்து முழுக் கொட்டைப் பாக்களவு சாப்பிடவும் இப்படி காலைமாலை இருவேளையும் 5 - அல்லது 10 - நாள் சாம்பிடவும். (பத்தியம் சுட்டபுளி வருத்தவுப்பு) வெள்ளையென்னும் சித்தினிரோகம் தீரும்.

### தேகம் தணிவதற்கு.

அருகன் கிழங்கு சூரணித்து சமயிடை வெள்ளைச்சக்கரை கலந்து மண்டலக்கணக்காய் இருவேளையும்புசித்துவந்தால் முத்தோஷமும் நீங்கும். தேகம் மேனியுண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## பெரும்பாடுக்கு.

அத்திப்பட்டை ஒரு பங்கு கடுக்காய்ப்பூ கால் பங்கு கூட்டி பசும்பால் விட்டரைத்து காலை மாலை புசித்து வந்தால், ரத்தக்கடுப்பு- சீதக்கடுப்பு- மேகம் பெண்கள் பெரும்பாடு இவை தீரும்.

## மலச்சிக்கலுக்கு.

அத்திக்காயை பாகப்படி சமைத்து உண்டியுடன் உபயோகப்படுத்துவந்தால், திரோகஅனல் - சரீரவெட்பம்- மலச்சிக்கல் இவைதீரும்.

## மேக ஒழுக்குக்கு.

அத்திக்கள்ளு மண்டலக் கணக்காய் ஒரேமுறையாக விடாமல் அருந்தினவர்களுக்கு மேக ஒழுக்கு அதிகமயக்கம்கூடு இவைதணியும் கண்பிரகாசிக்கும்.

## சீதபேதிக்.கு

அத்திக்காயை யிடித்து அரைப்படி ஜெலம் வைத்து அரையாழாக்காக கஷாயம் வடித்து அரை விராகனிடை மிளகு பொடித்துப் போட்டுக் கொடுக்கவும், இப்படி இருவேளை கொடுக்க சீதபேதி தீரும்.

## பித்தஒக்காளத்திற்கு,

அத்திப்பட்டை ஒருபிடி அருநெல்லிக்காய்ஒருபிடி வாழைப்பழம் 4-இதுகளை யிடித்து ரசம் பிழிந்து அதில் சீனி கற்கண்டு பொடி கொஞ்சம் போட்டுக் கொடுக்க பித்த ஒக்காளம் உடனே தீரும்.

## பிரமியத்திற்கு,

அத்திப்பிஞ்சியை தேங்காய்ப் பால்விட்டிடித்து சாறுபிழிந்து வெள்ளை குங்கிலியத்தூள் ஒரு விராகனிடை போட்டு ஒரு வேளைக்கு அரிக்கால்படிவீதம் கொடுத்துவர பிரமியம் அதாவது வெள்ளை தீரும்.

## வயற்றுக்கடுப்புக்கு.

அத்திப்பிஞ்சு-மாதுளம் பிஞ்சு-வில்வப்பத்திரி-இதுகள் சமனிடை எடுத்துஅறைத்து, கெச்சைக்காயளவு எடுத்து (**பார்வதி பரணியம்**) என்னும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும். (பிராண சஞ்சீவி மாத்திரையில்) மூன்று மாத்திரை பொடிசெய்து வைத்துக்கொடுக்க ஒரேவேளையில் வயர்கடுப்பு நிவர்த்தியாகும்.

## சீழ்பிரமியத்திற்கு.

அத்திப் பட்டை ஆவாரம் பட்டை நாவல் பட்டை இதுகள் சமனிடையெடுத்து சூரணித்து தேனில் குழைத்து இருவேளையும் 5 - 10 நாள் தின்றுவர சீழ்பிரமியம் தீரும்.

## வாய்ரிணத்திற்கு

அத்தி மரத்தின்பாலை அதிகாலையிலும் மாலையிலும் மூன்று நாள் அருந்தினல் வாய்ரிணம் வாய்ப்புண் இவைகள் நிவத்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## நீரில்ரத்தம் வருவதற்கு.

அத்திப்பட்டையை கிஷாயம் வைத்து இருவேளையும் சாப்பிட்டால் மூத்திரத்தோடு இரத்தம் வருகிறவியாதி நிவர்த்தியாகும்.

## வெள்ளைக்கு.

அத்திப்பட்டை மாம்பட்டை நாகப்பட்டை சமயிடை யெடுத்து புளிப்புத் தயிரில் ஒருநாள் ஊரியபிரகு இடித்து சாறுபிழிந்து அதி காலையில் சாப்பிடவும், இப்படி இருவேளையும் சாப்பிட்டால் ஓட்டமாய் ஓடுகிற வெள்ளைதீரும்

## பைத்துபோட.

அத்திப்பட்டையை சூரணம்செய்து நல்லெண்ணைவிட்டறைத்து பிளவை முதலிய வைகளுக்குப் பைத்து போட்டால் குணப்படும்.

## மூத்திரஎரிவுக்கு.

அத்திவிரையை பாலில் காச்சி சாப்பிட்டுவந்தால் மூத்திர யெரிவு நீர்கடுப்பு எலும்புருக்கி சதையுருக்கி இவ்வித ரோகம் தீரும். ரத்த காசம் பித்த காசமும் நிவர்த்தியாகும்.

## கெற்பந்தரிக்க.

அரசம் விரையை பாலில் காச்சி யுண்டுவந்தால் நீர்கடுப்பு மேகசிலுமிஷம் தீரும். இதை மண்டக்கணக்காக பெண்கள் சாப்பிட்டுவந்தால் கெர்ப்பந்தரிக்கும். கெர்ப்பந்தரிக்க அனுபோகமான எண்ணைமுறை (பார்வதீ பரணீயத்தில்) சொல்லியிருக்கிறது.

## மேகசூட்டுக்கு.

அரசம் கொழுந்தை பாலில் அறைத்து காலை மாலை சாப்பிட்டு வந்தால் மேகச்சூடு முதலியவை தணியும். தைரியமுண்டாகும்.

## பெரும்பாடுக்கு

அரசமரத்தின் சமூலமாவது பட்டையாவது கொண்டுவந்து உலர்த்தி அரிசி இரண்டு பங்கும் ஷை பட்டை தூள் ஒருபங்கும் எடுத்து இடித்து மாவாக்கி களிகிளறி தின்றுவந்தால்பெண்களுக்குண்டாகும் பெரும்பாடு வியாதிதீரும்.

## ரசமருந்தை முறிக்க.

அகத்திக் கீரையும் மிதிபாவைப் பிஞ்சும் சமனுயெடுத்து இடித்து எட்டுக்கொருபங்காய் கிஷாயம் வைத்து கொடுத்து வந்தால் (ரசமருந்தினால்) உண்டான கெடுதிகளும் முக்கு வியாதியும் தீரும்.

## வாய்புண்ணுக்கு.

அகத்திக் கொழுந்தை சூரியஉதயமாகுமுன் ஒருபிடி யெடுத்து மென்று தின்று வந்தால் வாய்ரிணம் வாய்புண்ணு யாவும் தீரும் சூடுதணியும்.

## சூட்டுக்குதைலம்.

அகத்திக் கீரைசாரும் நல்லெண்ணையும் சமனுய்க்கூட்டி அடுப்பிலேற்றி வெந்தியத்தை பாலில் அறைத்துப்போட்டு தயிலபதமாய் காச்சியிரக்கி தலைமுழுகிவந்தால் சகலசூடும் தணியும் தேகம் குளிர்ச்சியுண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## வெட்பந்தணிய

அகத்திப் பூவில் ஒருபலம் எடுத்து இரண்டு பலம் பசும் நெய்யிற் பேட்டு கால்விராகனிடை குங்குமப்பூ விழைத்துக் காச்சி இறக்கி அந்தி சந்தி இருவேளையும் கொள்ள, புகையினாலும் அனலினாலும் உண்டாகிய வெட்பம் பித்தம் தணியும்.

## உடம்பெரிவுக்கு

அகத்திவேர் ஒருபங்கு, மிளகு கால்பங்கு, அதிமதுரம் கால்பங்கு, இவை இடித்து கிஷாயமிட்டு இருவேளையும்புசித்து வந்தால், ஆண்குறி-எறிவு-பெண்குறி எறிவு-ஐம்பொரி எறிவு கைகால் எறிவு இதுகள் தீரும்.

## பித்தமயக்கத்திற்கு

அகத்திக் கீரையை யாவரேனும் வாரத்திற் கிருமுறை சமைத்து உண்டியோடு உபயோகித்து வந்தால், பித்தம்-பித்தாதிக்கம்-பித்தமயக்கம் இவை அணுவேனும் அணுகாது.

## மேகவெள்ளைக்கு

அருநெல்லிக்காய் என்னும் சிறுநெல்லிக்காய் சாறும், பச்சை திராட்சி சாறும்-வெள்ளைவெங்காயச்சாறு மூன்றும் சமயிடை கலந்து, படிகாரபஸ்பம் இரண்டு சிட்டிக்கை கலந்து, சக்கரை மூன்றுசிட்டிக்கைப் போட்டுக் கலக்கி சாப்பிடவும். ஊஷ்ணவெள்ளை மேகவெள்ளை தீரும்.

## வாந்திநிருத்த

அருநெல்லி வேரும், துத்திப்பூவு-அதிமதுரம் இவைகிஷாயம்வைத்து கொஞ்சம் தேன் விட்டுக் கொடுக்க வாந்தி கட்டும்.

## பித்தசாந்தி

அறுநெல்லியை வடகம்செய்து வைத்திருந்து, துவையல் முதலியகார சாரத்துடன் உபயோகித்து வந்தால், பித்தசாந்தியும் தேகக்குளிர்ச்சியும் நேத்திரப்பிரகாசமும் உண்டாகும்.

## வாந்திநிற்க

அரு நெல்லிக்காய் வற்றலும், சீரகமும் நெல்பொரியும், திப்பிலியும் கூட்டிகியாழமிட்டு கொஞ்சம் சக்கரையிட்டுக் கொடுக்க வாந்திநிவர்த்தியாகும்.

## காமாலைக்கு.

அருநெல்லி யிலையை ஒரு புன்னைக்காயளவு அரைத்து, கால்படி புளித்த மோருடன் கலந்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் காலையில் கொடுக்க காமாலை தீரும். வெள்ளாட்டுப்பால் விட்டு சாதம் தின்னவேண்டும் – உப்பு கூடாது.

## தினவுநிற்க

அம்மான் பச்சரிசி என்னும் மூலிகையும் கொஞ்சம் வசம்பு, இந்துப்பும் கூட்டி அறைத்து உடம்பிற்றேய்த்து குளித்தால், தினவு-தடிப்பு உடனே மாறிவிடும்.

Digital collection of Tamil Heritage Foundation



## தேக தடிப்புக்கு

அம்மான்பச்சரிசியை புன்னைக்காயளவு அறைத்து, பசும்பாலிலாவது ளிப்புதயிருடனாவது கலந்து காலையில் சாப்பிட்டால், தேககாந்தல்- மேகத்த ப்பு-மலக்கட்டு இவைகள் தீரும்.

## ரசம் கட்ட.

அம்மான் பச்சரிசியை அறைத்து குகைசெய்து, சூதகத்தை கிறமப்படி த்திசெய்து உருக்கினால் கட்டிவிடும்,

## சீதம் விழுவதற்கு

அழிஞ்சிவேர் பட்டையை காயவைத்திடித்து, அதை வென்னீரில் அ றைத்துக் கொடுத்தால் சீதம் விழுவது நின்று விடும்,

## சிலேத்து ஜன்னிக்கு.

அழிஞ்சி வேர்- சித்திரமூலவேர்- செவியம்- பேராமுட்டி-முருங்கைப் ட்டை-பூசினிவேர்-வகைக்கு-வ-பலம் எடுத்து படிதண்ணியில் போட்டு எட் க்கொன்றாய் காச்சி வடித்து கொடுக்கவும். அதிக வேர்வை-வெருப்பு- மயக் ம்-நாக்கு வழுவழுப்பு-மலஜெலம் வெளுப்பு முதலிய சேத்துமஜன்னி தீரும்.

## ரிணங்களுக்கு

அண்ணெரிஞ்சான் பூண்டு சமூலமும், அழிஞ்சிவிளையும் கார்கோலரிசி துகளை குழித்தயிலமிறக்கி ரிணங்களுக்குத் தடவ உலர்ந்துவிடும்.

## கரப்பான்வியாதிக்கு

அப்பைக் கோவைக் கிழங்கை கொட்டைப்பாக்களவு எடுத்து பசும்பா லில் அறைத்துக் கொடுக்க, மூலக்குத்து-கடிவிஷம்-கரப்பான் வியாதிகள் தீரு புளிப்பும் கரப்பான் பதார்த்தங்களும் நீக்கி பத்தியயிருக்கவேண்டியது.

## அஸ்தி சூட்டுக்கு

அப்பைக்கிழங்கு-4-பங்கும், சுக்கு திப்பிலி-மிளகு-சீரகம்-சோம்பு-அதி மதுரம்-பெருங்கிழங்கு இவைகளசேர்ந்த சூரணம் ஒருபங்கும்கூட்டிசரியிடைச் சக்கரைக் கலந்து பிரதிதினம் துட்டிடை கொடுத்து வந்தால், அஸ்திசூடு-அழற் றுகணம்-இரத்தகணம்-கணச்சூடு-சுழிகணம்-மகாகணம் இவை தீரும்.

## வங்கம் நீற்ற

அலரிச் செடியின் சமூலத்தை கத்தையாகக் கட்டிக்கொண்டு வங்கத் தை கிறமப்படி சுத்தி செய்து, இரும்புக் கடாயில் உருக்கி (மேற்படி) கத்தை யினால் வருத்துக்கொண்டு (அதாவது) கடைந்துக்கொண்டிருந்தால் வங்கம் பஸ் பமாகும்.

## சிரங்குக்கு

அலரிச்செடியின் சமூலமும் கடுக்காயும் சுட்டுக்கரியாக்கி நல்லெண்ணை-

Digital collection of Tamil Heritage Foundation



அல்லது வேப்பம் எண்ணெயில் குழைத்து சிரங்குகளுக்குத்தடவ உலர்ந்துப் போகும்.

### விந்து கட்ட

அமுக்கனுங் கிழங்கை வஸ்திரகாயம் செய்து கால்படி பசும்பாலுக்கு அரைபலம் கிழங்கு போட்டுக் காச்சி சக்கரை யிட்டு குடிக்கவும். இப்படி இரு வேளையும் உட்கொண்டு வந்தால், விந்து கட்டும்-தேகம் புஷ்டியாகும் - அழகு கொடுக்கும் - தேகத்திலுள்ள சூலை - கரப்பான் - கபம் - வெட்டம் -- தாபீர் யாவும் தீரும்.

### தாது புஷ்டிக்கு

அமுக்கனுங்கிழங்கு-நீர்முள்ளி வித்து-குருந்தொட்டிவேர் சமஙிடை எடுத்து, பசும் வெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும். இப்படி இருவேளையும் 20 - நாள் சாப்பிட தாதுவிருத்தி யுண்டாகும்.

### வலிப்புகளுக்கு

அவுரியிலை-வசம்பு-உள்ளி-இம்மூன்றும் சமனிடை எடுத்து சிதைத்து, நாசியில் நசியம் செய்தால், ஜன்னி-புரயிசுவு-வலி-கழுத்துவலி இதுகள் தீரும்.

### விஷமோச திருக்கநசியம்

அவுரியிலை-தும்பையிலை-வசம்பு-மிளகு-ஜள்ளி-பெருங்காயம்- இதுகள் சரியிடை யெடுத்து, சிறுநீர் விட்டுயிடித்து, மூக்கிலும் கொஞ்சம் தடவி முகரச்செய்து காதிலும் விட்டால் எந்த விஷமானாலும் சிரசுக்கு ஏராது. மருந்து கொடுக்குமளவும் தாங்கும். இந்த விஷவயித்சியங்களை விபரமாய் பார்க்கவேண்டியவர்கள் (பார்வதீ பரணீயமென்னும் சாஸ்திரத்தில்) நன்றாய் தெரிந்துக் கொள்ளலாம்.

### தேக அனலுக்கு

அதிமதுரம் அரைபலம் எடுத்து வெந்நீர்விட்டரைத்துக் கொடுக்கவும். இப்படி அந்தி சந்தி இரண்டு நாள் கொடுக்க, தேகம் எவ்வளவு அனலாயிருந்தாலும் தணியும்.

### சூட்டிருமலுக்கு.

அதிமதுரம்-கடுக்காய்-மிளகு மூன்றும் சமஙிடை எடுத்து இளம் வருப்பாய் வறுத்து சூரணம் செய்து, ஒருவேளைக்கு துட்டிடை சூரணம் எடுத்து தேனில் குழைத்துக் கொடுக்க சூட்டிருமல் நிவர்த்தியாகும்,

### காசஸ்மூர்ச்சைக்கு

அரிசித்திப்பிலியை ஆர்க்கப் பொடிசெய்து, கால்பலம் சூரணத்தை கால்படி பசும்பாலில் போட்டுக் காச்சிக் குடிக்க,காசம்-வாயுவு-மூர்ச்சை-ஜன்னி-சாந்தியாகும்.

### ஈளை இருமலுக்கு

அரத்தையைப் பொடித்து பாலில் உபயோகித்து வந்தால், ஈளை-இருமல்-நீர்தோஷம்-வாயுவு-பீனிசம் இவைகள் நிவர்த்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### நாவரட்சிக்கு.

அக்கிராகாரத்தைப் பொடிசெய்து பாலில்போட்டுக்காச்சிஉட்கொண்டு ..தால், நாவரட்சி–தாகம்–ஜன்னி–தோஷம்–வாந்தி– கபம்–இவைகள் நிவர்த்தி ..கும்.

### கெற்பவதிகளுக்கு உதிரங்கண்டால் சாந்தி.

அதிமதுரம்–1–சீரகம்–1–இடைகளாக எடுத்து இடித்து முக்காற்பலம் ..றையில் எடுத்து, கால்படி ஜெலத்திலிட்டு அரிக்கால்படி கியாழமாக யிறக்கி ..லையில் கொடுக்கவும். இப்படி–3–நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

### சயித்தியத்திற்கு

அரிசித்திப்பிலியை இடித்து வஸ்திரகாயம் செய்து, கம்மாரு வெற்றி ..ச்சாறும் தேனும் கலந்து திருகடி சூரணம் குழைத்து சாப்பிட, சயித்தியம் ..காழை–சுரம்–இதுகள் தீரும்.

### மஞ்சள் காமாலைக்கு

அதிமதுரம்– சங்கம்வேர்ப்பட்டை– ஓர்நிறையாய் எடுத்து, எலுமிச்சம் ..ழச்சார் விட்டு மூன்றுநாள் அறைத்து, தேத்தாங்கொட்டையளவு மாத்திரை ..செய்து, முலைப்பாலிலாவது, பசும்பாலிலாவது மூன்றுநாள் கொடுக்க, மஞ்சள் ..ாமாலை நிவர்த்தியாகும்.

### ஆண்குறி கெட்டிப்படுவதற்கு.

அபினி–அக்கிராகாரம்–மருதோன்றி விறை இதுகள் சமனிடை எடு ..து தேன்விட்டறைத்து ஆண்குரியின்மேல் பைத்து போடுவதுபோல் தடவி ..வரவேண்டியது. இப்படி–15–நாள் தடவினால் ஆண்குரி பெருத்தும் நீண்டும் ..ன்றாய் கெட்டிப்படும். தாதுபுஷ்டியைப்பற்றி விசேஷமான அனேகமுறைகளை (பார்வதீபரணியத்தில்) சொல்லியிருக்கிறது.

### பல்லுநோய்க்கு

அபினி–குண்டுமணியளவு எடுத்து, அத்துடன் துட்டிடை கற்பூரம் பூ ..ட்டி இரண்டையும் நன்றாய் ரேகித்து, ஈரு வீக்கம்–அல்லது நோய் கண்டிருக் ..கும் பல்லின்மீது பில்லையாய் வைத்திருந்து காலையில் துப்பிடவும். இப்படி இரண்டுநாள் செய்ய சௌக்கியமாகும்.

### சஞ்சீவி மூலிகை.

அழுகண்ணிச்செடியை ஆதிவாரத்தில் சந்திரன் கடகராசியில் இருக்கும்போது தன்னுடையநிழல் செடியின்மேல்படாமல் பிடிங்கிவந்து ஐந்துநாள் இராத்திரிகளில் பனியில்வைத்துயெடுத்து நிழலில் உலர்த்தியிடித்து வஸ்திரகாயம்செய்து ஒரு வேளைக்கு ஒருவிராகநிடை சூரணம்யெடுத்து அதற்கு சமபாக ..ம் நற்கண்டுதூளும் தேனும்சேர்த்துயிழைத்து சாப்பிட்டுவந்தால் தேகபுஷ்டியு

Digital collection of Tamil Heritage Foundation



ண்டாகும் தாதுபுஷ்டியுண்டாகும் பசியதிகரிக்கும் சகலரோகங்களும் தீரும்இ ஞல் ஒருபொல்லாங்குமவாராது இந்த அழுகண்ணிச்செடியின் நிரமும் குண யம் இலைகளின்அளவும் இது இருக்கும்படியானயிடமும் அதினுடைய ரூபா முபம் (பார்வதிபரணியமென்னும்) சாஸ்திரத்தில் பார்த்துக்கொள்ளவும்.

## குத்தல்குடைச்சலுக்கு.

அரத்தை-சுக்கு-திப்பிலி-வகைக்கு கால்பலம் இவையிடித்து கிஷாய வைத்து எட்டொன்ருகக்காய்ச்சி யிரக்கும்போது நொச்சிலியிலே ஒருபிடிவதை க்கி துட்டிடைசாருபிழிந்து வடிக்கட்டிகொடுக்கவும் இப்படி காலை மாலை இரு வேளையும் 3-நாள்கொடுக்க கைகால்குத்தல் குடைச்சல் சுரம் இதுகள் தீரும்.

## பித்தத்திற்கு,

அகத்திக்கீரை இரண்டுபிடி எலுமிச்சம்யிலேபத்துபிடி தனியாபலம் 2 இருவகையிலேயும்யிடித்து தனியாவும்கலந்து மூன்றுபடிஜெலம்வைத்து அரை ப்படிகிஷாயமாக யிரைக்கி ஆறுபாகமாக்கி மூன்றுநாள் யிருவேளையும்கொடு கவும் சகலபித்தமும் நிவர்த்தியாகும்.

## இளைத்தஉடம்புக்கு.

அயக்கம்பியை சிவக்கக்காச்சி பசும்மோரில் தோய்த்து சாதத்திற்கும் வேண்டியபோது தாகத்திற்கும் உபயோகித்து வந்தால் பழய சுரம் தாகம் சகல கழிச்சல் பழயபேதி இவைகள்நிவர்த்தியாகும்.

## மயிற்வேண்டாதஇடத்திற்கு.

அரிதாரம் இரண்டுபங்கு சுண்ணும்பு ஒருபங்கு இவ்விரண்டும்சேர்த்து தண்ணீர்விட்டறைத்து மயிர்வேண்டாதயிடத்தில் சந்தணம்பூசுவதுபோல் நன் ருய்தடவி சற்றுநேரம்பொறுத்து கழுவிப்போடவும் உதிர்ந்துவிடும்.

## வயற்றில் இரந்தபிள்ளை கீழேவிழ.

அதிமதுரம் தேவதாரம் வகைக்குப்பலம் 1-வென்னீர்விட்டரைத்துக் கலக்கி இரண்டுவேளை உன்ளுக்குக்கொடுக்க பிள்ளைகீழேவிழும்.

## பேதிக்கு.

அதிமதுரம் 32-விராகநிடையும் திராட்சி உப்பு 8-விராக நிடையும் இரண்டும் இடித்து கிஷாயம்வைத்து வடித்துக்கொடுக்கபேதியாகும்.

—○○※○○—

இந்த மூலிகை மர்ம்மத்திற்குத் தாய்நூலாகிய பார்வதீ பரணியமென்னும் சாஸ்திரத்தை சகலமான வெளிநாட்டிலு ள்ளவர்கள் யாவரும் பிரஜைதாரமாய் கையில் வைத்திருக்க வேண்டியதவசியம்.

Digital collection of Tamil Heritage Foundation



# ஆ

### பால்உண்டாக.

ஆலம் விழுதும் ஆலம்விரையும் சமன்கொண்டு பாலில் காச்சியுண்டால்
லில்லாதபெண்களுக்குப் பால் உண்டாகும் முகத்தேஜசு உண்டாகும்.

### இரத்தக்கக்கலுக்கு.

ஆலம்விரையும் அரசம்விரையும் பாலில் அரைத்துக் கலக்கி உண்டுவந்தால் இரத்தம் கக்கல் நிவர்த்தியாகும்.

### நரம்புக்குத்தலுக்கு.

ஆளிவிரையைபாலில்கொள்ள வீக்கம் வாந்தி வலி வாயுவு நரம்புகுத்தல் அழலை ஒக்காளம் இவை நிவர்த்தியாகும்.

### சிலந்திவீக்கத்திற்கு.

ஆளிவிரையை முலைப்பால்விட்டரைத்து வெண்ணையில் மத்தித்துசில
தி வீக்கம் இதுகளில் தடவ வற்றிப்போகும்.

### ஆண்குறியெரிவுக்கு.

ஆவாரைப்பஞ்சாங்கத்தை பசும்பாலில் ஒருமண்டலம் கொள்ள நீரிழிவு
ரமேகம் ஆண்குறியெரிவு இவைநீங்கும்.

### கற்றாழைநாற்றத்திற்கு.

ஆவாரைப்பஞ்சாங்கச்சூரணம் மூன்றுபங்கும் கோரைக்கிழங்கு கிச்சிலிக்கிழங்குசூரணம் ஒருபங்கும் கூட்டி தினந்தோரும் உடம்பிற்கு தேய்த்து குளித்துவந்தால் கற்றாழைநாற்றம் தீரும்.

### பிரமேகத்திற்கு.

ஆனைநெருஞ்சி சமூலத்தையிடித்து தயிர்விட்டரைத்து தயிரிற்கலக்கி அதிகாலையுண்டுவந்தால் பிரமேகம்வெள்ளை தீரும்.

### சுவாசகாசத்திற்கு.

ஆடுதின்னாப்பாளையிலையை உலர்த்திபொடியாகக்கத்தரித்து புகலையில் வைத்து சுருட்டுசுத்தி புகைபிடித்தால் சுவாசகாசம் நிவர்த்தியாகும்.

### மேகவாய்வுக்கு.

ஆடுதின்னாப்பாளை பத்துபங்கு மிளகு ஒருபங்கும் கூட்டி அறைத்து மாத்திரைசெய்து இருவேளையும் தின்னுவந்தால் மேகவாய்வுகள் நிவர்த்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## நீர் உடைக்க.

ஆ தண்டமாயிலையை ஆவின்மோருவிட்டு அறைத்து ஊரவைத்துப ்த்து வேளைக்கு அரிக்கால்படிசாறுகொடுக்க நீர்க்கட்டை உடைக்கும்.

## நேத்திரமரைப்புக்கு.

ஆ தண்டம்யிலை ஒருகுத்துயெடுத்து கால்படிநல்லெண்ணெயில் இட் வேப்பிலைபோல் பொரியும்படி காச்சிவடித்து தலைமுழிகிவந்தால் நேத்திர வுண்டானபித்த மரைப்பு பித்தநீர் இவைகள் தீரும்.

## சகலவியாதிக்கு அடுத்தது.

ஆ தண்டம்காய் வற்றலிட்டு உண்டியுடன் உபயோகித்துவந்தால் ெ பித்தரோகங்களைக் கண்டிக்கும் சகலபத்தியத்திற்கும் உபயோகிக்கலாம்.

## சந்தி ஜன்னிக்கு.

ஆடாதோடை, சிறுவழுதலை, தூதுவளை, நன்னாரிவேர், சித்தாமுட் சுக்கு, பற்பாடகம், கோரைக்கிழங்கு, சந்தனம், இலுப்பைப்பூ வகைக்குப்ப அறையெடுத்து இரண்டுபடி ஜெலத்திலிட்டு அரிக்கால்படியாய்காச்சி கொ துவர உடம்பு வெதுப்பு தலைவலி அடிக்கடி யெழுந்திருப்பதுகண்சிவப்புஅரி மயக்கம் முதலியஜன்னிதீரும்.

## கபாலவலிக்கு.

ஆ தேதிண்ணைப்பாளைசாறு வ-படி நல்லெண்ணை அறைப்படிகலந்து பெ குபதமாய்க்காய்ச்சி வாரத்திற்கிருமுறை தலைமுழுகிவந்தால் மண்டைக்குத் பீனிசம் சிரபாரந்தீரும்.

## இரத்தபிரமியம்.

ஆ வாரையரிசி பலம் 1-நற்சீரகம் சந்தனம் சக்கரை வகைக்கு களஞ் க-இவைகளை எலுமிச்சம்பழச்சார் விட்டரைத்துக் கலக்கி மூன்று வேளை கொடுக்க கைகால் அசதி உடல் ஊஷ்ணம் ரத்தபிரமியம் தீரும்.

## இதுவுமது.

ஆ வாரைவேரின்பட்டை விஷ்ணுகாந்தி வகைக்கு ஒரு யெலுமிச் காய் பிரமாணம் அறைத்து பசும்பாலில் கலக்கி மூன்றுநாள் கொடுக்க ர பிரமியம் தீரும்.

## மூக்கில்ரத்தம்வருவதற்கு.

ஆடாதோடையிலைச்சாறும் தேனும் சமனிடைகலந்து ஒருபலம் யெ த்துக்கொடுக்கவும் இப்படிமூன்றுநாள் கொடுக்கவும் வாயாலும் மூக்கினும் இரத்தம்வருவது நிவர்த்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## இரத்தயிருமலுக்கு.

ஆடாதோடையிலையும் ஆதுவேளையிலையும் இடித்து பிட்டவியல்செய் துபிழிந்தசாறு உழக்கு இதில் கோஷ்டம் திப்பிலி சாம்பிராணிவகைக்கு அரை விடாகனிடை வெதுப்பியிடித்து தூள்செய்துக்கலக்கிக் கொடுக்க இரத்தயிருமல் தீரும்.

## அறையாப்புகட்டிக்கு.

ஆடுதின்னாப்பாளை சமூலம் வசம்பு இரண்டும்சமனிடை யெடுத்து நன் ருயிடித்து கட்டியின்மேல் பில்லையாகவைத்து அந்த அளவுக்கு பானையோட் டைவட்டமாக் நருக்கி அதின்மேலேவைத்து கட்டிவைக்கவும் இப்படி மூணு கட்டுகட்ட அறையாப்புக்கட்டிகரையும்.

## காமாலைசோகைபாண்டுவுக்கு.

ஆவின்பால் ஆவின்தயிர் ஆவின்கோமியம் ஆவின்சாணிப்பால்வகைக்கு ஆழாக்கு இதற்குசமனிடை நல்லெண்ணெய்க்கலந்து தயிலபதமாய்காச்சி ஸ்நானம் செய்துவந்தால் காமாலை சோகைபாண்டு இதுகள் நிவர்த்தியாகும்.

## 18-எலிகடிக்கும்சாந்தி.

ஆதளைசமூலத்தை பால்விட்டரைத்து பாலில் கலக்கிக் கொடுத்து வந் தால் பதினெட்டுயெலிவிஷமும் நிவர்த்தியாகும் (பார்வதிபரணியம் என்னும் விஷவயித்தியசிந்தாமணியில்) சகலவித சர்ப்பங்களுக்கும் நட்டுவாக்காலி தேள் வண்டு நாய் பூனை எலிமுதலிய எல்லாவிஷத்திற்கும் அந்தந்த விஷக்கடியின் அடையாளத்துடன் மருந்துகளும் மந்திரங்களும் சொல்லியிருக்கின்றது யாவ ரும் எளிதில் தெரிந்துக்கொள்ளலாம்.

## இரத்தகாசத்திற்கு.

ஆலம்விரை அத்திவிரை நிலைப்பனைக்கிழங்குநாவல்பட்டை அரசம்விரை முருங்கைபூ ஆதளம்பூ இவைகளையிடித்து சூரணித்து அதிகாலையில் திருகடி சூரணம் யெடுத்துதேனிலாவது நெய்யிலாவது குழைத்துச் சாப்பிட்டு வரவும் இரத்தகாசம்தீரும்.

## நீரிழிவுக்குசாந்தி.

ஆவாரங்குரு கல்மசம் கொன்றைப் பட்டை மிளகு இவை சமன் கொண்டுயெட்டுக்கொன்றாய்விடையாயிட்டுகாச்சிக்குடிக்க நீரிழிவுசாந்தியாகும்

## உள்மூலத்திற்கு.

ஆவாரங்கொழுந்து [illegible] பட்டை [illegible] அருகன்வேர் இவை களை [illegible] சமனிடையெடுத்து சூரணித்து திருகடிபிரமாணம் பசும் நெய்யில் குழைத்துசாப்பிடவும் [illegible] உள்மூலம் கரைந் துபோகும் இச்சாபத்தியம்.

Digital collection of Tamil Heritage Foundation



### மூளைமூலக்கடுப்புக்கு.

ஆவாரங்கொழுந்தை சட்டியிலிட்டு விளக்கெண்ணை தெளித்து வறுத்துசீலையில் வைத்து ஒத்தடங்கொடுத்தால் மூளை மூலத்தின் முளை கருகும் அதனுடைய கடுப்பும் ஊரலும்தணியும்.

### சாதாரணவிருமலுக்கு.

ஆனைதிப்பிலியை இடித்து வஸ்திரகாயம்செய்து தேனில் குழைத்துச் சாப்பிட விருமல் யீளை கபம் வாய்வு இதுகள்தீரும் ஜீரணசக்தியுண்டாகும்.

### மூலமுளைவெளிவர.

ஆகாசத்தாமரையிலையை உலத்திபிடித்து வடிகட்டின தூளும் கருங்குருவையரிசிமாவும் ஒன்றாய்க்கலந்து பிட்டவியல் செய்தெடுத்து நல்லெண்ணை விட்டுப்பிசைந்து உள்ளுக்குக்கொடுத்துவிட்டு மாதுளங்கொழுந்தை காடியில் அவித்து மூலத்தில்வைத்துக் கட்டினால் முளை விழுந்துவிடும்.

### விஷசுரத்திற்கு.

ஆடாதோடையீர்க்கு நிலவேம்புயீர்க்கு சீந்தில்தண்டு பேய்ப்புடல்பேய்பீர்க்கன்வேறு வெட்பாலையரிசி வகைக்குப் பலம் கால் – இரண்டுபடி தண்ணி வைத்து ஆழாக்குகிஷாயமாகயிரக்கிக்கொடுக்கவும் விஷம்யேருவதுபோல் ஜிலுஜிலென்று யேருகிரவிஷசுரம்தணியும்.

### குளிர்சுரத்திற்கு.

ஆடாதோடை தூதுவளை பற்பாடகம் பங்கம் பாளை சிறுவழுதலைசுக்கு சந்தனம் நன்னாரி வகைக்கு கால்–பலம்யெடுத்துயிடித்து 2–படி தண்ணீர்விட்டு கால்படியாக வற்றக்காச்சியிருத்து கொடுக்க குளிர் சுரம் நிவர்த்தியாகும் (பார்வதிபரணியமென்னும் சாஸ்திரத்தில்) சொல்லியிருக்கும் சர்வசுர மாத்திரை கொடுத்து இந்தகிஷாயம்கொடுத்தால் அருபத்திநாலு சுரத்தில் எந்தசுர மானாலும் உடனே தீரும்.

### கருவழலை- தண்ணிப்பாம்பு முதலிய
### சில்லரை விஷத்திற்கு.

ஆடுதீண்டாப்பாளைவேறு கவுதும்பைவேறு வெள்ளெருக்குவேறு மருக்காரைவேறு இவைகள்சமநிடையெடுத்து அரைத்து உடம்பில் பூசி முருக்கித்துவட்டினால் மேற்படிவிஷங்கள் தீரும்.

### இதுவும்-விஷத்திற்கு.

ஆனைநெருஞ்சியிலையை சிறுநீர்விட்டுயிடித்து சாறுபிழிந்து சுமாறு அரிக்கால்படி உள்ளுக்குகொடுத்தால் மேற்படிவிஷங்கள் நிவர்த்தியாகும் (பார்வதிபரணியம்) என்னும் சாஸ்திரத்தில் சகலவிதசர்ப்பத்திற்கும்ஜாதி,நிரம்,குரி,

Digital collection of Tamil Heritage Foundation



டிகளின் அடையாளமும் அதற்கு அனுபோகமான மருந்துகளும் வெகு விபர
ாய் சொல்லியிருக்கிறது.

## முள்ளுவெளிப்பட

ஆத்துநண்டைப் பிடித்துயிடித்து முத்தையாக்கி காலில்முள்ளுதைத்த
இடத்தில்வைத்துக் கட்டி மருதினம் அவிழ்க்க முள்ளுவெளியில்வந்துவிடும்.

## குதிக்கால்வெடிப்புக்கு.

ஆத்துநண்டையிடித்து பில்லைதட்டிக் காயவைத்துச் சுட்டு அந்த சாம்
பலை தேன்விட்டிழைத்து குதிக்கால் வெடிப்பு ஆசனவெடிப்பு இதுகளுக்கு 2-
3-வேளைதடவ வெடிப்புகள் மாறிவிடும்.

## வயற்றுக்கடுப்புக்கு.

ஆலம்விழுதை யெருமைத் தயிர்விட் டரைத்து ஒருபலம் எடுத்து எலு
மிச்சம்பழரசம் ஒருபலம்விட்டுக் கலந்துகொடுக்கவும் இப்படி 2-3-வேளைகொடு
க்கவயிற்றுக்கடுப்புதீரும்.

## ஆசனக்கடுப்புக்குப்புகை.

ஆமையோட்டை யிடித்து பொடிசெய்து நெருப்பில்தூவி அந்த புகை
யை அபானத்துவாரத்திற் பிடிக்க ஆசனக்கடுப்பு உடனேதீரும்.

## ஆண்குறிபுண்ணுக்கு-வீக்கத்திற்கு.

ஆதளைப்பாலை ஆண்குறி தோலின்மீது உண்டாகும் புண்ணு ரிணம்
இதுகளுக்குத்தடவி அலரிப்பூவைகசக்கி அதின்மேல் வைத்துக்கட்டினால் வீக்
கவாடிப்போகும் புண் ஆறிவிடும்.

## புழுவெட்டுக்கு.

ஆனைதந்தத்தைசுட்டு பொடியாக்கி தேனில்குழைத்து புழுவெட்டினு
லாவது மற்றயெவ்விதத்தாலாவது மயிர் உதிர்ந்துபோனயிடத்தில் எட்டுநாள்
தடவிவந்தால் மயிர்முளைக்கும்.

## மயிர்கருப்பாகத்தைலம்.

ஆனைதந்தத்தின்பொடி பலம் 5-எட்டுபடி தண்ணீரில்போட்டு ஒரு படி
யாய்காச்சி அதில் ஒருபடி நல்லெண்ணைவிட்டு சவுரிங்கொடி அவுரித்தழை கர
ிசலாங்கண்ணி சிவந்தஆலம்விழுது இவைகளின்சாறு வகைக்குப்படி கால் - ஒன்
றாய்க்கலந்து பதமாய்காச்சி வடித்து சிரசில் பதமிட்டுவந்தால் மூன்றுமாதத்தில்
எட்பேர்க்கொற்றநரையும் மாறிவிடும்.

தைலபதம், எண்ணைபதம், மெழுகுபதம், இவைகளை பார்வதி பரணியத்
தில் சொல்லப்பட்டிருக்கிறது.

Digital collection of Tamil Heritage Foundation



## ஒக்காளத்திற்கு.

ஆளிவிரை 1-பலம் யெடுத்து 4-பலம் ஜலத்தில் ஒருராத்திரி ஊரவைத்துக காலேயில்யெடுத்து மல்துணியில் கொட்டிப்பிழிந்து ஒருபலம் வெள்ளேசககரைபோட்டுக் கலக்கிசாப்பிடவும் 10-நாள் சாப்பிட அருசி அழலே ஒக்காளம் நரம்புகுத்து வலி வாந்தி வீக்கம் விஷவாதம் இவைதீரும்.

## கட்டிகட்கு.

ஆளிவிறையை அறைத்து போஸ்டு ஸெரிகட்டிகளுக்குக் கட்டுவதும் உண்டு கட்டிகள்பழுத்து உடையும்.

## சூட்டுக்கு.

ஆந்து முள்ளங்கியை பில்லேபில்லேயாக அருத்து வஸ்திரகாயம் செய்த மிளகுதூளில் தொட்டுசாப்பிடவும் இப்படி காலேயில் தின்றுவந்தால் நீர் சுத்தியாகும் சூடுதெணியும் சிறுபயருடன்சமைத்து சாப்பிடுவதும் உண்டு.

## பொருமல்கழிச்சலுக்கு.

ஆமையோடு அதிவிடையம், அசமதாகம், வட்டத்திருப்பி, பாவட்டை, மிளகு, சுக்கு, சமனுய்சேர்த்து வென்னீர்விட்டரைத்து முலேப்பாலில் கொடுக்க நிவர்த்தியாகும்.

## குழந்தைகள் வளர.

ஆமணக்கெண்ணேயுடன் பேயன் வாழைப்பழத்தை பில்லே பில்லேயாக அறுத்து ஊரப்போட்டு கற்கண்டுபொடிசெய்துப்போட்டு தினந்தோரும் காலேயில் இரண்டுண்டு வாழைப்பழமும் கொஞ்சம் யெண்ணேயும்கொடுக்கவும் இப்படிவழக்கமாய் கொடுத்துவந்தால் சகலசூடும்தணிந்து குழந்தைகள் புஷ்டியாய் வளரும்.

## கட்டிகளுக்கு.

ஆமணக்கன்யிலேயை விளக்கெண்ணேதடவி அனலில் வதக்கி கட்டிகளில் வைத்துக்கட்ட பழுத்து உடையும்.

## துகையல்.

ஆமணக்கன்முத்தை மேற்றோல்நீக்கி காரசாரம் வைத்து துகையல் செய்து களாஞ்சிக்காயளவுகொடுத்தால் மலச்சிக்கல்நீங்கும் பேதியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



# இ

## கண் ஒளிவுக்கு.

இருவாட்சி சமூலத்தை பசும்பால்விட்டரைத்து புன்னக்காயளவு எடு து அரிக்கால்படி பாலிற்கலந்து காலையில் உட்கொண்டுவந்தால் கண்களிலுள் மங்கல் நீங்கி நல்ல ஒளி உண்டாகும் மூர்ச்சைரோகம் சுவாசரோகம் வர வாட்டாமல் பாதுகாக்கும் நேத்திரரோகம் தொண்ணூற்றிருக்கும் அனுபோ ானதைலமுறையை (பார்வதீபரணியத்தில்) சொல்லியிருக்கிறபடி அவரவர் சய்துக்கொள்ளவும்.

## நீர்கடுப்புவெள்ளைக்கு.

இலவம்பிஞ்சியும் இலவம்கொழுந்தும் ஒருபிடியெடுத்து பால்விட்டரை து பாலில்கலந்து காலையில் சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் சாப்பிடவும் நீர் டுப்பு வெள்ளைவிழுதல் தீரும் மேகந்தீரும் விந்துகெட்டிப்படும்.

## நமைச்சலுக்கு.

இந்துப்பு ஒருபலம் யெடுத்துபொடிசெய்து கால்பலம் வசம்புபொடிசெ து இரண்டும்கலந்து வெண்ணைபோட்டுக்குழைத்து காலையில் உடம்பில்முழு மயும் தேய்த்து பகலில் சீக்காய்தேய்த்து உடம்புகுளிக்கவும் நமை தடிப்பு சாரி இவைகள்தீரும்.

## குழந்தைகட்குமலஜெலம்கட்டிவிட்டால்

இலைக்கள்ளிவேர்ப்பட்டை 1-யிடை சுக்கு-மிளகு-உள்ளி-வகைக்கு கா யிடை இவைகளையிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு மூலைப் லிலாவது வென்னீரிலாவது ஒருகாசிடைகலந்துக் கொடுக்கவும் இப்படி மூ றுவேளை கொடுத்தால் மலம்ஜெலம் உதயமாகும் ☞ பிள்ளைகள் வியாதிசக த்திற்கும் ஒரேமாத்திரை (பார்வதி பரணியமென்னும்)சாஸ்திரத்தில் பார்த்து சய்துக்கொள்ளவும்.

## மூலகனத்துக்கு.

இலவம் பிஞ்சியும் சீரகமும் பாலில் அறைத்துப் பாலில்கலந்துக்கொடுக் வும் தீரும் இப்படி 2-3-வேளைகொடுக்கவேண்டியது.

## பெண்கள்பெரும்பாட்டுக்கு.

இலவம்பிஞ்சும் கொழுந்தும் சரியாய்சேர்த்து புளிப்புத்தயிர்விட்டு ஒ றிரண்டாயிடித்து ஒருராத்திரிவைத்திருந்து காலையில்பிழிந்து அந்தரசத்தை குடிக்கவும் இப்படி சிலதினங்கள் குடித்துவர பெரும்பாடு ரோகம் தீரும்,

Digital collection of Tamil Heritage Foundation



## பிள்ளையில்லாதவர்க்கு

இலவம் சருகையிடித்து எட்டுக்கொருபாகமாய் கஷாயம்வைத்து ஒ
வேளைக்கு இரண்டுபலம் கியாழத்திற்குக் குறையாமல் குடித்துவந்தால் பித்
பயித்தியம் இவைகளைப்போக்கிவிடும் கெற்பக்குழியை சுத்தம்செய்து கருதா
க்கச்செய்யும்.

## அதிசாரபேதிக்கு.

இலவம்பிலையைத் தனியாயிடித்து சாறுபிழிந்து அதிககாலையில் சாப்பிட
டுவந்தால் அனேகமருந்துகளால் தீராத அதிசாரபேதியை நிவர்த்தியாக்கும்.

## இஞ்சிசர்ப்பத்து.

இஞ்சியை மேல்பரணி சீவிவிட்டு துண்டு துண்டாய் அருத்து ஆரேக
ல் ரூபா இடைநிருத்து பொங்கட்பொங்கக் கொதிவரும்படிகாச்சி இரக்கி அரி
க்கால்படி ஜெலத்தில் மேற்படி இஞ்சிகளைப்போட்டு 4-மணிநேரம் ஊரவை
து வடிக்கட்டி அந்தஜெலத்தை அடுப்பிலேற்றி 75-ரூபாயிடை வெள்ளை சக்
ரையைபோட்டுக் கலக்கி பாகுபதத்தில் எடுத்து சீசாவில்வைத்துக்கொண்டு வேளை
க்கு அறை ரூபாயிடை சாப்பிட்டு வரவும் பித்த சாந்திமன்றி தயிரியம் உண்
டாகும்.

## ஈளை இருமலுக்கு

இஞ்சிச்சாறும் மாதுளம் பூச்சாறும் தேனும் சமனாய்க்கலந்து ஒருவேளை
க்கு அரிக்கால் படிவீதம் சாப்பிட்டுவர மேற்படி யிருமல் சாந்தியாகும்.

## இதுவுமது.

இண்டந்தண்டை ஊதின தண்ணீர் (அரிக்கால்படி) திப்பிலிப் பொ
திருக்டி பொரித்தவெங்காரப்பொடி மூன்றுகளஞ்சி இதுகள் ஒன்றாய்க்கூட்டி
கொடுக்கவும் சாந்தியாகும்.

## இதுவுமது

இந்துப்பும் கற்கண்டும் பொடித்து திருகடிப்பிரமாணம் ஒருவேளைக்கு
கொடுத்து கொஞ்சம் வெந்நீர்கொடுக்கவும் இப்படி 5-6-10-வேளைவரையில்
கொடுக்கவும் சாந்தியாகும்.

## பித்தசாந்தி

இஞ்சி திருகடுகு-ஏலம்-அதிமதுரம்-சீரகம்-சந்தணத்தூள் வகைக்கு
ராகனிடை 1-யெடுத்து சிதைத்து ஒருபடிதண்ணியில் போட்டு அரிக்கால் ப
யாகக்கிஷாயமிட்டிரைக்கி கொஞ்சம் சீனிகலந்துக்கொடுக்கவும் இப்படி 5-6-
வேளையில் பித்தசிலுமிஷம் சாந்தியாகும்.

## பித்தயெரிவுக்கு.

இஞ்சிச்சாறும் கழுதைப்பாலும் ஒரே அளவாய்க்கலந்து வேளையொன்
றுக்கு அரிக்கால்படி வீதம் உள்ளுக்குக்கொடுத்து ஆதளையிலையும் மூத்தெருக்க

Digital collection of Tamil Heritage Foundation



செவியும் ஒர்நிறையாயெடுத்து ஒருவருஷத்துக்காடிவிட்டு மைபோல்யிடித்து ச்சிமுதல் பாதம்வரையில் பூசிவைத்து மாலையில் நீராட்டிவரவும் இப்படிபத் நாள்செய்ய அசாத்தியமான உடம்பெரிவு தீரும்.

### எரிவாதத்திற்கு.

இலந்தன் இலையை அறைத்து காடியில்கறைத்து மத்தால்கடைந்து அதி வருகிறநுரையை உடம்பில் பூச எரிச்சல் மாறிவிடும்.

### வயற்றுநோய் அல்லதுகடுப்புக்கு

இலவுங்கப்பட்டை அறைபலம் எடுத்து எருமைத்தயிர் விட்டறைத்து ந்த முத்தையை அரிக்கால்படி பெருமைமோரில் கலந்துக் கொடுக்க வயிற்று கடுப்பு வயிற்றுநோய் தீரும்.

### அண்டவாய்வுக்கு.

இலுப்பைப்புண்ணுக்கும் சிவந்தகோழிக்காரமும் இரண்டு சுண்டைக் காயளவு யெடுத்து அறைத்து பனைவெல்லத்தில் பொதிந்துக்கொடுக்க சவுக்கிய மாகும்.

### ஆனந்தவாய்வுக்கு.

இலுப்பைப்பூ புண்ணுக்கு யெலுமிச்சங்காயளவு எடுத்து ஆழாக்கு யீரு ள்ளச்சாற்றில் ஊரப்போட்டு வெதுப்பிக்கொடுக்க சவுக்கியமாகும்.

### இளைப்புஇருமலுக்கு.

இஞ்சிச்சார் ஈரவெங்காயச்சார் எலுமிச்சம்பழச்சார் இம்மூன்றும் சமனி டை சேர்த்து வேளைக்கு ஒருபலமாக மூன்றுநாள் இருபோதும் கொடுக்க சாந் தியாகும். இச்சாபத்தியம்.

### காதில்சீழ்வருதலுக்கு.

இந்துப்பு சுக்கு இரண்டும் சமனிடை பொடி வெண்ணெயில் போட்டுக் காச்சி காதில்விடவும் இப்படி 4-5-வேளைவிடவும்.

### வாதகுன்மத்திற்கு

இஞ்சி சிவதை-சீந்தல்-நிலவாகை-கொடிவேலி-கனச்சிக்கொடி இவை கள் மூலம் முடக்கொத்தான் சமூலம் பூண்டு திருகடுகு வகைக்குப்பலம் 1-எடு த்து அறைத்து அறைப்படி சித்தாமணக்கெண்ணெயில் கலக்கி காச்சிவடிக்கட்டி ஒருவேளைக்கி ஒரு உச்சிக்கரண்டி அளவுகொடுத்துவர வாதகுன்மம் தீரும்.

### அநேகரோகத்திற்கு.

இஞ்சியை பாலில்விட்டரைத்து கெச்சைக்காயளவு யெடுத்து அரிக்கா ல்படிபாலில் கலக்கிக்கொடுக்கவும் இப்படி காலைமாலை கொடுத்துவந்தால் இரு மல்-இளைப்பு-சூலைவாதம்-குன்மசிலுமிஷம்-தாபசோபம்-மயக்கம்-பித்தம்-வாய் வு-இவைதீரும் பசியுண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## நாகசுத்தி.

இலுப்ப எண்ணெயில் நாகத்தையுருக்கி சாய்க்கவும் இப்படி பத்து தடவை உருக்கி சாய்க்க நாகம் சுத்தியாகும்.

## இருப்புசுத்தி.

இரும்பு அரப்பொடியை பீங்கானிற்போட்டு அதுமுழுகும்படி எலுமிச்சம்பழச்சார்விட்டு மூன்றுநாள் பொருத்து எடுத்துக்கழுக சுத்தியாகும் பிறகு அவிழ்தங்களுக்கு உபயோகிக்கலாம்.

## புறவீச்சுக்கு

இஞ்சிச்சாறு முலைப்பால் தேன் இவைகள் சமமாகக்கலந்து மேற்படி வியாதிகண்டவுடன் கொடுக்கவும் மிஞ்சினால் வேப்பம் எண்ணெ கொஞ்சம்விட்டுக் கொடுக்கவும் அப்படியும் மிஞ்சினால் (பார்வதீபரணியத்தில்) சொல்லியிருக்கும் சிவநாதத்தைலத்தில் ஒருதாசிடைவிட்டுக் கொடுக்க உடனேதீரும்.

புறவீச்சு என்பது நாவுதடுமாறல் பல்கிட்டுதல் திரேகத்தையும் கழுத்தையும் பின்னுக்குவலித்து யிழுக்குதல் வியர்வை முழிமாராட்டம்.

## குழந்தைஇளைப்புஇருமலுக்கு

இண்டுசமூலம் தூதளை, கண்டங்கத்திரி, வகைக்கு ஒருபிடிதிப்பிலி பூண்டு வகைக்கு துட்டிடை ஒருபடி தண்ணீரில் தட்டிம்போட்டுக்காய்ச்சி அந்திசந்தி பதமாய் கொடுத்துக்கொண்டுவந்தால் நிவர்த்தியாகும் பெரியோர்களுக்குமாகும்.

## இதுவுமது.

இண்டம்வேர், தூதளம்வேர், வகைக்குப்பலம் 1-சுக் - திப்பிலி வெந்தயம் விராகனிடை வகைக்கு அறை இடித்து ஒருபடி நீரில்போட்டுக் காச்சி வடித்து அந்திசந்தி கொடுத்துவரத் தீரும்.

## மாலைகாசத்திற்கு.

இந்துப்பு மஞ்சள் சாரணைவேர் துத்தம் இவைகளை ஓர் நிரையா எடுத்து பழச்சார்விட்டரைத்து கயறுபோல் திரித்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு முலைப்பாலில் இழைத்து கண்ணில் தீட்டிவந்தால் மாலைகாசம் கண்படலம்தீரும் இந்த-கண்வியாதிகள் 96-தொண்ணூற்றாறின் பெயரும் அதுகளுக்குமருந்துமுறைகளும் பார்க்கவேண்டியவர்கள் (திருநேத்திரசிந்தாமணி) என்னும் சாஸ்திரத்தில் பார்த்துக்கொள்ளவும்.

## விக்கலுக்கு.

இம்பூராவேரைத்தட்டி பசும்பால்விட்டு அறைத்துக்கலக்கி இரண்டொருவேளைக்கொடுத்தால் விக்கல் வயற்றிரைச்சல் பித்தம் இவை தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



ஸ்ரீ

## சீழ்மூலத்திற்கு.

ஈருள்ளி 5-பலம் எடுத்து சிறுக அரிந்து பண்ணி நெய்யில் பொரித்து ஐந்து நாள் கொடுக்க சீழ்மூலம் சவுக்கியமாகும்.

## இரத்தமூலத்திற்கு.

ஈருள்ளிச் சாறு பசும்பால் வகைக்கு அரைப்படி பசும் நெய் கால்படி ஒருபலம் அதிமதுரத்தை பால்விட்டரைத்து யாவும் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி யிறக்கி ஒருவேளைக்கு உச்சிக்கரண்டிவீதம் இருவேளையும் 5-நாள் சாப்பிட்டால் சீழ்மூலம்-இரத்தமூலம்-சாந்தியாகும். பத்தியம் -கைப்பு -புளிப்பு தள்ளவும்.

## காதுகுத்தலுக்கு

ஈருள்ளியை சிதைத்து வெதுப்பி துணியில் முடிந்து பிழிந்து இரண்டு மூன்று துளிகள் காதில்விட்டால் காதுகுத்தல் சயித்தியம் தீரும்.

## சயித்தியத்திற்கு

ஈருள்ளியை சிதைத்து 5-துளி முலைப்பால் விட்டு கசக்கிப் பிழிந்து காதின் பின்புரத்தில் தடவி அனலில் காட்டினால் சயித்தியம் காதுவலி இவை தீரும்.

## இருமலுக்குகிஷாயம்.

ஈயத்தண்டு யிலை-தூதுவேளையிலை-நல்வசங்கன் யிலை- திப்பிலி- சுக்கு- ஐந்தும் சமன் கொண்டு யிடித்து எட்டுக்கொன்றாய் கிஷாயமிட்டுக் கொடுத்து வர நிவர்த்தியாகும்.

## நீர்கடுப்புக்கு

ஈருள்ளிச்சாறு 1-பலம் பொரித்த வெண்காரம் பொடி-1-விராகனிடை இவை ஒன்றாய்க் கலந்து கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் இருவேளையும் கொடுக்கவும்.

## இதுவுமது.

ஈரவெங்காயச்சாறு அரிக்கால்படி பனங்கற்கண்டு ஒருபலம் போட்டுக் கலக்கி வடிக்கட்டிக்கொடுக்க உடனே நீர்கடுப்பு நிவர்த்தியாகும்.

## மேகத்திற்கு.

ஈச்சங்கள்ளு அதிகாலையில் உபயோகித்துவரவும், மேகம் - வெட்பம் - மேக ஒழுக்கு இவைகள் தீரும். இடைவிடாமல் சதா உபயோகித்தால் திரேகம் வீக்கமுண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## பித்தசுரத்திற்கு

ஈச்சங்குருத்து-கோரைக்கிழங்கு-வெட்டிவேர்- விலாமிச்சம்வேர்- வில்வவேர்-சித்தாமுட்டி- தாமரைக்கிழங்கு- சந்தனத்தூள்- இலுப்பைப்பூ இவை சமன்கொண்டு இரண்டுபடி தண்ணீர்வைத்து கால்படியாக கிஷாயம் வடித்து இருவேளை கொடுக்க எப்படிப்பட்ட பித்தமும் சாந்தியாகும் சுரம்தணியும்.

## கண்சதைவளர்த்திக்கு

ஈருள்ளியும் குரிஞ்சாநிலையும் சமயிடை யெடுத்து சிதைத்து கண்ணில் 4-5-துளி பிழியவும். இப்படி இரண்டொரு வேளை பிழியத்தீரும்.

## வைசூரியினால் மலஜெலங்கட்டினால்

ஈருள்ளி-கற்கண்டு வகைக்கு விராகநிடை 5- இவை இரண்டும் அரைத்து அரிக்காற்படி ஆமணக்கெண்ணெயில் கலக்கி கொஞ்ச கொஞ்சம் உட்கொண்டுவந்தால் மலஜெலக்கட்டு உப்பிசம் இவை தீரும்.

## கணக்கழிச்சலுக்கு.

ஈருள்ளி பத்துதிரி-கருவேப்பிலையீர்க்கு- ஒருபிடி- சீரகம் விராகநிடை 1-வெந்தயம் விராகநிடை 2 - இவைகளை வருத்துக் கிஷாயம்வைத்துக்கொடுக்கவும் தீரும்.

## வைசூரியினால்.ரத்தபேதிகண்டால்

ஈருள்ளியை ஆவின் நெய்யில் வேகவைத்துக்கொடுத்தால் நிவர்த்தியாகும். தேகநிடமரிந்து 3-4-வேளை வரையில் நிதானமாய் கொடுக்கவேண்டியது.

## இதுவுமது.

ஈருள்ளிச்சாறும் பசும்நெய்யும் சமனாய்க் கலந்து வீசம் படிவீதம் மூன்று பொழுது கொடுத்தால், கடுப்பு-இரத்தம்-சீதம் இவை நிவர்த்தியாகும்.

## க்ஷயத்திற்கு.

ஈனாத யெருமைக்கிடாவின் சாணிப்பாலை வடிக்கட்டி ஆவின்பாலும் நெய்யும் சமன்கலந்து அரிக்கால்படிவீதம் அந்தி சந்தி கொடுத்து வரத் தீரும். க்ஷயம்-96-ம்-சாந்தியாகும் பத்தியம் புளிதள்ளவும்.

## நேத்திரபேதி.

ஈனாத எருமை சாணிப்பாலில் சித்தாமணக்குப் பருப்பை இழைத்துக் கண்ணில் தடவ துர்நீர்கள் பாவும் நீங்கி விடும் நேத்திரம் சுத்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



# உ

## ஆமைகணத்துக்கு.

உத்தாமணி—பாவட்டை—காவட்டை—சங்கு—முருங்கை—நுணா—பொடுதலை இவைகளின் ஈர்க்கு வகைக்கு ஒருபிடி யிடித்து ஒருபடி தண்ணீர் விட்டு ஓமம்—திப்பிலி—வசம்பு—ஆமையோடு—கருஞ்சீரகம்—ஓர்நிறையாய் அறைத்து துணியில் முடிந்து கூடப்போட்டு எட்டொன்ருய் வற்றக்காச்சி ஷை மருந்தை யெடுத்து அந்த கிஷாயத்திஞல் அரைத்து களச்சிக்காயளவு மூன்றுவேளைக் கொடுக்கவும் தீரும்.

### இதுவுமது

உத்தாமணிக் கொழுந்து—வசம்பு—உள்ளி—விளாம் ஓடு · ஓமம்—ஆமையோடு வகைக்கு இருகழஞ்சி யெடுத்து யிடித்து வருத்து (விளாங்காய்ப் பிரமாணம் வெண்ணெயில்) போட்டுக் காச்சிக்கொடுக்கத்தீரும்.

### இதுவுமது

உத்தாமணி—சங்கு—தூதுவளை—கொடும்பை இவைகளின்வேர் வகைக்கு ஒருபிடி நருக்கி ஒருபடி தண்ணியில் போட்டு பொடுதலை—வசம்பு—ஓமம்—திப்பிலி—மிளகு—பூண்டு—ஆமையோடு ஓர்நிறையாய் இடித்து துணியில் முடிந்துட்போட்டுக் காச்சி மேற்படி மருந்தை அறைத்துக் கொடுத்துவந்தால் ஆமை கணம் சுரம் தீரும்.

## பிள்ளைகள்கழிச்சல்வாந்திக்கு

உத்தாமணிச்சாறு—எருமைவெண்ணெ வகைக்கு கால்படி கருஞ்சீரகம்—ஒருகழஞ்சி அறைத்துப்போட்டுக் காச்சி மேற்படி மருந்தை அறைத்துக்கொடுத்துவரத் தீரும்.

## மாந்தக்கழிச்சலுக்கு.

உத்தாமணி வேளை நாய் வேளை குப்பைமேனி இவைகளைத்தட்டிசாறு வாங்கி துட்டிடை உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கு துவாலையிடவும்.

## வாதசுரத்திற்கு.

உத்தாமனி—பாவட்டம்புல்—கொன்றை சித்தாமுட்டிவேர் ஓமம்—மிளகு—வகைக்குபலம்—கால்—இடித்து இரண்டுபடி தண்ணிர்விட்டு கால்படியாகக் கியாழமிட்டு ஆறுவேளை கொடுக்கத்தீரும்.

## திரிதோஷம்நீங்க.

உருத்திராட்சத்தைபாலில் அறைத்து உபயோகித்துவந்தால் திரிதோஷம் விக்கல் பித்தம் தாகம் இவைகள்தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## நாவரட்சிக்குக்கிஷாயம்.

உருத்திரசடையை பிட்டவியல் செய்து அந்த சாற்றில் மிளகு-லவுங்கம்-தூளாக்கிப்போட்டுக் கொடுத்துவந்தால் சுரம் தீரும். நாவரட்சி நீங்கும்.

## வெட்பத்திற்கு.

உழலத்திப்பட்டை அல்லது சமூலத்தை பாலில் அரைத்து கொடுத்தாலும், அல்லது எட்டோன்றாய் கியாழம் வைத்து சக்ரை கூட்டிக் கொடுத்தாலும் வெட்பம் சூடு தணியும்.

## அக்கிரிணத்திற்கு.

ஊமத்தன் இலையை அரைத்து வெண்ணெயிற் குழைத்து அக்கி ரிணத்தின்மேற் பூசி வர ஆரிப்போகும்.

## நீர் அடைப்புக்கு.

ஊமத்தன் இலையை வெதுப்பி அதற்கு சமன் ஏலரிசி கூட்டி தண்ணீர் விட்டரைத்து அடிவயற்றில் பைத்து பேயட்டால் முலவாய்வினுல் நீரடைப்பு கண்டால் உடனே நீர் உடையும்.

## சுவாசகாசத்திற்கு.

ஊமத்தன் இலையை நிழலிலுலர்த்தி சிறுசாய் கத்திரித்து புகலேயில் வைத்து சுவாசம் வரும்போது புகைபிடித்தால் உடனே சாந்தியாகும். அதிகமாய் உபயோகிக்கக் கூடாது.

## கட்டிகளுக்கு.

ஊமத்தன் இலையை விளக்கெண்ணெ தடவி வதக்கி கட்டிகளின் மீது வைத்துக் கட்டினுல் பழுத்து உடைவதுண்டு இறண்டு மூன்று கட்டுகட்டவும்.

## கட்டிகள் உடைய.

ஊமத்தன் இலையை அரைத்து அரிசிமாவுங் கலந்து காடிவிட்டு போஸ்டு கிளரி கட்டியில் வைத்து 1 - அல்லது 2 - கட்டு கட்ட உடைந்துப்போகும்.

## வாதநோய்க்கு

ஊமத்தன் இலையை சாராயத்தில் சற்றுநேரம் ஊரவைத்தெடுத்து வாய்வினுல் நோய்கண்டிருக்கிற யிடத்தில் வைத்துக் கட்ட வலி நீங்கும்.

## பிளவைகட்கு

ஊமத்தன்காயை சாணியில் போட்டு அடுட்பேற்றி நன்றாய் வெதுப்பி நசுக்கி பில்லைதட்டி துளிவிளக்கெண்ணெதடவி, பிளவை - விப்புருதி - கண்டமாலை முதலிய கரடு வீக்கங்களில் வைத்துக்கட்ட சவுக்கியமாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## கண் பிரிவிற்கு, புழுவெட்டுக்கு;பூவிற்கு,

ஊமத்தங்காயை விரைநீக்கி பாலில் சுத்திசெய்த பூநாகத்தை உள்ளே
ட்டு மூடி சட்டியிலிட்டு எரித்து சாம்பலாக்கி அதற்கு சரியிடை துத்தம்-
சு கூட்டி பசும்வெண்ணெ போட்டு களிம்புபோல் அரைத்துக்கொண்டு
ணில் தீட்டி வரவும் நிவர்த்தியாகும்.

## கண்குளிர்ச்சிக்கு.

ஊசிப்பாலையை அறைத்து தயிரில் கலக்கி யுண்டு வந்தால் கண்கள்
ளிர்ச்சியுண்டாகும். ஆண்குறி -துவார வெட்பம்-பிரமேகம் இவைகள் தீரும்.

## விஷம்நீங்க.

ஊமத்தன் வேறும் அதின் வித்தும் வகைக்கு ஒரு விராகனிடை யெடுத்
ஆவின்பால் விட்டறைத்துக் கலக்கிக் கொடுக்க, எலி கடி - நாய்கடி- நரிகடி
வலிய விஷங்கள் போகும்,

---

# எ

## காதில்சீழ்வருதலுக்கு.

எருக்கு-கள்ளி-இஞ்சி துளசி இதுகள் சமனுயெடுத்து சிதைத்து நல்
லெண்ணெவிட்டு முரியக்காச்சி வடித்து காதில் 2-3-துளிவிட்டு பஞ்சடைத்து
வக்கவும் சீதளபதார்த்தங் கூடாது இப்படி 2-3-நாள் இருவேளையும்விடவும்

## குழந்தைகளுக்கு சிறுநீர் கட்டினுல்.

எலிபுழுக்கையும் வெள்ளிரிவிரையும் சமன்கொண்டரைத்து அடிவயிற்
ல் பூசி வெண்காரத்தைப் பொரித்து 2-சிட்டிக்கையெடுத்து முலைப்பாலில்
லக்கி உள்ளுக்கு புகட்டவும் நீர்யிரங்கும்.

## ஒருதலைவலி மண்டையிடிக்குத் தைலம்.

எருக்கன் பழுப்புச்சாறு அரிக்கால்படி நல்லெண்ணெ ஒருபடி சுக்கு இங்
ப்பு அதிமதுரம் வசம்பு திப்பிலி திப்பிலிமூலம் வெள்ளுள்ளி வகைக்கு பல
1-இடித்துப்போட்டுக் காச்சி வடித்து தலைமுழிகிவந்தால் நிவர்த்தியாகும்.

## இதுவுமது.

எலுமிச்சம் பழச்சாறு வெற்றிலைச்சாறு பசும்நெய் நல்லெண்ணெ வகைக்
படி - அறை-கருஞ்சீரகம் பலம் இரண்டரை பொடித்துப் போட்டுக் காச்சி
டித்து, ஒன்றைவிட்டொருநாள் முழுகிவரத்தீரும்,

Digital collection of Tamil Heritage Foundation



## தேள்விஷத்திற்கு.

எட்டிக் கொட்டையை பாலில் அறைத்துக்கலக்கிக் கொள்ள தேள்நட்டுவொக்காலி விஷமும் மற்றவிஷமும் நீங்கும்.

## நீர்கட்டி புண்முறைகளுக்கு.

எட்டிக்கொட்டையை அறைத்து சிலந்தி ரெத்தக்கட்டி நீர்கட்டிபுண் படைகளுக்கு அறைத்துப் பூசினால் தீரும்,

## காயகற்பம்.

எட்டிக்கொட்டையை முதல்தினத்தில் மிளகளவு தின்று இப்படிதின்று வரும் போது நாளுக்கு நாள்பயருப்பிரமாணம் அதிகப்படுத்திக் கொண்டேவந்து கடைசியில் காலையில் 1 மாலையில் 1 ஆக வழக்கத்தில் கொண்டுவந்து மருபடியும் தினம் கொஞ்சம் குறைத்துக் கொண்டேவந்து நிருத்திவிடவும் இப்படிசெய்தவர்களுக்கு விஷபயமே கிடையாது தேள்நட்டுவொக்காலி பாம்பு முதலியவிஷ ஜெந்துக்கள் யெதுகடித்தாலும் அதுகள் இரந்துப் போகுமேதவிர தனக்குவிஷமேறாது குஷ்டவியாதிஇருந்தாலும் நிவர்த்தியாகும் வாதரோகம்தீரும் ஆனால் பித்தம் அதிகரிக்கும்,

## பாதம் எரிச்சலுக்கு

எட்டிப்பழத்தில் 7-8-கொண்டுவந்து புதுசட்டியில் போட்டு அடுப்பேற்றி வெதுப்பி தரையில்கொட்டி சூடாயிருக்கும்போதே பித்தயெரிவு பாதம்வரல் நமை முதலிய அருவருப்பு உள்ளபாதங்களினால் மிதித்து தேய்க்கவேண்டும் இப்படி 5-6-வேளைசெய்ய பாதயெரிச்சல் நீங்கும்.

## மண்டைஇடிக்கு.

எருக்கன்வேர் அதாவது அடிக்கட்டையை கொண்டுவந்து கொளுத்திக் கரியாக்கிய ஒருபலம் பொடிக்கி கால்பலம் லிங்கம்சேர்த்துஜாண் அகலமுள்ளசீலையை எருக்கம்பாலில் நனைத்து உலர்த்தி பிறகு முலைப்பாலில் மூன்றுவிசை நனைத்து உலர்த்தி அதில் மேற்படி தூளைப்பரப்பி திரிபோல்திரித்து ஒரு முனையைக்கொளுத்தி அந்தபுகையை மூக்கில்பிடிக்கவும் 5-நிமிஷம் புகைபிடித்து விட்டு தூங்கவேண்டியது மருதினம்ராத்திரி 5-நிமிஷம்பிடிக்கவும் இப்படி மூன்றுநாளைக்கும் இரவில்படுக்கும்போது 5-நிமிஷம்பிடித்துவந்தால் மண்டை யிடி மண்டைக்குடைச்சல் எப்போதும் விடாத்தலைபாரம் இதுகள் தீரும்.

## பேதிக்கு.

எருக்கம்பால் இரண்டுதுளி கொட்டைப்பாக்களவு மஸ்டு இல்லாதபுளி எடுத்து அதின்நடுவில் எருக்கம்பால் இரண்டுதுளிவிட்டுமூடி தின்று விட்டால் நன்றாய்பேதியாகும் இதுமுறட்டு உடம்புக்குத்தகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## அரையாப்புக்கட்டிக்கு.

எருக்கஞ்செடியின் வடக்கேபோகிறவேரும் களிமண்ணும் சரிபங்குவை ... அறைத்து அரையாப்புக் கட்டியின்மேல் பூசினைக்கக் கறைந்து போகும் ...படி மூன்றுநாள் பூசவும்.

## வாந்திபேதிக்கு.

எட்டிமரத்தின் வடவேரின் மேற்றோலை எலுமிச்சம் பழச்சார்விட்டரை ... காயவைத்து சூரணம்செய்து சிவன்வேம்பு தும்பைச்செடி சமூலம் இர...டும் ஒன்றாய் கிழாயம்வைத்து ஷை சூரணத்தில் மூன்றுசிட்டிக்கை போட்டு ...காடுக்கவும் பேதிநிற்காவிட்டால் மறுபடியும் கொடுக்கவும் இப்படி 3-4-வி...கொடுக்கவும் அரிசிகஞ்சி காச்சிகொடுக்கவும் பேதிவாந்தி காதடைப்பு யாவு தீரும்.

## மேகப்புண்ணுக்கு.

எட்டிப்பழம் இரண்டுகொண்டுவந்து நல்லெண்ணெயில்வருத்து அல்லது ...ாய்வேகவைத்து அறைத்து பஞ்சில்துவட்டி மேகப்புண்ணின்மேல் போட...ிப்போகும்.

## நரம்புசிலந்திக்கு.

எருக்கன் மொக்கு (60) கொண்டுவந்து பெருங்காயம் சமனிடைசேர்த்து ...றைத்து 5-வேளை அல்லது 7-வேளைகொடுக்க நரம்புசிலந்தி நிவர்த்தியாகும்.

## காது இரைச்சலுக்கு.

எருக்கன் இலைச்சார் 2½-பலம் நல்லெண்ணை 2½-பலம் வசம்பு கோஷ்ட...க்கு திப்பிலி இந்துப்பு கோரைக்கிழங்கு வகைக்கு அரிக்காபலம் இடித்து ...ாட்டுக்காய்ச்சி காதில் இரண்டுமூன்றுதுளிகளாக 2-3-வேளை விட்டுவந்தா...ரும்.

## அறையாப்புக்கு.

எலுமிச்சம்வேர் சத்திச்சாரணை இரண்டும் சமன்கொண்டறைத்து நல்...ண்ணெயில் குழைத்து கெச்சக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவந்தால் தீரும் இப் ... 3-நாள் சாப்பிடவும்.

## மூலகணத்திற்கு.

எலுமிச்சம்பழச்சாறு கத்தாழைச்சோறு வெந்தியம் சமன்கொண்டரைத் ...ாச்சிக்கொடுத்துவர மூலகணம்தீரும்.

## வைசூரியின்பேரில் சுரங்கண்டால்.

எலுமிச்சம் வேரின்பட்டை ஏலம் சீந்திற்கொடி விலாமிச்சம்வேர் பற்பா...சந்தணத்தூள் கோரைக்கிழங்கு வகைக்கு விராகனிடை 5-நாிக்கிப்போட்...டொன்றாய் கிஷாழமிட்டு முன்றுவேளைக்கொடுக்கத் தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## வயற்றுக்கிரிமிக்கு.

எலிச்செவியம் முருங்கைவேறு திரிபலை இவை நறுக்கிக் கிழாயமிட்டு ஒரு சங்களவு கொடுக்க புழுக்கள் நிவர்த்தியாகும்.

## நீர்யெரிவுக்கு.

எலுமிச்சம்பழச்சாறும் நல்லெண்ணெயும் சமன் கலந்து 1-பலமிருக்கும் படி சாப்பிட்டால் எரிவு தீரும்.

## இரத்தம்போல் நீர் இரங்குவதற்கு.

எருமைப்பால் இரண்டுபடியில் பொன்னுங் கண்ணிவேறு எலுமிச்ங்காயளவு அரைத்துப்போட்டு நன்ருய்க்காய்ச்சி புறைகுத்திக்கடைந்து வெண்ணை எடுத்து அந்தவெண்ணையை அதிகாலையில் மூன்றுநாள் சாப்பிடவும் அந்மோறை தாகசாந்தி செய்துவரவும் வியாதி தீரும்.

## சர்வசிரங்குக்கும்.

எவியாமணக்கு சமூலத்தை பழச்சாற்றில் அறைத்து வேப்பெண்ணயில் கலக்கிக்காச்சி எல்லாவித சிரங்குக்கும் தடவிவர ஆரிப்போகும்.

## நீரொழுக்கிற்கு.

எள்ளுப்புண்ணுக்கும் கோவையிலையும் சரியிடைகூட்டி அறைக்கார சேர்த்து புரட்டி ஒருகுத்துகொடுக்கவும் இப்படி மூன்றுநாள் கொடுக்க சாந்தியாகும்.

## இரத்தமூலத்திற்கு.

எருக்கன்கிழங்கும் புழுங்கலரிசியும் சரியிடை உளுந்து கால்பங்கு கூட்டி அறைத்து புளிக்கவைத்து தோசைசுட்டுக் கொடுக்க ரத்தமூலம் தீரும் இப்படி 3-நாள் அல்லது 5-நாள் இருவேளையும் கொடுக்கவும்.

## காமாலைக்கு.

எருமைசாணிப்பால் எருமைத்தயிர் இரண்டுங்கலந்து சீரகம் வெங்காயம் சமன்சேர்த்து தயிர்விட்டு அறைத்து எருமைப்பாலில் கலக்கிக்கொடுக்கவும் இப்படி 5-7-வேளைகொடுக்க சாந்தியாகும்.

## கல் அடைப்புக்கு.

எருக்கன்பூவின் மொக்கு 7-எடுத்து சுண்ணாம்புசேர்க்காமல் வெற்றிப்பாக்குடன்வைத்து தின்னவும் இப்படி 2-வேளை அல்லது 3-வேளை தின்ன கல்லடைப்பு தீரும்.

## உண்ணுக்குவளர்த்திக்கு.

எவாச்சாரம் கல்சுண்ணாம்பும் சமநிடை எடுத்து எலிமிச்சம்பழச் சாற்றில் அறைத்து பயறளவு எடுத்து உண்ணுக்கில் தடவவும் குணமாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## இருதயவலிக்கு.

எலுமிச்சம்பழம் 5-பிழிந்துக்கொண்டு அதில் குலாப்புத்தூள் சந்தனத் தூள் ஜாதிக்காய்தூள் வகைக்கு ஒரு ரூபாயிடை காவிக்கல் ஒரு விராகனிடை ட்டிக் கலக்கிவைத்துக்கொண்டு ஒருவேளைக்கு ஒருரூபா இடை புசித்துவர ம் இருதயகாபரா நெஞ்சுதுடிப்பு இதுகள் நீங்கும்.

# ஏ

## செம்மேகத்திற்கு.

ஏரழிஞ்சல்சமூலமும் கார்போகஅரிசி சித்திரைமூலம் சிறுதகரைசமூல ாரம்வித்து இவைகளைக்கிறமப்படி குழித்தயில மிரக்கிப் பூச நிவர்த்தியா

## காணுமேகத்திற்கு

ஏரழிஞ்சல் சமூலம் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திர செய்து சக்கரை சமன்கூட்டி அந்திசந்தி திருகடிபிரமாணம் தின்று மின ரயம் சாப்பிட்டுவரவும் உடம்பிலுள்ள மேகம்முதலான காணுவியாதிகள் பத்தியமில்லை.

## சொறிசிரங்குக்கு.

லம் கார்கோலரிசி கெந்தகம் கற்பூரம் பிராயன்பட்டை வகைக்குவிரா -எடுத்து பொடியாயிடித்து அரிக்கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் லையில் உடம்யில்தேய்த்து மாலையில் சிக்காயரப்புதேய்த்து உடம்புகு தீரும்.

## பருவுகளுக்கு.

ண்டயிலையை விளக்கெண்ணெதடவி வதக்கி பருவுகள் கட்டிகளுக்கு ட்ட இரண்டு மூன்று கட்டில் பழுத்து உடையும்.

Digital collection of Tamil Heritage Foundation



# ஐ

## மேகத்திற்கு.

ஐவேலியிலை அதாவது ஐவிரலிஎன்றும் பெயர் உண்டு அதைக்கொண் டுவந்து அதிகாலையில் பாலில்அரைத்துக் கலக்கிசாப்பிட்டுவந்தால் மேகம்மேக ஒழுக்கு யாவும்தீரும்.

## லிங்கம் கட்ட.

ஐவேலியின் பிரயோகத்தினுல் லிங்கத்தைசுத்திசெய்து செந்தூரித்து ரோகிகளுக்கு உபயோகித்தால் வெண்மேகம் செம்மேகம் இவைகள்தீரும் இ து பெரியோர்களால் தெரிந்துக்கொள்ளவேண்டியது.

## ஐங்கூட்டுஎண்ணை.

ஐங்கூட்டு எண்ணையினுல் ஸ்னுனம் செய்துவந்தால் ஜன்னி, சுரம், பி ன்பிசுவு, வாய்வு, ஐயம் இவைகள் நிவர்த்தியாகும் ஐங்கூட்டு எண்ணையைகூட் டும் முறை அதாவது பாகம் கணக்கு இவைகளை பார்வதிபரணியத்தில் சொல் லப்படும்.

---

# ஒ

ஒதியம்பட்டையை இடித்து புளிப்புத்தயிர்விட்டு பிசைந்து ஊரவைத் து மருதினம் இடித்து சாறுபிழிந்து கொஞ்சம்பால்விட்டுக் கலக்கிக்கொடுக்க இரத்தபேதி இரத்தக்கடுப்புதீரும்.

## கிராணிகளுக்கு.

ஒதியமரத்தின்வேரின்பட்டையை ஆர்க்கட்பொடிசெய்த தூள் கால்பல மும் கடுக்காய்ப்பூவின்தூள் 2-சிட்டிக்கையும் கலந்து பால்விட்டரைத்து பாலி ல்கலக்கிக் கொடுத்தால் சீதபேதி ரத்தபேதி கடுப்பு கிராணி இதுகள்தீரும் இ ரண்டுமூன்றுவேளை கொடுக்கவும்.

## தீராதபுண்களுக்கு.

ஒதியம்பட்டையை ஆர்க்கப்பொடிசெய்து வேப்பம் எண்ணையிற்கலந்து புண்களுக்கும் தீராதரிணங்களுக்கும் பூசிவந்தால் ஆரிப்போகும்.

## மூலச்சூட்டுக்கு.

ஒட்டுத்துத்தியை சமைத்துத்தின்றாலும் கிஷாயம்வைத்துக் குடித்தாலு சூடு மூலச்சூடு இவைகள் தணியும்.

Digital collection of Tamil Heritage Foundation



### நாதம்உண்டாக.

ஓட்டைநெய்யை உண்டியுடன் உபயோகித்து வருவதாலும் மேற்படி நெய்யினால் பலகாரங்கள்செய்து நீடித்து தின்றுவருவதால் அபரிமிதமான இந்திரியத்தை யுண்டாக்கும் (வயருமந்தப்படுத்தும் குணமுண்டு.)

### வீக்கத்திற்கு.

ஓட்டைலத்தியை சுரத்தால்கண்ட கால் வீக்கத்திற்கு மேற்படி லத்தியைக்கொண்டுவந்து புதுச்சட்டியில்போட்டு வெதுப்பி கால்களில் கனமாய் அப்பிவைத்து துணிக்கந்தையால் அழுத்திக்கட்டிவைத்து மறுதினம் காலையில்அவிழ்த்துவிடவும் இப்படி 3-கட்டுகட்டவும் தீரும்.

### காதுகுத்தலுக்கு.

ஒருதலைப்பூண்டை வெதுப்பி காதில் இரண்டொருதுளிகள் பிழியவும் தீரும் இப்படி 2-3-வேளைசெய்யவேண்டும்.

---

# ஓ

### பிரமியத்திற்கு.

ஓரிலைத்தாமறையை யிடித்துசாறுபிழிந்து கொஞ்சம் சீனிசக்கரைக்கலந்து ஒருவேளைக்கு அரிக்காற்படி வீதம் மூன்றுநாள்கொடுக்கவும் சாந்தியாகும் இச்சாபத்தியம்.

### சுக்கிலபிரமியத்திற்கு.

ஓரிலைத்தாமறையும் நற்சீரகமும் சமமாய்க்கூட்டி யரைத்து ஒருவேளைக் கொட்டைப்பாக்கு பிரமாணம் கொடுக்கவும் இப்படி 6-வேளைகொடுக்க சாந்தியாகும் இச்சாபத்தியம்.

### புள்ளின்தோஷத்திற்கு.

ஓரிலைத்தாமறை வெந்தியம் விடத்தலைவேர் சுக்கு வால்மிளகு ஓரளவாய் எடுத்திடித்து கஷாயம் செய்து கொடுத்துவரத் தீரும்.

### உஷ்ணம்நீங்க.

ஓணான்கொடி அல்லது கொழுந்து கொண்டுவந்து பாலில் அறைத்து கலக்கி யுண்டுவந்தால் வெட்பம் தணியும் வெள்ளைவிழுதலும் நிற்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



## அக்கினிமந்தத்திற்கு.

ஓமம் சுக்கு சித்திரமூல வேரின்பட்டை இவைகள் சரியிடையா யெடுத்து பொடித்து அதற்குச்சரியிடை கடுக்காய்ப்பொடி கூட்டி வஸ்திரகாயம்செய்து வேளைக்கு திருகடிப்பிரமாணம் யெடுத்து மோரில்கலக்கி புசித்துவந்தால் அக்கினிமந்தம் தீரும் பசியுண்டாகும்.

## புகையிருமலுக்கு.

ஓமம் கடுக்காய்தோல் சுக்கு திப்பிலி மிளகு அரத்தை அக்கிராகாரம் தேசாவரம் இவைகள் சமஎடைகொண்டு சூரணித்து அதிற்பாதி சக்கரைக் கூட்டி திருகடியளவு இருவேளையும் புசித்துவந்தால் நிவர்த்தியாகும்.

## வயற்றுக்கடுப்புகழிச்சலுக்கு.

ஓமம் மிளகு வகைக்குபலம் 1-சட்டியிலிட்டு வெதுப்பிக்கொண்டு வெல்லம் 1-பலம் கூட்டி அரைத்து திருபிடிபிரமாணம் 10-நாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

---

# க

## மூலச்சூடுதணிய.

கற்றாழைச் சோறும் ஆவின்பாலும் கலந்து காலைமாலை புன்னைக்காயளவு உண்டுவந்தால் மூலச்சூடுதணியும் விந்துகட்டும் சொரி நமை சோகையின்வ் தீரும்.

## வெங்கண்புள்ளிக்கு.

கற்றாழைச் சோற்றில் கடுக்காய்ப் பொடிதூவி வைத்திருந்தால் நீர்உண்டாகும் அந்தநீரில் திப்பிலியை வருத்துப் பொடித்த தூள்திருகடிதூவிக் கொடுக்கபிள்ளைகளுக்குண்டாகும் வெங்கண்புள்ளி தோஷம்தீரும்.

## திராதசூடுவெள்ளைக்கு.

கற்றாழைச் சோற்றைச்யெழுத்திரம் கழுவி புன்னைக் காயளவு யெடுத்து அதில் திருகடிசீனிசக்கறையும் ஒருசிட்டிக்கை 0 கல்நார்பஸ்பமும் வைத்து சாப்பிடவும் இப்படி காலைமாலை இருவேளையும் 10 நாள் சாப்பிட மேகவாய்வு தீரும்.

0 கல்நார்பஸ்பம் செய்யும் அனுபோகமானமுறையை பார்வதி பரணியத்தில் சொல்லியிருக்கிறது அதேப்பிரகாரம் யாரேனும் தாராளமாய்செய்துக்கொள்ளலாம்.

Digital collection of Tamil Heritage Foundation



## லிங்கவீக்கத்திற்கு.

கற்றாழைச்சோற்றை எழுதிரம் கழுவியெடுத்து கொருக்குரிணம்கண்டு ற்குமேல் வீக்கமுண்டாயிருக்கும் லிங்கத்தின்மீது ஒருராத்திரிவைத்துக்கட் ாடிட்போகும்.

## பிள்ளைகள் அடித்தள்ளினதற்கு.

கரிசலாங்கண்ணியும் பழம்புளியும் சரியிடைவைத்தரைத்து கெச்சக்கா ளவு அல்லது புன்னைக்காயளவு எட்டு நாள்கொடுக்கத்தீரும்.

## சீதசுரத்திற்கு.

கண்டங்கத்திரி சீந்தில்தண்டு தாமரைவளையம் மூன்றும் கஷாயம்வைத் சுக்கு கோரைக்கிழங்கு பொடிசெய்து கொஞ்சம்கொடுக்கவும் இப்படி 2-3 வளை கொடுக்கத்தீரும்.

## விக்கல்வாந்திசுரத்திற்கு.

கண்டங்கத்திரிவிரை அமுக்குரா சமூலம் திப்பிலி இவை சமனிடைபோ டு கஷாயம்வைத்து தேன்முலைப்பால்விட்டுக் கொடுக்கத்தீரும்.

## பல்வலிக்கு.

கண்டங்கத்திரி சமூலத்தை சுட்டுக்கரியாக்கி பொடித்துவைத்துக்கொ ண்டு அந்திசந்தி பல்துலக்கி வந்தால் பல்வலிசாந்தியாகும்.

## பீனிசத்திற்கு தைலம்.

கண்டங்கத்திரிபழம் துளசி வெற்றிலை இவைகளின் சாறு கஞ்சாகிஷ ம் நல்லெண்ணெவகைக்குபடி அறை ஒன்றாய்க்கலந்து காச்சிவடித்து தலைமுழி வர ரத்தபீனிசம் சிறாய் பீனிசம் இவைதீரும் இச்சாபத்தியம்.

## சுரத்தின்பேரில்கொடுக்கும் பேதிகஷாயம்.

கற்றாழைச்சருகு வேம்பின்பட்டை கடுக்காய் கார்கோலரிசி இவைகளை தைத்துகஷாயம்செய்துகொடுக்க இரண்டொருவிசை விரோசனமாகி சுரம் ணியும்.

## உட்சுரம்கால் எரிவுக்கு.

கற்றாழைச்சாறு நெல்லிக்காய்சாறு முசுமுசுக்கைச்சாறு வகைக்கு அரிக் ால்படி நல்லெண்ணெ ஒருபடி அதிமதுரம் ஒருபலம் அரைத்துப்போட்டுக்காச் முழிகிவந்தால் நிவர்த்தியாகும்.

## அண்டவாய்வுக்கு.

கழச்சிட்பருப்பு வெள்ளுள்ளி முருங்கைப்பட்டை சுக்கு கருங்காணம் வகைக்கு 2-களஞ்சியெடுத்து இடித்து 1-படிதண்ணியில்போட்டு அரிக்கால் ப யாகக்காச்சி யிரக்கிகொடுக்கவும் இப்படி ஆறுவேளைக்கொடுக்க சாந்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## இதுவுமது.

கழச்சிப்பருப்பு சித்திரமூல வேரின்பட்டை மாவிலிங்கம் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் 1—எடுத்திடித்துபொடித்து அண்டவெள்ளைக் கருவால் இளகிக் களச்சிக்காயளவு கொடுத்துவர சாந்தியாகும்

## இதுவுமது.

கழச்சிப்பருப்பு சத்திசாரணைக்கிழங்கு மிளகு இந்துப்பு பெருங்காயம்வெள்ளுள்ளி வசம்பு இவைகள் ஓர்நிறையாயிடித்து வெள்ளாட்டுப்பாலில் அறைத்துக்கொடுத்துவர சாந்தியாகும்.

## அஜீரணவாய்வுக்கு.

கருவேப்பிலையீர்க்கு சுக்கு சீரகம் ஓமம் வகைக்குவிராகனிடை 3—ஒருபடி தண்ணியில்போட்டு அரிக்கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து கொஞ்சம் சக்கரையிட்டுக்கொடுக்க சாந்தியாகும்.

## தலையில்நீரேற்றத்துக்கு.

கருஞ்செம்பை இலையை இடித்து சாறுபிழிந்துவிட்டு அந்தத்திப்பியை உச்சியில்வைத்துக்கட்டிக் காலையில் அவிழ்த்துவிடவும்.

## தலைபாரத்திற்கு.

கருஞ்செம்பைப்பூவை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி முழுகிவந்தால் தலைபாரம் தலைவலி ஒற்றைத்தலைவலி சீதளம் இவைதீரும்.

## கொருக்கினால் கண்ட வீக்கத்திற்கு.

கருஞ்செம்பையிலையை வதைக்கிப்பிழிந்துவிட்டு அந்தத்திப்பியை ஆண்குறியின்மேல் வைத்துக்கட்டினால் கொருக்கினால் கண்டவீக்கம் வற்றிப் போகும்.

## வாதக்கடுப்புக்கு மேல்பூச்சு.

கள்ளிக்கொழுந்தை வதைக்கி சாறுபிழிந்து அந்தசாற்றில் பூநீர் சீரக வகைக்கு ஒரு சிரங்கைபோட்டு ஊரவைத்து மறுநாள் அந்த ஜலத்தினால் கைகை அரைத்து பைத்துபோடவும் வாதக்கடுப்பு நிவர்த்தியாகும்.

## பித்ததயிலம்.

கரிப்பான்சாறு நெல்லிக்காய்சாறு வகைக்கு அறைப்படி பசும்பால் ஒருபடி அதிமதுரம் ஒருபலம் அறைத்துப்பொட்டுக் காய்ச்சி மெழுகுபதத்திலிரக்கி முழுகிவந்தால் சகலபித்தமும்தீரும் மயக்கம்தீரும்.

## காதுமந்தத்திற்கு.

கள்ளியிலையை வாட்டிப்பிழிந்தசாறு வெள்ளுள்ளிச்சாறு நல்லெண்ணெய் பசும்பால் சமநிடைகலந்து கொஞ்சம் முருங்கைவேரும் வசம்பும் நருக்கிப் போட்டுக்காய்ச்சி காதில் இருவேளையும் பத்துநாள் விட்டுவரத்தீரும்

Digital collection of Tamil Heritage Foundation



## கரப்பான்வாயுவுக்கு

கடுக்காய்சமூலத்தை பாலில் உட்கொண்டுவந்தால் கருப்பான் குட்டம்கி ந்தி வங்கு சில்லரைவிஷம் இவைநீங்கும்.

## பிளவைகட்கு.

கடுக்காய் சுக்கு கரிய போளம் நாவிக்கிழங்கு அபின் கொடிவேலிவேர் ருக்கன்வேர் வாளம் இவைகளை எருக்கன்பாலில் அறைத்து அல்லது எருக்க பழுப்புச்சாற்றாலரைத்து பிளவை கட்டி பருவு அறையாப்பு இதுகளுக்குத் வ உடையும்.

## கபம்கிருமிக்கு.

கருவாகைசமூலத்தை பாலில்அறைத்து இருபோதும் உபயோகித்து வந் ல் ரிரணம் சுரம் கிருமி கபம் இவைகள்தீரும்.

## காயசித்தி.

கருநெல்லிமூலத்தை பாலில்அரைத்துக் கலக்கி இருபோதும் உண்டு ந்தால் ஜன்னி வாதசிலுமிஷம் தயக்கம் மயக்கம் தேகக்கடுப்பு இவைதீரும் டைவிடாமல் நாள்பட உண்டுவந்தால் காயசித்தியாம்.

## சிரசுநீர்நீங்க

கடம்புவிரையை பாலில் அறைத்துக்கலக்கி உட்கொண்டுவந்தால் இரு ல் இளைப்பு எலிகடிவிஷம் சிரசிலுள்ளநீர் தோஷம்வாதம் இவைதீரும்.

## வெட்டைக்கு.

கல்லத்தி விரையை பசும்பாலில் அரைத்துக்கலக்கி இருபோதும் உட் காண்டுவந்தால் இந்திரியத்திலிருக்கும் தோஷத்தை நிவர்த்தியாக்கும் மேகம் மகவெட்டை இவைநீங்கும்.

## அண்டவாதத்திற்கு

கழச்சிவித்திலுள்ள பருப்பையெடுத்து பசும்பாலில் அறைத்துக்கலக் க் காச்சி யருந்திவந்தால் அண்டவாதம் பக்கருகை இவைதீரும்.

## தாகசுரத்திற்கு.

கருவாகை மூலத்தை பாலில் அறைத்துக் கலக்கி இருபோதும் உட் காண்டுவந்தால் பெருவிஷம் சிறுவிஷம் அனல் ரிணம் தாகசுரம் நாக்கு ச்சரம் இவைதீரும்.

## இருமல்சாந்தி.

கடுக்காய் பச்சையாகக்கொண்டுவந்து பாலில் அறைத்து அருந்திவல் ருமல் புகையிருமல் ஈளை சீதக்கடுப்பு இவைதீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## உடம்புதணிய.

கீசகசாவை பாலில்அறைத்துக் கலக்கி சற்று அனலிலிட்டுக்காச்சியுட் கொண்டுவந்தாலும் காய்ச்சாமல் அருந்தினாலும் மேகவெட்டை சூடு இவைநீங் கும் உடம்புதணியும் இடுப்புவலிவு உண்டாகும்.

## நாவரட்சிநீங்க,

கடுக்காய்பூ திருகடுகு சிறுதேக்கு தாணிக்காய் கோஷ்டம் இந்துப்ப இவைசமன்கொண்டு வெதுப்பிப் பொடித்து திருகடிப்பிரமாணம் தேனிலாவது முலைப்பாலிலாவது உட்கொண்டுவந்தால் நாவரட்சி சுரம்/தீரும்.

## மூலமுளைநீங்க.

கல்மதத்தை பசும்வெண்ணெயிலரைத்து விரலில்தொட்டு பவனவாயி சுற்றித்தடவ மூலமுளை நீராய்கரைந்துவிடும்.

## கண்வலிநீங்க.

கரியுப்பை பொடியாய்நசுக்கி துணியில்முடிந்து நீராகாரத் தண்ணிய தோய்த்து இரண்டுநாழிகைக் கொருதபா கண்ணில்பிழிய கண்வலி உடனே நீங்கும்.

## வண்டுகடிநீங்க.

கருங்கம்பளி சுட்டசாம்பலையும் சமயல்வீட்டில் மேலே ஒட்டியிருக் புகையூறலும் வசம்புகரிக்கினசாம்பலும் வேப்பெண்ணெயில் குழைத்து வ கடிமேல் தடவத்தீரும்.

## கண்ணோய்தீர

கற்கண்டைபொடித்துத் துணியில்முடிந்து புளிப்பு மாதுளம்பழச் றில் தோய்த்துக்கண்ணில்பிழிய கண்வலி நீங்கும்.

## அமரத்திற்கு

கடுக்காயைத்தட்டி துணியில்முடிந்து ஆமணக்கெண்ணெயில் பே சூரியபுடம்வைத்து கண்ணில்பிழிய கண் அமரம்தீரும்.

## ரத்தம்கட்டியவீக்கத்திற்கு.

கல்லுருவியிலை அறைத்து காயங்கள் இரத்தம்கட்டிய வீக்கங்களு போட்டுவருவதால் கரைந்து நிவர்த்தியாகும்.

## மாந்தங்களுக்கு.

கற்பூரவள்ளியிலை பிட்டவித்து சாறுபிழிந்து அதில் குன்றியிடை ரோசனம் இழைத்து பிள்ளைக்குவார்த்துவந்தால் மாந்தம் அஜீரணம் சு. கள் அணுகாது அத்துடன் சிலமாத்திரைகளும் இழைப்பதுண்டு. மாந்த களுக்கு அனுபோகமான மாத்திரையை (பூர்வதிபரணியத்தில்) பார்த்த துக்கொள்ளவும்.

Digital collection of Tamil Heritage Foundation



## கபம் அருக்க.

கம்மாறுவெற்றிலையை தாம்பூலத்திற்கு சதா உபயோகித்துவந்தால் கப கோழை அறுக்கும் சீதளம்பிரிக்கும் இதைபிட்டவியல்செய்து சாறுபிழிந்து ஸ்தூரி கோரோஜனம் சேர்த்து பிள்ளைக்குவார்ப்பதும் உண்டு.

## பலயீனத்திற்கு.

கட்டுக்கொடியை அறைத்துப் பாலில்கலக்கிசாப்பிட்டுவந்தால் இந்திரி ம்கட்டும் இடுப்புவலிவு உண்டாகும் நீர்வொழுக்கு கண்டிக்கும்.

## கம்மலுக்கு.

கருப்பு மணத்தக்காளியிலையை பாலில் அரைத்து இரண்டு மூன்று வேளை உட்கொண்டுவந்தால் திரேக அழலை வாய்வு இவைகள்போகும் குரள் கம்மலைநீக்கும்.

## நீர்சுருக்குக்கு.

கல்சுண்ணும்பை வாய்நீர்விட்டிழைத்து அதிக நீர்சுருக்கு கண்டிருக்கும் போது தொப்புளைச் சுற்றிலும் இரண்டுகால் பெருவிரல் நகத்தின்பேரிலும் தளமாய்ப்பூசினல் உடனேநீர்சுருக்கு தீரும்.

## அழுக்குநீங்க.

களாவேரை கிஷாயம்வைத்து வெட்டுக் கொருபங்காயிரக்கி 4—5—நாள் கொடுக்க பிரசவித்தபெண்கள் வயற்றினுள்ள அழுக்கு நீங்கும்.

## பித்தம்தீர.

களாவேரைபாலில் அறைத்துக்குடித்து வந்தாலும் அல்லது மேற்படி வேரையிடித்து சூரணித்து சரியிடைசக்கரைகூட்டி திருகடிபிரமாணம் இரு வேளையும் தின்றுவந்தால் பித்தம் அரோசகம் தாகம் அதிகவேர்வை சிலவிஷ ங்கள்யாவும் தீரும்.

## தொண்டைக்கம்மலுக்கு.

கற்பூரவள்ளிச்சாற்றில் கற்கண்டுதூள் ஒருசிட்டிக்கைபோட்டு சாப்பிட் டால் தொண்டைக்கம்மல் நிவர்த்தியாகும்.

## சுவாசத்திற்கு

கருமுள்ளி சமூலத்தை உலர்த்தியிடித்து வஸ்திரகாயம் செய்து சீனி கூட்டிவைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திருகடிபிராமணம் எடுத்து தேனில் குழைத்து தின்றுவரவும் கபம், கோழை, இருமல், ஈளை, சுவாசம்தீரும்.

## இரத்தக்கடுப்புக்கு.

கவுதும்பை சமூலத்தை பாலில் அரைத்துகலக்கி உட்கொண்டுவந்தால் இரத்தக்கடுப்பு மூலச்சூடு மூலம் இவை சாந்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### கிடமுணடாக.

கல்லத்திக்கொழுந்தைபாலில் அறைத்து கலக்கி இருவேளையும் உட்கொண்டுவந்தால் மனதுகிடப்படும் அசதிநீங்கும் தாதுகட்டும்.

### பசியுண்டாக.

களாக்காயுடன் இஞ்சிவேர் இவைகளைக்கூட்டி வடகம் அல்லது ஊருகாய்செய்துவைத்துக்கொண்டு உண்டியுடன் அருந்திவந்தால் அரோசகம் ரத்தபித்தம் காதுவிடாய் தாகம் பித்த ஒக்காளம் இவைநீங்கும் பசியுண்டாகும் ஆனால் சுரரோகிகட்கு ஆகாது.

### திரிதோஷமும்நீர

கலவைக்கீரையை மிளகுமுதலிய காரசாரத்துடன் உபயோகித்தால் பித்தம் மலக்கட்டு குடல்வாதம் அரோசிகம் முக்கல் ரோகம் இவைதீரும் அபானவாய்வு சுத்தியாகும் பசிதீபனமுண்டாகும் திருவோஷமும்நீக்கும் பத்தியத்திற்கும் ஆகும். பெண்கள்வயற்று அழுக்குதள்ளும்.

### சர்வசூட்டுக்கும்.

கலியாணப்பூசினிக்காய் வடகம்செய்தாவது காரசாரத்துடன் சமைத்து உண்டியுடனாவது அடுத்தடுத்து உட்கொண்டுவந்தால் உள்ளனல் உட்சுரம் வெட்டைசூடு நீர்க்கட்டு இவைதணியும் மெய்வன்மையுண்டாகும் இதை லேகியபாகமாய்செய்து அருந்தினால்சர்வவாய்வும்சூடும்தணிந்து உடம்பை புஷ்டியாக்கும். இந்தலேகியம்செய்யும்முறையை (பார்வதிபரணியத்தில்) பார்த்துக்கொள்ளவும்.

### மதுமேகசாந்தி.

கருங்காலிவேரின்பட்டையைக் கொண்டுவந்து பாலில் அறைத்துக்கலக்கியாவது ஷை பட்டையை இடித்து வஸ்திரகாயம் செய்து சீனிகலந்து திருகடிபிரமாணம் இருபோதும் தின்றுவந்தால் மதுமேகம் சாந்தியாகும்.

### தேகபலத்திற்கு

கல்தாமரையை பாலில் அறைத்துக்கலக்கி உட்கொண்டுவந்தால் வீரியவிருத்தியும் தேகபலமும் உண்டாகும் குட்டவியாதியுள்ளவர்க்கு ஆகாது.

### வாந்திநிருத்த.

கலைமான் கொம்பு திப்பிலி அதிவிடையம் இவைகளை சமனாக எடுத்துப்பொடித்து வஸ்திரகாயம்செய்து கடிகைப்பிரமாணம் எடுத்து தேனில்குழைத்துக்கொடுக்கவும்.

Digital collection of Tamil Heritage Foundation



# கா

## அதிசாரத்திற்கு

காட்டாத்தி மூலத்தைபாலில் அரைத்து பாலில்கலக்கி உட்கொள்ளவு இப்படி அந்திசந்தி மூன்றுநாள்கொள்ள அதிசாரம் மந்தம் காசம் இவை சா ந்தியாகும்.

## பேதிக்கு.

காட்டாமணக்கன் முத்தின்பருப்பை மிதமாயெடுத்து பால்விட்டரைத் பாலில்கொடுக்க பேதியாகும். ஆனால்சில உடம்புக்கு ஆகாது.

## பாண்டுசோகைக்கு.

காட்டாமணக்கன்வேரை பாலில்அறைத்து பாலில்கலக்கித் தேகத்திற் தக்கபடியுண்டுவந்தால் பாண்டுசோகை காமாலை வீக்கம் இவைசாந்தியாகும்.

## சகலமூலத்திற்கும் பொதுப்பிரயோகம்

காட்டுக்கருணை கரிக்கருணை பிரண்டை மருள்கிழங்கு இவைகள் வகை தப்பலம் 1-உலர்த்தி சூரணித்து வேளைக்கு கொட்டைப் பாக்களவு எடுத்து தனில்குழைத்து தின்றுவந்தால் சர்வமூலமும் சாந்தியாகும் இச்சாபத்தியம்.

## முலைக்காம்பு ரிணத்திற்கு.

காசுக்கட்டி 2-வராகனிடை எடுத்துப்பொடித்துநாலுதிரும் தண்ணீரை ன்றாய் கொதிக்கவைத்திரக்கி அதில்போட்டு ஆரவைத்து எடுத்துக் கொள்ள ம் அடிக்கடி முலைக்காம்புகளில் ரிணம் உண்டாகும்பெண்கள் கெற்பமாயிருக் ம்போது பிரசவிக்கிறதற்கு இரண்டுமாதம் இருக்கும்போது தினந்தோரும் மற்படி தண்ணியைத்தொட்டு காம்புகளில் தடவிவந்தால் குழந்தை பிறந்துபா குடிக்கும்சமயத்தில் ரிணம் உண்டாகாது.

## பழயபுண்களுக்கு.

காசுக்கட்டியைமுன்போல் பொடிசெய்து கொதிக்கிரதண்ணியிற் போ டுக்கலக்கி ஆரவைத்து மிகுந்தநாற்றமும் பழுப்புநிரமாயும் உள்ள ஆராதபுண் ள் ரிணங்களை காலைமாலை மேற்படி தண்ணியால் கழிகிக்கொண்டுவந்தால் கு ணமாகும்.

## வயற்றுப்போக்குக்கு.

காசுக்கட்டியைப் பொடித்து 5-அல்லது 7-குண்டுமணியிடை எடுத்து தனிலாவது வெல்லத்திலாவது மத்தித்துக்கொடுத்தால் வயற்றுப்போக்கு நிவ த்தியாகும் வயற்றுப்போக்கு கண்டிருக்கும்போது சுரமில்லாதிருந்தால் மேற் டி சிகிச்சைசெய்யவேண்டும் சுரமிருந்தால் கூடாது.

Digital collection of Tamil Heritage Foundation



## பிராயம்சென்றவர்களுக்குவயற்றுபோக்குகண்டால்.

காசுக்கட்டி 8-குண்டுமணியும் கருவாப்பட்டைத்தூள் 4-குண்டுமணியு ம்கலந்து தேனிலாவது வெல்லத்திலாவது கொடுக்கலாம்.

## வெள்ளைக்கு.

காக்கட்டான் என்னும் வெள்ளைக்காக்கட்டான் வேறுகொண்டு வந்து தயிர்விட்டரைத்து புன்னைக்காயளவு எடுத்து கால்படிபசும்மோரில் கலக்கிக் கொடுத்துவிட்டு ஒருபடிபசும்மோரு விளாவிவைத்துக்கொண்டிருந்து ஒரு தகு தி பேதியானவுடன் அந்த மோரில்கொஞ்சம் குடிக்கச்சொல்லவேண்டியது இ ப்படி 6-அல்லது 8-விசைபேதியாகும் மோரைக்கொடுத்தால்தான் பேதியாகும் பகலில் தயிர்சாதமும் இரவில்பால்சாதமும் சாப்பிடவேண்டியது அந்த ஒரேதி னத்தில் வெள்ளைநிவர்த்தியாகும்.

## நாபிபேதி.

காக்கட்டான் யிலையைக்கசைச்கி சாறுபிழிந்து வெள்ளைகுண்டுமணியும் வாளமும் சரியாயெடுத்து மேற்படிசாற்றால் அறைத்து தொப்புளைச்சுற்றி கன மாகதடவினால் 1-2-விசைபேதியாகும்.

## திராதவாந்திக்கு.

காட்டுயேலத்தை கொண்டுவந்து இளம்வருப்பாய் வருத்து நெல்லிவற்ற ல் தாணிக்காய் கடுக்காய்கொஞ்சம் கூட்டி கிஷாயமிட்டுக்கொடுக்க திராத வாந் தி பித்தம் அரோசிகம் இவைதீரும்.

## இரைப்புக்கு.

காட்டுதுளசியைக் கொண்டுவந்து பால்விட்டரைத்து பாலில் கலக்கி க்கொடுத்துவந்தால் இரைப்பு வியாதிசாந்தியாகும்.

## மேகவெள்ளைக்கு.

காட்டாமணக்கன் கொழுந்தை பால்விட்டறைத்து பாலில் கலக்கிக் கொடுக்க வெள்ளைதீரும் உடம்பில் அடிக்கடி ஜெனிக்கிற விரணங்கள் சிரங்கு கட்டிகள் இவையாவும் தீரும்.

## பல்நோய்க்கு.

காட்டுப்பிராயன்பால் பல்லுநோய்களுக்கு மேற்படிபாலை நோயுள்ள பல் லின்மீது யீருகள் மீதுவிட்டுவந்தால் நிவர்த்தியாகும்.

## உடல்பூரிக்க.

காட்டுவெள்ளியை பாலில்அறைத்துக்கலக்கி யுட்கொண்டுவந்தால் குளு மைநீக்கும் உடல்பூரிக்கும் நல்லபலம் உண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## விஷஜன்னிக்கு.

காட்டுமுருங்கை சமூலத்தை பச்சையாய் கொண்டுவந்துபாலில் அறைத்துக்கலக்கி யுண்டுவந்தால் புரவீச்சு ஊஷ்ணம் இவைதீரும். கண்குளிர்ச்சியு டாம் ஜன்னிகிஷாயங்களுடன் மேற்படி சமூலம்சேர்த்து பாகப்படுத்திக்கொடுத்தால் விஷஜன்னிதீரும்.

## உடல் பூரிக்க.

காட்டுவெள்ளியை பாலில் அறைத்துக் கலக்கியுட்கொண்டுவந்தால் குஷ்டம் நீக்கும் உடல்பூரிக்கும் நல்லபலம் உண்டாகும்.

## நாவரட்சிதீர.

காட்டுமல்லிகை சமூலத்தைக் கொண்டு வந்து சீந்தல் மதுரம் சமசேர்த்துகிஷாயமிட்டுக் கொடுக்க நாவரட்சிதாகம் சுரம்தீரும்.

## இரத்தமூலம்தீர

காராக்கருணையை வடகம் செய்தாவது யிடித்து சூரணித்து சமன்சக்கரக் கலந்தாவது இருவேளையும் தின்றுவந்தால் இரத்தமூலம் கபம்கனல் மந்தமுளைமூலம் வாதரோகங்கள் தீரும் பசிதீபனமுண்டாகும்.

## மாந்தங்களுக்கு.

கீரிவட்டம்புல்லு மாந்தவியாதியை கண்டிப்பதற்கு இதுமுதன்மையான ஔஷதமாயிருக்கிறது, ஊதுமாந்தம் உட்புமாந்தம்முக்குமாந்தம் இதுகளுக்குமேற்படிவஸ்து கொண்டுவந்து எட்டுக்கொன்றாய் கிஷாயம் வைத்து கஸ்தூரிகோரோஜனம் இழைத்து வார்த்தால் குழந்தைகள் வியாதியாவும் கண்டிக்கும்.

## நீர்யெரிவுதிரசர்பத்து.

காசினியிலையை யிடித்த சாறுபலம் 13 - வெள்ளைச்சக்கரை - 20-பலவ்விரண்டும் கலக்கிக் காச்சி பாகுபதமாய் யிறக்கி புட்டியில் விட்டுவைத்துக்கொள்ளவும். வேளைக்கு 2-தோலா யெடுத்து கொஞ்சம் நல்லஜெலத்திற்கலந்து சாப்பிட்டுவந்தால் நீர்கட்டு-நீர்யெரிவு உட்காச்சல் இவைதீரும். பலம்இளக்கும் லேக்குபலம்உண்டாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



# கி

## அந்தியாலேக்கு.

கிருஷ்ணதுளசியிலையைக் கசக்கி சாறுபிழிந்து நேத்திரத்தில் இரண்டு துளிவிடவும் இப்படிகாலையில் ஒரேவேளையாக மூன்றுநாள் விடவும் சாந்தியாகும்.

## வாந்தி விக்கலுக்கு.

கிராம்பு ஏலம் சீரகம் வெதுப்பி மயிலிரகு சுட்டசாம்பல் சமன்சேர்த்து பொடித்து தேனில்குழைத்து கொடுத்துவரத்தீரும்.

## காதுயெழுர்ச்சிக்கு.

கிலுகிலுப்பை வேரையரைத்து நல்லெண்ணை விட்டுக் காச்சி காதில் விட்டு பஞ்சடைக்கவும் இரண்டு மூன்றுவேளையில் தீரும்.

## உதிரக்கிறுணிக்கு.

கிராம்பை பாலில்அரைத்துக்கலக்கி யுட்கொண்டுவந்தால் பித்தகோபம் அதிசாரம் உதிரக்கிறுணி ஆசனக்கடுப்பு இவைதீரும்.

## தலைவலிக்கு

கிச்சிலிக்கிழங்கைப் பொடித்து நல்லெண்ணையிலிட்டுக் காச்சி தலைமுழுகிவந்தால் தலைவலி சீதளம் இவைபிரியும் திரேகம்வாசனை வீசும்.

## மேகசாந்தி.

கிட்டிக்கிழங்கை வெவித்தாவது பச்சையாகவே உலர்த்தி சூரணித்து அரைப்பங்கு சக்கறை கூட்டியாவது விடாமல் 40- நாள் இருவேளையும் தின்றுவந்தால் உடம்புயிருகும் மேகம் சாந்தியாகும் கபத்தையருக்கும் தீபனமுண்டாக்கும் பித்தத்தை சமநிலையில் வைக்கும்.

## கரப்பான்கிறந்திக்கு

கிறந்திநாயக மென்னும் மூலிகையைபாலில் அறைத்துகாலை ஒருவேளையாக உண்டுவந்தாலும் எண்ணைபாகங்களுடன் மேற்படிசாற்றைச்சேர்த்துகாச்சியுண்டாலும் கருங்கிறந்தி செங்கிறந்திகரப்பான்ஊஷ்ணம்சீதம்இவைகள் தீரும்.

## சுரசாந்தி.

கிளியூரல்பட்டையை ஒன்றிரண்டாயிடித்து எட்டுக்கொருபங்காய்கியழும் வடித்து உண்டால் சுரத்தை சாந்தியாக்கும் தணல் வெட்பம் இவைதணியும் இத்துடன் சுரசாந்தியான மூலிகைகளும் சேர்த்து கியாழமிடலாம்.

Digital collection of Tamil Heritage Foundation



### பொது.

கிளுவை வேரையும் சமூலத்தையும் அனேக வியாதிகளுக்கெல்லாம் பித்தியர் உபயோகப்படுத்துவதுண்டு.

# கீ

### சோகைக்கு.

கீழாநெல்லி சமூலத்தை பாலில்அறைத்துப் பாலில்கலக்கி யுண்டுவந்தா சோகை காமாலை பாண்டு உடல் வெளுப்பு வாதபித்த கிரிச்சினம் இவைநீ ம் இரத்தம்உபரியாகும் கண்குளிரும்.

### சாம்பல் தின்கிறகுழந்தைகட்கு

கீழா நெல்லிவேர் விராகனிடை 1. கடுக்காய்தோல் விராகனிடை 2. மிள விராகனிடை 3. புளித்த மோரில்அறைத்துக் கலக்கி மூன்று நாள்வார்க்கமரு டி சாம்பல் மண் இவைகள் தின்னாது.

### புறவீச்சுதிர.

கீழாநெல்லிச்சாறு கிலுகிலுப்பைச்சாறு தேன் முலைப்பால் வகைக்கு பம் அறைவெள்ளுள்ளி காந்தம் சுக்குவகைக்கு விராகனிடை 1 இவைகளை றைத்து யாவும் ஒன்றாய்க்கலந்துக் கொடுக்க நிவர்த்தியாகும்.

### இரத்தம்போல்நீர்யிறங்குவதற்கு

கீழானெல்லி சமூலம் ஒருபிடி சீரகம் விராகனிடை 1. இவை அறைத்து பருமைத்தயிரிற்கலக்கி கொடுக்கவும் இப்படி 3 நாள்கொடுக்கத் தீரும்.

### பித்தசோகை வீக்கத்திற்கு.

கீழாநெல்லி மூன்றுபங்கும் ஈருள்ளி ஒருபங்கும் சேர்த்திடித்து சாறு ழிந்து கால்படிவீதம் மூன்றுநாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

# கு

### எலிகடிக்கு

குளப்பாலையிலையை ஆவின்பாலில் அரைத்து உண்டுவந்தால் யெலிகடி விஷகரப்பான் உடல்சுரப்பு கால்சுரப்பு சர்வவிஷ வீக்கம் இதுகள் தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## செங்கருப்பான் கருங்கரப்பானுக்கு.

குண்டலாத்தியென்று வழங்கும் சங்கன்வேரை பசும்பாலில் அரைத்து அருந்திவந்தால் தழுதணை சொரிதேமல் இறந்தி செங்கரப்பான் கருங்கரப்பான் சிறுசிறங்கு பெருஞ்சிரங்கு யாவும்தீரும்

## காதில்யீப்புகுந்தால்.

குப்பை மேனியிலையில் கொஞ்சம் நீர்தெளித்துக் கசைக்கி காதில் இரண்டு மூன்று துளிசாறு பிழிந்தால் ஈ செத்துவிழுந்துவிடும்.

## இதுவுமது

குப்பைமேனிச்சாறும் கோழியவரைச்சாறும் சமனுய்க்கலந்து காதில் பிழிந்தால் ஈ சாகும்

## சிராப்பீனிசத்திற்கு.

குப்பை மேனிஆடுதீண்டாப்பாளை அளிஞ்சிமுள்ளி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி நல்லெண்ணை படி 2 இவைகளைக் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய் காச்சிவடித்து தலைமுழுகி வந்தால் சிராப்பீனிசம்தீரும்.

## உட்குத்துபுறவீச்சும்தீர.

குப்பைமேனிசிறுபுள்ளடி பொன்னுவாரை இவைகள் ஓரளவாய் யெடுத்து வேப்பம் யிலையில் உப்புபோட்டு யிடித்துப்பிழிந்த சாறுவிட்டு அரைத்து ஒருவேளைக்கு புன்னைக் காயளவு ஒரு நாளைக்கு மூன்றுதபா கொடுக்க தீவர் தியாகும்,

## குடல்வாதத்திற்கு.

குரிஞ்சானிலையை பிட்டவித்துப் பிழிந்த சாறு அரிக்கால்படி சுக்கு மிளகு உள்ளி சீரகம் கடுகுவெந்தியம் வகைக்கு விராகனிடை 1. வறுத்துப் பொடித்துப் போட்டுக் கலக்கி மூன்றுநாள்கொடுக்க சாந்தியாகும்.

## பலரோகந்திர

குங்குமப்பூவை அரிக்கால்விராகனிடை யெடுத்து பால்விட்டரைத்து அரிக்கால்படி பசும்பாலில் கலந்துகுடித்துவந்தால் அண்டவாதம் உச்சிவலி கண்ணினுண்டாகும் பூ கபம்கால்வலி சூலைதாகம் மேகஜெலம் விந்து நஷ்டம் ஜலதோஷம் சுரம் செவிநோய் பித்தம் மதுமேகம் இவைதீரும் பெண்களின் கெற்பசிரரோகம் இதுகள் தீரும் நீடித்து சாப்பிடவேண்டியது.

## பேதிகட்ட

குடசப்பாலை மரத்தின் பட்டையை பாலில் அரைத்து காலையில் குடித்தால் பேதியும்கட்டும் சீரிழிவு வாதம் இவை சாந்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



## பொடிசிரங்கு.

குடியோட்டிப்பூண்டென்னும் நால்லைபல்லினையக்கொண்டுவந்துகொஞ்சம் கெந்தகம்சேர்த்தரைத்துஉடம்பில்தேய்த்துக் குளித்தால்பொடிசிரங்குமாறும்.

## இளைவுதீர.

குதிரைக்குளம்பு யென்னும் நிலக்கடம்புயிலை கொண்டு வந்து மிதமா யெடுத்து பாலில் அறைத்து கொடுத்தால் குதிரைநடை வாய்வு-ஜன்னி இளைவு தீரும். இதை கிஷாயமூலியமாயும் உபயோகிக்கவேண்டும்.

## கண்மயக்கம் தீர.

குதிரைவாலிப்பூண்டு கொண்டு வந்து பாலில் அறைத்து அருந்தி வந்தால் கண்மயக்கம்-ஈளை-கடுப்பு-கழிச்சல் - காசம் இவை சாந்தியாகும்.

## பலவியாதிகள் தீர.

குரிஞ்சான் கட்டையை சூரணித்துக் கரைகூட்டி திருகடிப்பிரமாணம் எடுத்து தின்று வரவும். இப்படி நீடித்து தின்று வருவதால் தேகத்திலுள்ள காணுவியாதிகள் யாவும் தீரும். நல்ல வலிவை யுண்டாக்கும்.

## வாந்தியாக.

குரிஞ்சான் வேரை அல்லது உலர்ந்த யிலையை பொடிசெய்து சுமார் 30 கிறையின் வரையில் உள்ளுக்குக் கொடுத்து சுடுதண்ணீர் மிகுதியாய் குடித்தால் நன்றாய் வாந்தியாகும்.

## குழந்தைகள் இருமலுக்கு.

குண்டுமணி வேரைக்கொண்டுவந்து புதுவேராய் பார்த்து இரண்டவுன்சு யெடுத்து சதைத்து அறைபுட்டி ஜெலத்தில் போட்டு அறைமணி நேரம் வரையில் வேகவைத்து வடிக்கட்டி அதில் எட்டவுன்சு கற்கண்டாவது தேனாவது கலந்து மருபடியும் அடுப்பேற்றிக் காய்ச்சி பாகுபதத்தில் இரக்கிவைத்துக் கொண்டு ஒருவேளைக்கு தேக்கரண்டி வீதம் ஒருநாளைக்கு 4 - 5 - வேளை கொடுக்கலாம். இருமல் சவுக்கியமாகும். குண்டுமணிவேருக்கு நாட்டு அதிமதுரமென்றும் பேர்உண்டு.

## குழந்தைகள் வாய்ப்புண்ணுக்கு.

குண்டுமணியிலையின் சாற்றை குழந்தைகள் வாயினுள் வெள்ளைநிறமாய் காணும் புண்களுக்கு கொஞ்சம் தடவிவிட்டால் குணமாகும்.

## குழந்தைகள் மாந்தத்திற்கு.

### பொதுப்பிரயோகம்.

குட்டி விளாம்பாலையை வதைக்கிச் சாறுபிழிந்து, ஆமையோடு வசம்பு இரண்டும் சுட்டுக் கரியாக்கி பொடி செய்து கொஞ்சம் போட்டுக்காய்ச்சி 1 -அல்லது 2-சங்கு வீதம் 3-வேளை கொடுக்க சகலமாந்தமும்சாந்தியாகும்.

—ooo—

Digital collection of Tamil Heritage Foundation



## கூ

### மகாவாதசாந்திக்கு

கூத்தன் குதம்பையிலையைப் பாலில் அறைத்துக்கலக்கி யுட்கொண்டு வந்தால் குலையைப்பற்றிய ரோகமும்ஜன்னிபாதரோகமும் மகாவாதரோகமும் ஒழுக்கும். பித்தத்தை விருத்தி செய்யும் இரமப்படி யுபயோகித்தால் மண்டூரத்தைசெந்தூரிக்கும்.

### கூழைக்கிழங்கு.

மேனியிமேம்வாய்க்கு மிருதுவாரு மாக்கியுண்டால்
தானிருமல்வெப்பதிக தாகமிவை—யேனிருக்கு
மம்பேரிளங்கிழங்கு யாவருக்குமாமணப்பூங்
கொம்பேகூழைக்கிழங்கைக் கூறு.

கூழைக்கிழங்கை சமைத்து உண்டுவந்தால் தேகபுஷ்டியுண்டாகும் இருமல்சுரம் தாகம் இவைகளைப் போக்கும் தின்பதற்குஇனிப்பாகவும் வாய்க்குஉணவாகவுமிருக்கும்.

—∘○◌○∘—

## கெ

### இரத்த வெள்ளைக்கு

கெச்சக்கா யிலையை யிடித்து சாறுபிழிந்து அறைபலம் எடுத்து அரையாழாக்கு தயிரில் கலந்து காலையில் கொடுக்கவும். சிறுலவுங்கப்பட்டையை அறைத்து களஞ்சிக்காயளவு மாலையில் கொடுக்கவும். கடும்பத்தியம்இருக்கவும். இப்படி 3 அல்லது 5–நாள் கொடுக்கவும்.

### விரைவாதத்திற்கு.

கெச்சக்காய் பருப்பு 4 யெடுத்து கோழிமுட்டை வெள்ளை அம்பில் விட்டு அறைத்து வடைபோல் தட்டிஒருபலம் சித்தாமணக்கெண்ணை அடுப்பிலேற்றி மேற்படி வடையைப்போட்டு நன்றாய் சிவக்கச் சுட்டு யெடுத்து அதிமாலையில் அந்த வடையை தின்றுவிட்டு அதில் மிகுந்திருக்கும் எண்ணெயை குடித்துவிடவும். 5–6–விசை பேதியாகும். இச்சாபத்தியம் இப்படி 3–நாள் கொடுக்கவும்.

Digital collection of Tamil Heritage Foundation



## விளாவீக்கத்திற்கு

கெச்சக்கா யிலையை துளிவிளக்கெண்ணெ விட்டு வதக்கி விளாயின்மே வைத்து கட்டி வைக்கவும். காலையிலே பேதிக்கு சாப்பிடவும்.

# கே

## கேணிஜெலம்.

ஆசாரக் கேணிநீ ரறுந்த லதிகாகம்
வீசாகச் சூடுபசி மெய்க்காந்தல்—மாசூலை
மெய்யுள்வலிசந் துளைட்புவீழ் மயக்கம்சோகைபித்தம்
பையவரு மிணையும் பார்.

கேணியென்னும் குற்றமில்லாத கிணத்து ஜலத்தை அருந்துவதினால் மிகுந்த தாகம்-ஊஷ்ணம்-தீபனம்-தேக அழலை - சரீரத்துட்கடுப்பு- இடுப்பு குடைசல்-மயக்கம்-வீக்கம்-பித்ததோஷம்-சுவாசம் இவைநீங்கும். கண்பிரகாசம்கொடுக்கும் ஆனால் நீடித்து அருந்தவேண்டும்.

# கை

## கையாந்தகரை-அல்லது.

## கரசனாங்கண்ணியாம்.

பொற்றலைக் கையாந்தகரை பொன்னிரமாக்கும் உடலை
சுத்தமுறச்கட்டும் சுரங்கெடுக்கும்—சிற்றிடையாய்ப்
சிந்தூரம் செயவாகும் சிந்தைதனைத்துலக்கும்
முந்திவருகுன்ம மொழிக்கும்.

கையாந்தகரை தும்பை அம்மான்பச்சரிசி வகைக்கு ஒருபிடி யெடுத்து இடித்து சாறுபிழிந்து அதில்பணிரெண்டுமிளகு யெண்ணி யெடுத்து அரைத்து கலக்கி அத்துடன் வெள்ளாட்டுப்பாலாவது ஆவின்பாலாவது கால்படிவிட்டு கலக்கி சீனிசக்கரை ஒருவிராகனிடை போட்டுக்கொடுக்கவும் இப்படி ஆறு நாள்கொடுக்க காமாலைநிவர்த்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



# கொ

## வாய்வினாலுண்டான உடம்புகுத்தலுக்கு

கொடிவேலி வேரின் பட்டை-பரங்கிப்பட்டை-பிரப்பங்கிழங்கு- மிளகு வகைக்கு விராகனிடை 3-எடுத்து இடித்து 4-படி ஜலத்தில்போட்டு அரைப்படி கிஷாயமாக யிறக்கி நாளொன்றுக்கு மூன்றுதரம் அரிக்கால் படிவீதம் கொடுத்தால் டை வியாதி தீரும்.

## பித்தமூலக்கிராணிக்கு.

கொட்டைக்கரந்தையும் சீரகமும் சரியிடையா யெடுத்து அரைத்து வில்லை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து தின்றால் மலம்வெண்மையாயும் உதிரமாயும் கழிதல் காத்துபரிதல் இவைதீரும்.

## சளுக்கு சுரத்திற்கு.

கொத்தமல்லி சுக்கு-மிளகு-திப்பிலி-பேராமுட்டி-வகைக்கு விராகனிடை 3 யெடுத்து ஒன்றிரண்டா யிடித்து அரைப்படி ஜெலத்தில் போட்டு அரிக்கால்படியாக யிறக்கி ஒருநாளைக்கு 3 – வேளை கொடுக்கவும்.

## அக்கிமுதலிய சிறுவிஷத்திற்கு

கொல்லன் கோவைக்கிழங்கை வஸ்திரகாயம் செய்து சரியிடை சீனி கூட்டி திரிகடிப்பிரமாணம் இருவேளையும் தின்று வந்தால் அக்கி-அரிப்பு-குடல்நோய் – கண்டமாலை-கிரந்தி-சில்லறை விஷங்கள் யாவும் தீரும்.

## கிருமிபேதி.

கொண்ணைக்கொழுந்தை உப்பில்லாமல் வெவித்துஇரவில் படுக்கும்போது தின்றுவிட்டு காலையில் கொஞ்சம் சித்தாமணக்கெண்ணை புசித்தால் பேதியாகும் திமிர் பூச்சிகள் வந்துவிடும்

## மலச்சிக்கலுக்கு.

கொண்ணைக்காய் கொழுந்து இவைகளை கிஷாயம் வைத்து அருந்தினால் வயற்று வலி வாய்வு தீரும் மலச்சிக்கலைக் கண்டிக்கும். சமமாயெடுத்து கிஷாயம் செய்து அந்திசந்தி கொடுத்துவரவும் பால் அன்னம் உபயோகிக்கவும்.

## வெள்ளைக்கு.

கொடிக்கள்ளிக் கொழுந்தைஅரைத்து யெலுமிச்சங்காயளவு யெடுத்து அத்துடன் 32 மிளகு அரைத்துக் கலந்துவைத்துக் கொண்டு ஒருவேளைக்கு அரைக்கொட்டைப்பாக்களவு கொடுக்கவும் இப்படி 3. நாள் கொடுத்து பத்தியம்பசும்மோரும் சாதமும் கொடுக்கவும் உப்பாகாது.

Digital collection of Tamil Heritage Foundation



### இறுகிரங்குசொறிசிரங்கு.

கொடிக்கள்ளியை வாட்டிச்சாறு பிழிந்து வயதுக்கும் தேகபலத்திற்கு தக்கபடி திட்டனம் பார்த்துக்கொடுத்தால் நிவர்த்தியாகும்.

### பசியுண்டாக.

கொழிஞ்சிவேர் கஷாயம் வைத்து அதில் சீனிகொஞ்சம் போட்டுரோகிகளுக்குக் கொடுத்துவந்தால் பசியுண்டாக்கும்.

—ooo—

# கோ

### மேனியழகுண்டாக.

கோங்கிலவன் பூவைபாலிலிட்டுக் காச்சியுண்டுவந்தால், நரை-திரைரும் கொடியவியாதிகள்யாவும்தீரும் மேனிபொன்போலாகும் நல்லஅழகுகாடுக்கும்.

### பவழபற்பம்.

கோக்கிலவன் இலையைஅரைத்து அந்த முத்தைக்குள் தக்கபடிசுத்திசய்தபவழத்தைவைத்து புடமிட பற்பமாகும் க்ஷயம் இருமல் முதலியவியாதி்கு கொடுக்கலாம்.

### வெள்ளை.

கோங் கிலவன் கொழுந்தை பாலில்அரைத்துகலக்கியுண்டுவந்தால்வெடைசூடு வெள்ளைவிழுதல் நிவர்த்தியாகும்.

### பலத்திற்கும்-பால்சுரக்கவும்.

கோரோசனையை பாலில்கலக்கிக் காச்சியுண்டுவந்தால் மூலைப்பால்க்கும் -கண்ணோய் சுரம்இவைதீரும், மூலச்சூடு தணியும்நீடித்து உபயோகப்த்திவந்தால் தேகத்தில் அழகும் பலமும் உண்டாகும்.

### நீர்தாரையில்சுருக்குச்சுருக்கென்று குத்திசுக்கிலம்விழுவதற்கு.

கோரைக்கிழங்கு -விஷ்ணுகாந்தி மிளகுவகைக்கு - 1½ பலம் எடுத்துரிரண்டாயிடித்து-4. பிடிதண்ணீர்வைத்து -1. படிகியாழமாகயிரைக்கிஒருளைக்கு அரிக்கால்படிவீதம் - ஆறுவேளைகொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

### விஷசுரத்திற்கு.

கோழியவரை வேர்-சித்திரமூலம் வேப்பம்யீர்க்கு-சிறுபுள்ளடி பற்படசுக்கு-செவியம் வகைக்கு - பலம் (கால்) இரண்டுபடிதண்ணிவைத்துஅறை

Digital collection of Tamil Heritage Foundation



ப்படியாகக் காச்சி யிரக்கி வடிக்கட்டி முரித்ததேன்-முலைப்பால்சொஞ்சம்விட்டு கொடுக்கவும் (அதாவது) வேளைக்கு-வீசம்படியாக ஒருநாளைக்கு-3. வேளை கொடுக்கவும்தீரும். இத்துடன்பிழைக்க வேண்டிய மாத்திரைகள் - பார்வதீபரிணியத்தில் பார்த்துக்கொள்ளவும்.

### அதிசாரக்கழிச்சலுக்கு.

கோரைக்கிழங்கு கொத்தமல்லி வில்வவேர் திப்பிலிசிறுநாகப்பூ இவ்வ சமன்கொண்டு நருக்கிக்கிஷாயம்வைத்து கொஞ்சம்தேன்விட்டுக் கொடுக்கவும்.

### கழிச்சலுக்கு.

கோரோஜனை- களிப்பாக்கு-சீரகம்- காசுக்கட்டி இவைகள் சமன்கொண்டு எலுமிச்சம்பழச்சார் விட்டரைத்து - பாக்குபிரமாணம் எடுத்து - முலைப்பாலில் கலக்கிக் கொடுத்தால் கழிச்சல் உடனே நிவர்த்தியாகும்.

### காலெரிவுகாந்தல் கற்றாழைநாற்றத்திற்கு.

கோஷ்டத்தை பசும்பால்விட்டரைத்து பாலிற்கலக்கி உட்கொண்டு வந்தால் கைகாலெரிவு மூட்டுகளில் கீலுகளில் வலி கற்றாழை நாற்றம் தீரும்.

### காமாலை-சோகைபாண்டுக்கு.

கோசலமென்னும் சிறுவர் (சிறுநீரும்) வெள்ளாட்டுப்பாலும் சரியாய் கலந்து உட்கொண்டு வந்தால், சோகை-காமாலை-பாண்டு- பித்தம் இவை தீரும்

### பாண்டுகோகைக்கு

கோசலமும் வில்வயிலையும் இடித்து சாறுபிழிந்து மூன்றுதரம் வடிக்கட்டி அரைக்கால்படி வீதம் ஆறுநாள் கொடுக்க ஷை வியாதிகள் நிவர்த்தியாகும். புளி தள்ளவேண்டியது.

### பித்தவாய்வுமதுமேகம்

கோடகசாலை யென்னும் மூலிகையை பாலில் அரைத்து பாலில் கலக்கி உட்கொண்டுவந்தால். கிறந்தி-குட்டம்-கொப்பளம்-புண்- பித்தவாய்வு- மதுமேகம்-வயற்றுப்புழு-வாய்விரணம் இவை தீரும்.

### கல்நார்பஸ்பம்.

கோழியவரையிலையை அரைத்து அதனுள் கல்நாரை வைத்து கவசம் செய்து தகுந்த புடமிட பஸ்பமாகும். இந்த யிலையை கிரமப்படி உட்கொண்டால், குடல் வாதம்-குன்மம்-ஆமைக்கட்டி இவைகள் தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



# ச

## பிரமியத்திற்கு.

சந்தணமூலம் அதாவது, சந்தணமாத்து வேரின் பட்டையை பாலில் புரைத்துக் காச்சி யுண்டுவந்தால், மேகம்-பிரமியம் தீரும். தேகத்தில் அழகு ண்டாகும்.

## இதுவுமது

சந்தணமூலத்தைக் கஷாயம் செய்து உண்டுவந்தால் மேற்கூறிய வியாதிகள் தீரும்.

## இதுவுமது.

சந்தண அத்தர் முதல்தரமானது அரிக்கால் ரூபா யிடை எடுத்து ஒரு செவ்விளநீரைக் கண்திறந்து அதில் விட்டு நன்றாய் குலுக்கி சாப்பிடவும். இப்படி மூன்றுவேளை சாப்பிட்டால் கடூரமான வெள்ளை உடனே தீரும்.

## அஸ்திகாங்கைதீர,

சதையொட்டி யிலையை பாலில் அறைத்துக் கலக்கி உண்டு வந்தால் வெட்டை யெரிவு காந்தல் இவை தீரும்.

## வண்டுகடி சொரி தேமல் தீர

சரக்கொண்ணை மூலத்தை பாலில் அறைத்துக் கலக்கி யுண்டுவந்தால் வண்டுகடி-சொரி-தேமல்-விஷநீர் முதலியவை தீரும்.

## பித்தகுன்மசாந்தி.

சத்திசாரணை மூலத்தை பால்விட்டறைத்து பில்லை தட்டி யுலர்த்திபொடிசெய்து கொஞ்சம் சீனி கலந்து வைத்துக்கொண்டு திருகடிப் பிரமாணம் நெய்யிலாவது தேனிலாவது உண்டுவந்தால் பித்தகுன்மம் சாந்தியாகும். பத்தியமில்லை.

## மேகசூட்டுக்குதைலம்.

சவுரிப்பழம் 2-மிளகு 1-பலம் இதுகளை பசும்பால்விட்டறைத்து கால்படி நல்லெண்ணையிற் கறைத்துக் காச்சி வடித்து தலை முழுகிவந்தால் மேகசூடு சாந்தியாகும்.

## மேகவியாதிக்கு.

சங்கம்குப்பிச்சாற்றை தனியாயாவது, ஆமணக்கெண்ணையுடன் கலந்தாவது, காலையில் ஒரேவேளையாக சுமார் 1½-பலத்திற்குக் குறையாமல்கொடுத்து வந்தால் இரண்டொரு தடவை வலம் உதையும். கண்டமாலை-மேகவெள்ளையிவை சாந்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### நாசிகாபரணம்,

சமுத்திராப்பழத்தை சூரணித்து, மூக்கிலுள்ள ரிணங்களுக்கு நசியம் செய்து வந்தால் மூக்குரிணம் ஆறும்-தலைபாரம் தீரும்.

### மயிர்வளர.

சடாமாஞ்சியை எண்ணெயிலிட்டுக் காச்சி வடித்து வைத்துக் கொண்டு தலைமுழுகிவந்தால் மயிர் வளரும், சற்று வாசனையுள்ளதாகவுமிருக்கும்.

### மாந்தங்களுக்கு.

சதாப்பிலையை சித்தாமணக் கெண்ணெயுடன் காச்சியாவது, மேற்படி யிலை சாற்றை தனியாயாவது குழந்தைகளுக்கு உபயோகித்து வந்தால் மாந்தம் அணுகாது

### கபம் அல்லது சிரசு நோய்.

சதகுப்பையை சூரணித்து சக்கரைக் கூட்டி திருகடியளவு உண்டு வந்தால், கபம்-சிரசுநோய்-செவிநோய்-பீனிசம்-மூலக்கடுப்பு இவைசாந்தியாகும்.

### தாதுநஷ்டத்திற்கு.

சண்பகமொக்கை கிஷாயம் செய்து, பால் சக்கறை போட்டு உட்கொண்டு வந்தால், அஸ்தி சுரம் - பித்த சுரம் - கண் அழலை - மேகம் இவைதீரும். தாதுகட்டும்.

### நாடியிருக

சத்திசாட்டரணை மூலத்தை சூரணித்து சக்கறைகலந்து திருகடியளவு உண்டு வந்தால் மேகம் விப்புருதி தீரும். நாடியிருகும். விந்து உண்டாகும்.

### வயற்றுநோவுக்கு.

சப்பாத்தி சமூலத்தை கொண்டுவந்து எண்ணெயுடன் சேர்த்துக் காச்சி பிரசவவேதனை போன்ற வயற்று நோவுக்குக் கொடுக்கப்படும்.

### தகுந்தஆகாரம்.

சவ்வரிசியை அறை அவுன்சு யெடுத்து நாலுதிராம் தண்ணியில் போட்டு 2 மணி நேரம் ஊரியபின் அடுப்பேற்றி கால்மணி நேரம் வேகவைத்து அதன்பின்பு பசும்பாலும் சக்கறையும் கலந்து யிறைக்கி வாசனைக்காக கொஞ்சம் ஜாதிக்காய் தூளாவது, கருவாப்பட்டை தூளாவது கலந்து சாப்பிட்டால் கொடிய ரோகம்-இருமல் இவைகளால் அவஸ்தைப்படும் பலயீனமுடையவருக்கு நல்ல பலனை யுண்டுபண்ணும். கைகால் அசதி நீங்கும். இது எத்தனை தடவை வேண்டுமானாலும் அப்பப்போது செய்து கொடுக்கலாம்.

Digital collection of Tamil Heritage Foundation



### சுக்கிலசுத்தி

காயசித்தியாகுங் கடியசிலேஷ்மமறும்
ஆயவிந்துநாதமிவை சுத்தியாம் - தாய்வற்கு
எந்திக்குங்கிட்டும் இலையினிந்தின்னாலெல்லாம்
தித்திக்கும் வேம்பதையே தேடு.

சக்கரை - வேம்பு - இஃது ஆயவர்களுக்கு எத்திக்கிலும் கிடைக்கும். இந்த (சக்கரை வேம்பு யிலையை) விடாமல் மண்டலக்கணக்காய்தின்றுவந்தால் காயசித்தியாகும். இரத்தம் யிருகும். சுக்கில சுரோணிதங்கள் சுத்தியாகும். இந்த தின்றால் வாய் தித்திக்கும்.

### காணுவாய்வுகட்கு.

சந்திரமல்லி மூலத்தை பாலில் அறைத்தருந்திவந்தால் தனுர்வாதம்முதலியதும் உடம்பு வாதிக்கும் காணுவாய்வுகள் யாவும் தீரும்.

### உந்திரோகவுக்கு

சந்திரகாந்தி சமூலத்தை பால்விட்டரைத்து பாலில் கலக்கி யுண்டுவந்தால் காபியிலுண்டாகும், தழலெரிச்சல்-நீர்கடுப்பு இவைதீரும்.

### வியர்தி யுற்பத்தி

சக்கரைவள்ளிக்கிழங்கை அடிக்கடி யுண்டுவந்தால் வயிர் மந்தம் - மூளை மூலம்- வயிற்றெரிச்சல்- வயர்கடுப்பு - மருந்துகள் முறிவு இத்தனை துற்குணங்களுண்டாக்கும்.

### சொரிகளுக்கு.

சரக்கொண்ணை பூவை எலுமிச்சம் பழச்சார்விட்டு அறைத்து உடம்பில் தேய்த்து குளித்துவந்தால், சொரி-கரப்பான்-தேமல் இவைதீரும்.

### பிரமியத்திற்கு.

சரக்கொண்ணை பூவையும் கொழுந்தையும் அறைத்து பாலில் கலக்கி யுண்டு வந்தால், பிரமியம்-வெட்டை-காமாலை-பாண்டு இவைகள் சாந்தியாகும்,

### கிரிமிகள்நீங்க.

சரக்கொண்ணைக் கொழுந்தை அவித்து பிழிந்த சாற்றில் சீனிசக்கரைக்கலந்து சுமார் அரிக்கால்படி உள்ளுக்குக் கொடுத்தால் கிரிமிகள்திமிர்பூச்சிகள் நீங்கும்.

### திமிருக்கு.

சங்கம் இலைச்சாறும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க்கலந்து ஒருவேளைக்கு கால்படி வீதம் மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



### சகலமூலத்திற்கும்

### பொதுமருந்து.

சதுரக்கள்ளியை துண்டு துண்டாய் நறுக்கி பானையில் ஒருபடி துண்டு வரையில் போட்டு 4-படி தண்ணீர் விட்டு வாய்ப்புறம் துணியினால் ஏடுகட்டி அடுப்பேற்றி கரும்குருவை அரிசிமாவை துணியின்மேல் பரப்பி புட்டவியல் செய்தெடுத்து மூன்றுநாள் கொடுக்க சகலமூலமும் சாந்தியாகும்.

## சா

### வெள்ளைநீர்சுருக்கு.

சாரபருப்பை பால்விட்டறைத்து ஜாலாமிசரியூரிய தண்ணியிற்கலந்து அதற்குத்தகுந்த பால்விட்டு சாப்பிடவும். இப்படி 4-5. வேளை சாப்பிட நீர்கடும்பு வெள்ளைவிழுதல் நீங்கும்.

### பேதியைக்கட்ட.

சாதிக்காய் ஒன்றைசிறு துண்டுகளாகநுணிக்கி நெய்யில்வரத்து புளிப்பு மாதுளம்பழத்தோல் அடுப்பிலிட்டு வதைக்கிக்கொண்டு அபினி -1. விராகனிடை ஜாதிக்காய் 4 விராகனிடை மாதளந்தோல் 5 விராகனிடை இதுகளைகல்வத்திலிட்டு தேன்விட்டு பதமாயரைத்து கடலையளவுஉருட்டி பேதிக்குதக்கபடி மூலைப்பாலிலாவது வாழைப்பூகிஷாயத்திலாது தேனிலாவது இரண்டுமூன்று வேளை கொடுக்கவும்.

### ஆரோக்கியத்திற்கு.

சாதிக்காயை தாம்பூலத்துடன் கடலையளவு உபயோகித்துவந்தால் தா பசுரம்போகும் தாதுபுஷ்டி யுண்டாகும் ஆனல்பித்தத்தையுண்டாக்குமாதலால் பசும்பால்சாப்பிட வேண்டியது.

### பிள்ளைகள்நீராமை கணத்திற்கு.

சாரணைக்காய் மூக்கு ரொட்டக்காய் பொடுதலைக்காய் துளசி சீரகம் ஓர் இனையாய்தட்டிப் போட்டுகிஷாயம்செய்து வார்க்கவும் சாந்தியாகும்.

### வாதவலிபிரமேகத்திற்கு.

சாரடைக்கிழங்கை பாலில் அறைத்துக் கலக்கியுண்டுவந்தால் சீதளம் நீரேற்றம் தடிப்புகுன்மம் வாதவலிசிறங்கு பிரமேகம் இவைதீரும்

Digital collection of Tamil Heritage Foundation



# சி

## கண்ணோய்உள்மூலத்திற்கு.

சிறுகொன்னை மூலத்தை அறைத்து பாலில்கலக்கி யுண்டுவந்தால்கண்ணோய் உஷ்ணம் உள்மூலம் இவைதீரும்.

## கல்வாய்வுக்கு.

சித்துழாப் பட்டைகொண்டுவந்து அதற்குசரியிடை சக்குதிப்பிலி மிளகு மோடி சன்னராஷ்டம் -தும்பராஷ்டம் - வாய்விளங்கம் இதுகள்போட்டு யிடித்து காரசாரம் சேர்ந்த கச்சைக்கருவாடு குழம்பு கூட்டி மேற்படி வஸ்துவை போட்டு குழம்புசெய்து ரசத்தைப்போல மிச்சமாய்விட்டுக் கொண்டுசாப்பிடவும். இரண்டுவிசை மலங்கழியும் கல்வாய்வுஉடனேதீரும். 2-3 வேளைசாப்பிட வேண்டியது.

## கால்பிளவுக்கு.

சிவன்வேம்புமூலத்தை பால்விட்டரைத்து பாலில்கலக்கியுண்டுவந்தால் சில்லரை விஷங்கள் கால்வெடிப்பு கரப்பான்ரிணங்கள் யாவும்தீரும்.

## அனேகரோகத்திற்கு.

சிவன் வேம்பு சமூலத்தை நிழலில் உலர்த்தி யிடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து சமனிடைச்சீனிசக்கரைக்கலந்து சீசாவில்வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு திருகடிப் பிரமாணம் தின்றுவந்தால் 18-விதமான குஷ்ட உற்பத்தி பாதத்திலுண்டாகும் வெடிப்பு தேகத்திலுண்டாகும் தடிப்பு-படர்தாமரை நமை-அரிப்பு-தேகத்தில் முள்ளுகுத்துவதைப்போல் குத்தல்-திமிர்- தலைநோய் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

## கன்ன வீக்கத்திற்கு

சிற்றகத்தியிலையும் வசம்பும் அரிசியும் ஒரே அளவாய் எடுத்தறைத்துபூசினல் கன்னவிக்கம் தீரும்.

## மேகசிரங்குக்கு,

சிறு செருப்படையும் ஈருள்ளயும் இடித்து சாறுபிழிந்து ஆறுதபா வடிகட்டி சாப்பிட பேதியாகும். மேகச்சிரங்கு முதலானவை நிவர்த்தியாகும்,

## கண்ரோகமுடையவருக்கு.

## காலில்தேய்க்கத்தைலம்.

சின்னியிலைச்சாறு-நல்லெண்ணை-வகைக்குப்படிகால் நாபிக்கிழங்குவிராகனிடை (கால்) இதை பொடித்து ஷ எண்ணையில் அறைத்து யாவும் ஒன்றாய்க்கலந்து வைத்துக்கொண்டு காலில் பாதத்தில் தேய்த்துவந்தால் கண்ணிலுள்ள சகல ரோகமும் நிவர்த்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### குளுமைதீர

சித்தாமுட்டியை துண்டுண்டாய் நறுக்கி பசும்பாலில்போட்டுக் காச்சி யிருத்து பாலை சாப்பிட்டு வருவதால். சீதளம்-குளுமை-வாயுவு தீரும். தீபனமு ண்டாம்.

### தொந்தரோகம்தீர.

சிவகரந்தையை உலர்த்தி யிடித்து சூரணம் செய்து சரியிடை சீனி கூட்டி திருகடி பிரமாணம் இருபோதும் மண்டலக்கணக்காய் தின்று வந்தால் தொந்த ரோகம் யாவத்தும்தீரும். அரோசகம்-இருமல்-மந்தம்-மாந்தம்-வாதம்-வாந்தி இவைதீரும். பசியுண்டாக்கும், அழகு கொடுக்கும், தேகம் பரிமளமுண் டாக்கும், விந்துகட்டும், சஞ்சீவி யென்றுபெயர்.

### விஷந்தீர.

சிரியாநங்கை யிலையைத் தின்னும்படி அப்பியாசப்படுத்தினவர்களுக்கு தேள்கடித்தால் ஏறாது, மற்ற எந்த விஷத்தாலும் பிராணபயமில்லை. ஆயாசம் தணியும் மேனியழகுண்டாகும் நேத்திரம் பிரகாசிக்கும்.

### நீர்கட்ட.

சிறுகட்டுக்கொடி யிலையை அதிகாலையில் எழுந்து ஒருபிடி யெடுத்து வாய்கொண்டமட்டும்மென்று தின்றால், நீர் ஒழுக்கு-நீர்தாரைக்கிருச்சினம் வெள்ளை இவை தீரும்.

### பிரமியத்திற்கு.

சிவந்த கொட்டைக் கரந்தை-ஈருள்ளி வகைக்கு ஒருபிடி யெடுத்துயிடித்து சாறுபிழிந்து அதற்கு சரியிடை நல்லெண்ணை கலந்துக்கொடுக்க நிவர்த்தியாகும்.

### பித்தவாய்வுக்கு.

சிவதைவேர்-திரிகடுகு சரியிடை கொண்டு சூரணித்து சக்கரை சமன் கலந்து திருகடியளவு இருவேளையும் தின்று வந்தால் நிவர்த்தியாகும்.

### இரத்தபித்தத்திற்கு.

சிறுகீரை வேரை பச்சரிசி கழுவிய நீரின்மட்டி விட்டு விட்டுஅறைத்துத் தேனில் குழைப்பிக் கொடுக்கத் தீரும்.

### சகலவாதத்திற்கும்.

சித்திரமூலம்-மிளகருணை-நொச்சி இவைகளின் வேரபட்டை வகைக்கு 5 - பலம் எடுத்து இடித்து சூரணித்து திருகடி யளவு குளுந்த தண்ணீரில் கொடுக்கத்தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



### விஷசுரத்திற்குகிஷாயம்.

சிறுவழுதலே-சீந்தில்-தாமரைவளையம் - கோரைக்கிழங்கு-சுக்கு இவை ள் வகைக்கு ஒருபலம் எடுத்து சிதைத்து 2-படி தண்ணீர் விட்டுகால்படியாக வடித்து மூன்றுவேளைக் கொடுக்க நிவர்த்தியாகும்.

### அதிசாரசுரத்திற்கு

சித்தாமுட்டிவேர்-வில்வக்காய்-சீந்தில் தண்டு- நிலவேம்பு - சுக்கு-கோ ரைக்கிழங்கு-கஞ்சாவிளை வகைக்கு பலம் கால் - நாலுக்கொருபங்காய் கிஷா யம் காச்சி கொடுக்கவும் தீரும்.

### கண்ணில்வியாதிவராதிருக்க.

சித்தாமணக்கன் வேரை அரைத்து பசும்பாலில் கலக்கி காச்சி புரை நத்திக்கடைந்து வெண்ணெ யெடுத்து அந்த வெண்ணெயை கண்ணில் தீட்டி வந்தால் கண்ணில் யாதொரு வியாதியும் வராது கண்குளிர்ச்சியாக யிருக்கும்.

—∘○◇○∘—

# சீ

### வெட்டுகாயத்திற்கு.

சீதாசெங்கழுநீர் இலேயை அரைத்து வெட்டு காயத்தில் வைத்துக் கட் டினுல் இரண்டு மூன்று கட்டில் ஆரிவிடும்.

### மேகரோகிகளுக்கு உண்டாகும் தாகரோகத்திற்கு.

சீந்தில் தண்டும் நெற்பொரியும் சமனுய்ப் போட்டு தண்ணியிற் காச்சி வேண்டியபோது தாகத்துற்குக் கொடுத்துவரவேண்டியது.

### பித்தத்திற்கு.

சீரகம்-சுக்கு-ஏலம்-நெல்லி வற்றல்-இவை சமன்கொண்டிடித்து இதற் குப்பாதி சீனி கலந்து திரிகடிப் பிரமாணம் இருவேளையும் தின்றுவர நிவர்த்தி யாகும்.

### மந்தவாய்வுக்கு.

சீரகம்-ஏலம்-பச்சைகற்பூரம்-ஓர்நிறையாய் சூரணித்து சரிபங்கு சீனி க்கரை கூட்டி திரிகடி யளவு அந்திசந்திக் கொண்டுவரத் தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



### குளிர்சுரத்திற்கு கிஷாயம்.

சீந்தில்-நிலவேம்பு-சிறுகாஞ்சொரி-மல்லி- வட்டதிருப்பி- விலாமிச்சம் வேர்-வேலிபருத்தி-பற்பாடகம்-சுக்கு வகைக்கு ஒரு பலம் இடித்துப் போட்டு தண்ணீர் விட்டு அறைப்படியாகக் காச்சி ஆறு வேளை கொடுக்க சாந்தியாகும்.

### இதுவுமது.

சீரகமும் குருக்தொட்டி வேரும் ஒர்நிறையாயெடுத்து கிஷாயம்செய்து ஆறுவேளை கொடுக்ச சாந்தியாகும்.

### உடம்புநோயும் காச்சலுக்கும்.

சீதேவிப் பூண்டை யிடித்து புட்டவித்து சாறுபிழிந்து கடுகு ரோகணியை அறைத்துக் கலக்கி வெள்ளாட்டுப்பாலுடன் கலந்து கொடுக்க நிவர்த்தியாகும்.

### படர்தாமரைக்கு

சீமை அகத்தி யிலையை அறைத்து தேங்காயெண்ணெயில் குழைத்து படர்தாமரை-இடுப்பரணைமுதலிய படைகளுக்குத்தேய்த்தால் நிவர்த்தியாகும்

## சு

### மூலவாய்வு சாந்தி.

சுக்கை யிடித்து வஸ்திரகாயம் செய்து · அப்போது கரந்தபால் அரி... கால்படியில் திரிகடிப்பிரமாணம் சுக்குத்தூள் போட்டு சாப்பிடவும். இப்... சிலநாள் சாப்பிட்டால் மூலவாய்வு உருத்தி வாய்வு தீரும் பசியுண்டாம்.

### வாய்வுமுதலிய சில்லரைவிடந்தீர.

சுடுதரட்டி மூலத்தை பாலில் அறைத்தருந்திவந்தால் வாய்வு சில்லரை விடங்கள் புடைகிரந்தி கரப்பான் இவை தீரும்.

### நீர்கட்டு உடைக்க.

சுறாமீன்தலையிலிருக்கிற இரண்டு கல்லை யெடுத்து உலர்த்தி இளம்... ன்னீரில் உரைத்துக் கொடுக்க உடனே நீர்கட்டு உடையும்.

### பிரமியத்திற்கு பொதுப்பிரயோகம்.

சுண்ணாம்பு தெளிவு, தண்ணீர்-நல்லெண்ணை வகைக்குப்படி மாகா ஒன்றாய்க் கலந்துகொடுக்கத் தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## இரத்தமூலத்திற்கு.

சுருள்பட்டையை சூரணித்து தேனில் குழைத்து இருபோது தின்று வந்தால் இரத்தமூலம் சாந்தியாகும்.

சுண்டைக்காய் குணம்

வெண்பா.

நெஞ்சிற் கபம்போகும் நிரைகிருமி நோயும்போம்
விஞ்சுவாதத்தின் விளைவும்போம் —வஞ்சியரோ
வாயைக்கசப்பிக்கும் மாமலையி லுள்ளசுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்.

சுண்டைவற்றல் உபயோகம்

வெண்பா.

பித்தவரோசகம்போம் பேராப்புழுச்சாகும்
உற்றகிருணியும்போம் உட்பசியாம்—சத்தியமாய்
பண்டைக்குதவாமம் பற்றுமிங்கியாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச் சொல்.

—o○✻○o—

# சூ

## சுகவிரோசனம்.

சூரத்து நிலாவிரையை யிடித்து வஸ்திரகாயம்செய்து அதற்குசரியிடை சுக்கு-அதிமதுரம்-ரோஜாமொக்கு- விளக்கெண்ணெயில்வருத்தபிஞ்சிகடுக்காய்-இவைகளை யிடித்து வஸ்திரகாயம் செய்து-சேர்த்து அரைப்பங்கு-சீனிகூட்டி புட்டியில் வைத்துக்கொண்டு - அரைரூபாயிடை எடுத்து வென்னீரில் கலக்கி யுண்டுவந்தால் மலச்கட்டுநீங்கும் - இரண்டொருவிசை விரோசனமாகும்.

## வெட்பந்தணிய.

சூரிய காந்தியைஅரைத்து பாலில்கலக்கியுண்டுவந்தால், சூடு-ஊஷ்ணம் இவைகளைத் தணிக்கும்.

சூரியகாந்தி - சந்திரகாந்தி

இரண்டின்குணம்

வெண்பா.

சந்திரகாந்திக்குத் தழலெரிச்சல் நீர்கடுப்பும்
உந்திவலியாவு மொடுங்குங்காண்—சந்திலரும்
பாரியவாதம் பருகுநீரேற்றமும்போம்
சூரியகாந்திக்குச் சொல்.

Digital collection of Tamil Heritage Foundation



# செ

## சீழ்மூலக்கிஷாயம்.

செந்நாயுருவி ஒருபிடி கற்றாழஞ் சோறுஒருபிடி கொஞ்சம் சர்க்கரை இவைகளை காற்படி நல்லெண்ணெயிற் போட்டு காச்சி இருவேளையுமாக பத்து நாளருந்திவர சாந்தியாகும்.

## நீரடைப்புக்குசாந்தி.

செம்பசளை - அதாவது செகப்புப் பசறையை பச்சைப்பயறு கூட்டிகிறமமாய் சமைத்து உண்டால் நீர்கட்டுஉடையும் அரோசகம்தீரும்.

## இறத்தவெள்ளைபிரமியத்திற்கு.

செம்பரத்தம்பூவை புளிப்புத்தயிர்விட்டரைத்து தயிரிற்கலக்கி மிதமாய்உண்டுவந்தால் இரத்தவெள்ளை பிரமியம் பெரும்பாடு இவைதீரும்.

## கண்குளிர்ச்சிக்கு.

செண்பகப்பூவை-வேண்டியவரையில் பசும்பாலில் போட்டுக்காச்சியுண்டுவந்தால் மேகம்போம்-அஸ்திசுரம் வாதபித்தம் இவைதீரும். கண்குளிர்ச்சியுண்டாம் தாதுகட்டும் போகம்மிகுதியுண்டாம்,

## கீல்வலி காசத்திற்கு.

செங்தொட்டிவேரை-பால்விட்டரைத்து பாலில்கலக்கி யுண்டுவந்தால் கபம்கரப்பன் கீல்வலி சுரம் சுவாசகாசம் வாதம்போகும். பெண்கள் உண்டு வந்தால் கட்டுபட்ட சூதகத்தைஉடைக்கும்.

## திரிதோஷசாந்தி.

செந்தாழப்பூவை பாலில்அறைத்து உபயோகித்தாலும் சூரணித்து சீனி கூட்டி உண்டு வந்தாலும் கபம் காசம் நீரேற்றம் சகல தோஷமும் தலைநோய் இவைதீரும்.

## குறைநோய்களுக்கு.

செவ்வல்லிக்கொடியை சூரணித்து சமனிடைதிரிகடுகு சூரணம்கூட்டியாவுக்கும் அறைப்பங்கு சீனிகூட்டி திருகடியளவு உண்டுவந்தால் கரப்பான் குட்ட உற்பத்தி குறைநோய் மூலரோகம் இவைதீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## கட்டிகள் உடைய

செகப்புக்கீரைத்தண்டு அதாவது செங்கீரைத்தண்டு யிலையை அறைத்து கட்டிகள் பருவுகளுக்குத் தடவிவந்தால் பழுத்து உடையும்.

## தேகக்குளிர்ச்சிக்கு

செகப்புக் கற்றாழை சோற்றை எழுதரம் சுத்தி செய்து சீனி கூட்டி பிசைந்து உண்டு வந்தாலும் சிலாகித்து கல்நார் முதலிய பற்பங்கள் கூட்டி யுண்டுவந்தால் கூடிய சீக்கிரத்தில் உடம்பு குளிர்ச்சி யுண்டாகும் வெட்டை சூடு தணியும்.

## அழல் தணிய

செங்கழுநீர்க் கிழங்கை சூரணித்தாவது, அறைத்து பாலில் கலக்கியாவது உண்டு வந்தால், காசம்-ஸ்திரீகளால் வந்த தேக அழல் – திரிதோஷம் – பித்தாதிக்கம் இவை தீரும். கண்குளிர்ச்சி யுண்டாகும்.

## அசாத்தியநோய்க்குத் தயிலம்.

செம்முள்ளி வேண்டிய வரையில் கொண்டுவந்து சிதைத்துப்போட்டு எட்டுக்கொரு பங்காய் கிஷாயம் வைத்து சரியிடை நல்லெண்ணை விட்டு தாழை விழுது- ஏலம்- கருஞ்சீரகம்- கார்கோலரிசி வகைக்கு கொஞ்சம் எடுத்து பால்விட்டரைத்துக் கலக்கி தயிலபதமாய் காச்சி முழுகி வந்தால், க்ஷயம்-ஈளை மந்தார காசம் – அண்டவாதம் இவை தீரும்.

## கரப்பான் ரிணங்களுக்கு.

செங்கத்தாரி அல்லது செஞ்சூரை மூலத்தை பாலில் அறைத்து பாலிற் கொள்ளகிரந்தி-செவ்வாப்புக்கட்டி-செங்கரப்பான்-கருங்கரப்பான்-கொள்ளிக் கரப்பான்-கரப்பான்-பலவிஷங்களும் தீரும்.

## இதுவுமது.

செங்கத்தாரிப்பட்டையை அறைத்து உடம்பில் பூச ஷை வியாதிகள் யாவும் தீரும்.

---

☞ இந்த மூலிகைப்பிரயோகங்களில் கூட்டி முடிக்க வேண்டிய சில மாத்திரை-பற்பம்-சிந்தூரம் இவைகளை (**பார்வதி பரணியத்தில்**) சொல்லப்படும். யாவரும் எளிதில் கையாடக் கூடிய சிறிய பாகங்களாகவே யிருக்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



# த

## படைகளுக்கு.

தகரை யென்னும் சிறிய தாபரத்தின் சமூலத்தைக்கொண்டுவந்து சிதைத்து அத்துடன் கொஞ்சம் கற்பூரம் சாம்பிராணி இவைகள் சேர்த்து குழித்தயில மிறக்கி படர்தாமரை யிடெப்புக்கடுவன் முதலிய படைகளுக்குத் தடவினால் உதிர்ந்துவிடும்.

## குழந்தை வியாதிக்கு

தழுதாழை யென்னும் மூலிகை தனியாயாவது செருப்படை - கற்பூரவள்ளி - கம்மாறு வெற்றிலை இவை சமன் சேர்த்து பிட்டவித்துப் பிழிந்த ரசத்தில், காரமாத்திரை-லிங்கமாத்திரை-பேதிமாத்திரை இதுகளில் ஏதேனும் இழைத்து வார்த்தால் மாந்தங்கள் முதலிய குழந்தை வியாதிகள் தீரும்.

## இந்திரகோப உபயோகம்.

தம்பலப்பூச்சி யென்னும் இந்திர கோபப் பூச்சியை உலர்த்தி பொடித்து தேனில் இழைத்து ஒருவாரம் தின்றால் பெரும்பாடு வியாதியை நிவர்த்தியாக்கும்.

## இதுவுமது.

தம்பலப் பூச்சியை பொடித்து மூலரிணத்தின்மேல் தூவிவைத்தால் மூலம் ஆறிப்போகும்.

## இதுவுமது.

தம்பலப் பூச்சியை சிகப்புப் பட்டுத்துணியில் முடிந்து கழுத்தில் கட்டியிருந்தால் தீராத சுரம் தீரும்.

## இதுவுமது.

தம்பலப் பூச்சியை உயிருடன் பிடித்து நல்ல வெல்லத்தில் வைத்து உருண்டை செய்து வாயிற்போட்டு விழுங்கவேண்டியது. இப்படி ஒருவருஷத்திற்கு ஒருவாரம் தினம் ஒன்று விழுங்கி வந்தால் மறுவருஷம் வரையில் தாது விருத்தியதிகரிக்கும்.

## தாதுபுஷ்டிக்கு

தண்ணிவிட்டான் கிழங்கை யிடித்து பாலில் போட்டு காச்சி யுண்டுவந்தால் தாதுபுஷ்டி யுண்டாகும் சிலநாள் விடாமல் சாப்பிடவும்.

Digital collection of Tamil Heritage Foundation



### இதுவுமது.

தண்ணீர்விட்டான் கிழங்கை பாலில் உபயோகித்து வந்தால் விந்துகட்டுபடும். சுக்கில பிரமியம்-நீர்எரிவு-காந்தல்-கரப்பன் இவை தீரும்.

### சூலை சொறி-சிரங்குக்கு.

தலைச்சுருளி யென்னும் மூலிகையை பாலில் உண்டு வந்தால், அரவுகடி முதலிய பழயவிஷம்-சூலை-சொறி-சிரங்கு தீரும். தேகத்தில் பலமுண்டாகும்.

### பல்லுநோய்க்கு,

தக்காளி அல்லது மணித்தக்காளி சமூலங் கொண்டு வந்து கிஷாயம்வைத்து நாலுக்கொரு பங்காய் இரக்கி வாய் கொப்பளித்து வந்தால், பல்லுநோய்-உண்ணாக்கு வளர்ச்சி தொண்டைநோய் இவைதீரும்

### பொடியிருமலுக்கு.

திவசுமுருங்கை சமூலம் சூரணம்செய்து சமன்சக்கரைக் கூட்டிவேளைக்கு திருகடிபிரமாணம் யெடுத்து தேனில்குழைத்து தின்றுவரவும் பொடியிருமல் கபம்கோழை தொந்தரோகம்தீரும்.

---

## தா

### வாயில்நீர்ஒழுக்களுக்கு.

தாணிக்காயை சுட்டுசூரணம் செய்து சமனிடை சக்கரைகூட்டி நித்தம் ஒருவிராகநிடை யெடுத்து வென்னீரில் சாப்பிட்டுவந்தால்வாயில்அதிகநீர் ஒழுக்கல் கட்டுபடும் கண்குளிர்ச்சியுண்டாகும்.

### பல்நோய்க்கு.

— தாளிசப்பத்திரியை பொடிசெய்து பல்லுதேய்த்துக் கொண்டுவந்தால் பல்வலிதீரும்.

### சர்பத்து

தாழம்பூவின்வேரை கிஷாயம் வைத்து சக்கரைசேர்த்து சர்ப்பத்துபோல்பாகுபதமாய் காச்சிசாப்பிட்டுவந்தால் சொரிசிரங்கு தினவுஇதுகள்தீரும்.

### கலிதமாகாதிருக்க

தாழம்பூவின் உள்ளேயிருக்கும் விபூதியை யெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவால் யிழைத்து ஆண்குறியில்தடவிப்புணர்ந்தால் விந்துசீக்கிரம்கலிதமாகாது.

Digital collection of Tamil Heritage Foundation



குளிர்ச்சிக்கு.

தாமரைக்கிழங்கைபாலில் அறைத்து பாலில்உட்கொண்டுவந்தால் மேக ப்பெட்டை கிரிச்சினம் இவைதீரும். தேககாந்தியும் கண்பிரகாசமும் உடம்பு குளிர்ச்சியும் உண்டாகும்.

# தி

சிறுவிஷங்களுக்கு.

தில்லைவித்தை பாலில் அறைத்து உண்டுவந்தால், சில்லரை விஷங்கள் பெருவிஷங்கள் திமிர்வாய்வு கபம் கோழை குட்டம் இவை சாந்தியாகும்.

இந்திரியம்கட்ட.

திசைகருடன் மயன்னும் கட்டுக் கொடிமூலத்தை பாலில் உட்கொண் டுவந்தால் மலக்கழிச்சல் பேதிஇவைதீரும். நீற்றயிந்திரியத்தைக்கட்டும், இதன் யிலை தண்ணீரைககட்டும்.

அறிவுண்டாக.

திருநீற்றுப்பச்சிலையைபாலில்அறைத்துக் கலந்துஉட்கொண்டால் கபவா ந்தியை நிவர்த்தியாக்கும் அறிவுதுலங்கும்.

# து

கருமேகசாந்தி.

துத்திவிரையை பசும்பாலில் அரைத்துப்பாலில் கலைக்கிநீடித்து உண்டு வந்தால் கைகாலில்படருகிற கருமேகம் குட்டம் வெப்பு இவைதீரும்.

மேகசூட்டுக்கு

துத்தியிலையைக் கிஷாயம்வைத்து பாலும்சக்கறையும்கூட்டிகாப்பிபோ ல்சாப்பிட்டுவரவும் தணியும்.

மலச்சிக்கலுக்கு.

துத்தியிலையில் வெங்காயம் சிறுபருபோட்டு கிரமப்படிசமைத்துத்தி ன்று வந்தால் மலச்சிக்கல் தீரும்மூலச்சூடு தணியும்.

நீர்சுருக்கு

துத்திவேர் 3 பலம் திராட்சிப்பழம் $1\frac{1}{2}$. பலம் இரண்டும் கிஷாயம்வை த்து கொஞ்சம் நெய்விட்டுசாப்பிடவும் நீர்சுருக்கு தீரும்.

பருவுகள் உடைய.

துத்தியிலையை அறைத்து பருவுகள்மேல்தடவிவந்தாலும்அல்லதுதுத்தி யிலையில் காடி வார்த்துக்கிளரிக் கட்டிவந்தாலும் பருவுகள் உடையும்.

Digital collection of Tamil Heritage Foundation



# தூ

## கபரோகத்திற்கு

தூதுளங்காயை துவரம் பருப்பிட்டு கிரமப்படி சமைத்துத் தின்றுவந் தால் கபரோகம் பயித்திய தோஷம் பித்தவாய்வு இவைகள் சாந்தியாகும்.

## மந்தவாய்வுக்கு.

தூதுவேளை யிலையை குருக அரிந்து, துவரம் பருப்பு மிளகு இவை களைக் கூட்டி கிரமப்படி குளம்பு செய்து இரண்டொருவேளை சாதத்துடன் சாப்பிட்டால் உடம்பு ஆதியந்தமும் குந்தல் - குடைச்சல்- திரேகபாரம் -வயர் மந்தம்-மலச்சிக்கல் யாவும் தீரும்.

# தெ

## நாதவிருத்தி.

தென்னம்பாளை மிகவும் இளசியாகக் கொண்டுவந்து அதின் அரிசிகளை யெடுத்து பால்விட்டரைத்து எலிமிச்சங்காயளவு சாப்பிடவும். இப்படி காலை மாலை இருவேளையும் தின்றுவந்தால் நாதம் விருத்தியாகும் இடுப்புவலிவு உண் டாகும்.

# தே

## ஈளை இருமலுக்கு.

தேத்தான் வித்தை ஊரவைத்துப் பாலில் அறைத்து பாலில் கலக்கி யுண்டு வந்தால், பித்தகாசம்-க்ஷயம்-ஈளை-இருமல்-மேகம் - பிரமியம்-உந்திபுண்-கிருச்சிறம்-கண்ணெரிவு-தேகக்கடுப்பு இவைதீரும். தீபனமுண்டாகும்.

## பழஞ்சுரத்திற்கு.

தேவதாரி மூலத்தை பாலில் அறைத்து பாலில் கலக்கி உண்டுவந்தால், பழஞ்சுரம்-பீனிசம்-நீரேற்றம் இவை தீரும்.

## தேள்கொட்டினவிஷத்திற்கு.

தேள் கொட்டினவுடனே தேங்காயை உடைத்து நசுக்கியாவது திருகி யாவது, பால்பிழிந்து கொஞ்சம் குடித்தால் உடனே ஜில்லென்றிருக்கும்.

## மூலச்சூட்டுக்கு.

தேங்காயின் வழுக்கை யுடன் கற்கண்டு தூள் சேர்த்து தின்றுவந்தால் மூலச்சூட்டை கண்டிக்கும், இந்திரியம் விருத்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### வயற்றுப்பூச்சிகளுக்கு.

தேங்காயை நெல்லுடன் போட்டு வேகித்து யெடுத்து சிறுவர்களுக்குக் கொடுத்தால் வயற்றிலுள்ள கிருமிகள் வந்துவிடும்.

### தலைச்சுண்டைக்கு.

தேள் கொடுக்கிலையை அரைத்து நல்லெண்ணையில்கலந்து சூரியபுடம் வைத்து தலைக்குத்தடவி ஊரவைத்து முழுகவும். இப்படி செய்வதினால் தலைச்சுண்டு சிரங்கு மாறும்.

## தை

### காதிரைச்சலுக்கு.

தைவேளை யிலையை இடித்துப் பிழிந்தசாறும் நல்லெண்ணையும் சமன் கூட்டிக் காச்சி தயிலபதமா யிறக்கி காதில் விட்டுவரவும்.

## தொ

### மகாரோகங்களுக்கு.

தொட்டால் சுருங்கி யிருக்கும் இடத்தைப்பார்த்து குறிப்பிட்டுக்கொண்டு சூரியன் கடகராசியிலிருக்கும்போது, ஸ்நானபானம் செய்து பரிசுத்தனாக ஷை மூலிகை இருக்குமிடத்தில் சென்று மதுரமான வஸ்துக்களை நிவேதனம் செய்து பரங்கிசாம்பிராணியை ஒத்த (சனிக்கிரக) சம்மந்தமான வஸ்துக்களை தூபதீபங்கொடுத்து தன்னுடைய நிழல் செடியின் பேரில் படாமல் வேரோடு பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு சூரியன் கடகராசியில் வரும்போது யிடித்து வஸ்திரகாயம் செய்து ஒருமிளகளவு சூரணத்தை அப்போது கரந்த பசுவின்பாலில் கலந்து (தூலா-அமூர்த தூலசனலாதான் நமோ-நமோ-கவா.) என்ற மந்திரத்தை ஏழுதிரம் ஜெபித்துக் குடிக்கவும் இப்படி ஒருவாரம் விடாமல் குடித்தால் வயற்றிலுள்ள வண்டலைப் பற்றிய ரோகங்கள் யாவும் நிவர்த்தியாகும். சகல நளிர் சுரங்களும் தொந்தரோகங்களும் தீரும்.

### மேற்சொன்ன கிரமப்படிசெய்த

தொட்டாற் சுருங்கி சூரணத்தை இரண்டுவாரம் முன்சொன்னபடி சாப்பிட்டால் சகல மூலரோகங்களும் புறையோடுகிற ரிணங்களும் காமாலை முதலிய ரோகங்கள் தீரும்.

### மேற்சொன்ன கிரமப்படிசெய்த

தொட்டாற்சுருங்கி சூரணத்தை முன் கூறியபடியே மூன்றுவாரம் சாப்பிட்டால் பெருவியாதிகள்- குட்டம்- படைகள்- புறங்கிப்புண்கள் முதலிய

Digital collection of Tamil Heritage Foundation



ரோகங்கள் நிவர்த்தியாகும். இதைநித்தியம் உபயோகப்படுத்தி வந்தால் ஆண்ம சக்தி யதிகரிக்கும். இந்த மூலிகையின் உபயோகத்தை (இந்து சாஸ்திரிகளால்) மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இதில் எழுதியிருக்கும் மந்திரம் (பார்சி) பாஷையிலிருந்து மொழிபெயர்த்ததாலையால், யுச்சரிப்பு பேதப்பட்டிருக்கும் என யோசிக்கப்படுகிறது. ஆகையால் தெரிந்தவர்களைக்கொண்டு திருத்திக்கொள்ளவேண்டும்.

# ந

## குருக்குவலிவாய்வுக்கு.

நருக்குமூல மென்கிற கண்ட திப்பிலியை யறைத்துப் பாலிற்கொள்ள குருக்குவலி வாய்வு தோஷம்- வாததோஷம்-நாவரட்சி யிவை தீரும்.

## திரேகபலமுண்டாக

நத்தைச்சூரி வித்தை அறைத்து அல்லது சூரணித்து பாலில் உட்கொண்டு வந்தால் திரேகம் பலமுண்டாகும் விந்து அதிகரிக்கும்.

## யானை சொரிக்கு

நரிக்கொண்ணை மூலத்தை பாலில் உபயோகித்து வந்தால், யானை சொரிகிரிமிப்புடை-அரிப்புடை இவை தீரும்.

## பலரோகங்களுக்கு.

நன்னாரி வேர் – பச்சையாகக் கொண்டுவந்து கொட்டைப்பாக்களவுஎடுத்து அரிக்கால்படி பசும்பாலில் கலக்கி சாப்பிடவும். இப்படி 20 நாள் சாப்பிட்டால், மூலக் கொதிப்பு- அஸ்திகாங்கை – மேகச்சூடு- மேகவெட்டை- நீர்கடுப்பு-நீர் இத்து விழுதல் முதல் மூத்திரக்கிரிச்சினம்– உள்வரட்சியினால் காணும் இருமல் இவை தீரும். இந்த வஸ்துவை நாட்பட சாப்பிட்டு வந்தால் நரை திரை மாறும்.

## புரயிசிவு தலைவலிக்கு.

நஞ்சறுப்பான் பூண்டு கொஞ்சம் எடுத்து ஒன்றிரண்டாய் தட்டி நல்லெண்ணையில் போட்டுக் காச்சி தலைமுழுகி வந்தால் ஷ ரோகம் தீரும்.

## படைகளுக்கு.

நத்தையை சுட்டசாம்பலில் தேன்விட்டிழைத்து படைகள் ஓரத்தில் வரும் புண்களின்மேல் தடவினால் குணப்படும்.

Digital collection of Tamil Heritage Foundation



### பல் வலிக்கு.

நன்னாரிவேர் கஷாயத்தில் கொஞ்சம் காடிவிட்டு வாய் கொப்பளித்து வந்தால் பல்வலி சவுக்கியமாகும்.

### கண்மாசு நீங்க.

நவாச் சாரத்தை முலைப்பாலில் இழைத்து கண்ரிப்பைமேல் பூச கண் மாசுகளை யருக்கும்.

### மயிர் உதிராதிருக்க.

நவாச் சாரத்தை தேனில் உரைத்துப் பூச மயிர் உதிர்வதை நிருத்தும்

### காது நோய்க்கு.

நல்லெண்ணை ஒருபலத்தில் கருப்பாம் பூச்சி ஒன்று போட்டுக் காச்சி காதில் இரண்டொரு வேளை விடவும் தீரும்.

### வீக்கம் கறைய.

நத்தைச்சூரி யென்னும் பூண்டை அறைத்துகல்லைப்போன்ற வீக்கத்திற்குத் தடவினாலும் கறைந்துப்போகும்.

### கண்ணோய்க்கு.

நந்தியா வட்டைப் பூவைப் பிழிந்து அந்த சாற்றை கண்ணுக்கு விட்டால் கண்காசம் படலம் இவை தீரும்.

---

## நா

### நாள்பட்ட யிருமலுக்கு

நாக்குப்பூச்சி யென்னும் பூனகத்தை எள்ளெண்ணெயில் போட்டுக் கா ச்சி குடிக்க நாள்பட்ட யிருமல் நிவர்த்தியாகும். ரிணங்களில் தடவினால் ஆரிப் போகும்.

### கிராணிக்கு

நாவல் வித்தை பாலில் அறைத்து உண்டால், கிராணி- நீரிழிவு-மூலச் சூட்டின் கிராணியிவைபோம்,

### இதுவுமது.

நாவல்பட்டையை சூரணித்து எருமைத்தயிரிற் கலந்துஉண்டுவந்தால், கிராணி-காசம் தீரும்.

### முகவசியம்.

நாயுருவி கட்டையினால் பல் துலக்கி வந்தால், முகவசியம் உண்டாம் லட்மீகடாட்சமுண்டாம்.

Digital collection of Tamil Heritage Foundation



### சூதகம் உடைய.

நாயுருவி சமூலமும், வாழைசருகு - மூங்கில் குருத்து இவை கஷாயம் வைத்து கொடுத்தால் பெண்கள் வயற்று அழுக்கைத் தள்ளும் நாவரட்சி தீரும்.

### சீழ் எடுக்க.

நாகதாளிப்படையின் முள்ளைச் சீவிப்போட்டு கும்பியில் சொருகி வெந்தபிறகு பிசைந் துருட்டி பில்லைதட்டி துளிவிளக்கெண்ணை தடவி உடைந்த கட்டிகள்மேல் வைத்துக் கட்டினால் அதிலுள்ள சீழ் வெளிப்படும்.

### உதிரவாதத்திற்கு.

நாய்க்கடுகை கிரமப்படி துகையல் செய்து தின்று வந்தால், உதிரவாதம்-சூதகவாய்வு-குன்மம் சாந்தியாகும். மலக்கட்டை யுண்டாக்கும். இதை பேய்க்கு புகைபோடுவதும் உண்டு.

---

# நி

### உடம்பு பூரிக்க.

நிலாவிரை யென்னும் நிலவாகை சமூலம் பச்சையாகக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி யிடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு திருகடிப்பிரமாணம் எடுத்து பசும் நெய்யில் குழைத்து தின்றுவந்தால் உடம்பு பூரிக்கும் இரத்தம் சுத்தியாகும்.

### உடம்புசுருங்க.

நிலாவிரைச் சூரணத்தை இருவேளையும் திருகடிப்பிரமாணம் தேனில் குழைத்து உண்டு வந்தால் உடம்பு சுருங்கும்.

### எலிகடிக்கு

நிலாவிரைச் சூரணத்தை சித்தாமணக் கெண்ணையில் குழைத்து உண்டு. வந்தால் எலிகடிவிஷம் பயித்தியம்,சில்லரை விஷம் எட்பம்இவைதீரும் பத்தியமிருக்கவேண்டும்.

### கிருமி நீங்க.

நிலாவிரை சூரணத்தை வென்னீரிற் கொண்டுவந்தால், கிருமிகள் திமிர்பூச்சிகள் யாவும் மலத்துடன் நீங்கிப்போகும்.

### சமியாமைக்கு.

நிலாவிரைச் சூரணத்தை பசுவின் மோரில் ஒருவேளைக்கு திருகடிப்பிரமாணம் உட்கொண்டு வந்தால் பெண்கள் சமியாமை நீங்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



## பாண்டுரோகத்திற்கு.

நிலாவிரைச் சூரணத்தை எருமை சாணிப்பாலில் திருகடியளவு இருவேளையும் உட்கொண்டு வந்தால், பாண்டு – நீர்க்கோவை இதுகள் தீரும் பத்தியம்.

## உடல் தடிக்க.

நிலாவிரைச் சூரணத்தை பாகலிலைச் சாற்றில் குழைத்துண்டுவந்தால் இளைத்த தேகம் தடிக்கும்.

## தேள் விஷத்திற்கு.

நிலாவிரைச் சூரணத்தை குப்பைமேனிச் சாற்றில் குழைத்து ஒருநாளைக்கு மூன்றுவேளை யுண்டால் தேள்விஷம் நீங்கும்.

## பெருச்சாளி கடிக்கு.

நிலாவிரைச் சூரணத்தை ஆலம்பழுப்புச் சாற்றில் மத்தித்து உண்டுவந்தால் பெருச்சாளி கடிவிஷம் தீரும் பத்தியம்.

## செவ்வட்டைக்கடிக்கு.

நிலாவிரைச் சூரணத்தை வேப்பம் பட்டைச் சாற்றில்மத்தித்து உண்டுவந்தால் செவ்வட்டை கடிதீரும். பத்தியம்.

## சகலவிஷத்திற்கு.

நிலாவிரைச் சூரணத்தை எலிமிச்சம் பழச்சாற்றில் குழைத்து தின்றுவந்தால் சகல விஷமும் தீரும். பத்தியம்.

## அரணை வண்டு கடிகளுக்கு.

நிலாவிரைச் சூரணத்தை அவுரி யிலைச்சாற்றில் குழைத்து தின்று வந்தால், அரணை–வண்டு இதுகளின் விஷம் தீரும்.

## க்ஷயம்-ஈளைக்கு

நிலாவிரைச் சூரணத்தை கரசனுங்கண்ணி–கண்டங்கத்திரி– இதுகளின் சாற்றில் குழைத்து தின்று வந்தால், ஈளை–க்ஷயம் இதுகள் தீரும்.

## மாரல் சுரத்திற்கு

நிலாவிரைச் சூரணத்தை கொடிக்கள்ளிச் சாற்றில் குழைத்துத் தின்று வந்தால், நாள்விட்டு நாள் காய்கிற மாரல் சுரம் – குளிர்சுரம் இதுகள் தீரும்.

## சோகை காமாலைக்கு.

நிலாவிரைச் சூரணத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில் கலக்கி யுண்டு வந்தால், சோகை–பித்தசோகை–காமாலை தீரும். குட்டரோகமும் தடிப்பும் சமனியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### நீருமைரோகத்திற்கு.

நிலாவிரை சூரணத்தை பசுவின் கோமயத்தில் கலக்கியுண்டுவந்தால் சொரி சிறங்கு-பெருவயறு மகோதரம் நீர்கோவை நீராமை யிவைகள் தீரும் பத்தியம்.

### அஜீரணத்திற்கு.

நிலக்கடம்பு,பாலில்அறைத்துண்டால் அஜீரணம் கிரிமி ஜன்னி நேத்திரநோய் பலவிஷம் தீரும் மண்டையிலுண்டான நீரேற்றத்தை நீக்கும்.

### கண்சொருகல்கொட்டாவிக்கு

நிலக்குமிள் சமூலத்தைபாலில் அறைத்துண்டுவந்தால் கண்சொருகல்கல்லடைப்புகொட்டாவி சீதளம்பேதிமாந்தம் வாதவலியும் போம் இதுகெற்பஸ்திரீகளுக்கு ஆகாது.

## நீ

### இரத்தவிருத்திக்கு.

நீர்முள்ளிவிரையை சூரணித்து பாலில் உட்கொண்டுவந்தால் இரத்தம் விருத்தியாகும் வாந்திநிற்கும் அதிசாரம் நீர்வீக்கம்இளைப்புஇருமல்யிவைதீரும்.

### சிரங்கிக்கு.

நீரிடிமுத்தின் பருப்பை தயிரில்ஊரவைத்து எலிமிச்சம் பழச்சார்அல்லதுகாடிவார்த்தரைத்து உடம்பில் பூசிகாய்ந்தபிரகு சாணம்தேய்த்துஅல்லதுஇலுப்பைபக்கட்டியாலரைப்புதேய்த்து குளிக்கவும் நமை சொரி யாவும் தீரும்.

### கண்ணோய்க்கு.

நீலாஞ்சனம் யென்னும் சிறுமாகல்லு முத்து கஸ்தூரி இதுகள்சமநிடையெடுத்து முலைப்பால்விட்டரைத்து கண்ணில்கலிக்கம் தீட்டிவந்தால் சகலகண்ணோயும் தீரும்.

### நீர்சுரப்பு நீர்சிறுப்பு.

நீர்முள்ளியிலை- பசலையிலை- குப்பைமேனியிலை - இவைகளில் ஒன்றை அவித்துத்தின்றால், நீர்சுரப்பு அல்லது நிர்சிவப்பு இவை நிவர்த்தியாகும்.

## நு

### மந்தத்திற்கு

நுணையிலையை கிஷாயம் வைத்து கொஞ்சம் சக்கறை கூட்டி சாப்பிட்டால் மந்தத்தை நீக்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



### இதுவுமது.

நுணுவிலையை பிள்ளைகளுக்கு கொடுக்கும் மாந்த கிஷாயங்களுடன் சேர்த்து காச்சுவதும் உண்டு. மாந்தம்-புண்-சிலேட்சுமசுரம் இவைகளை நிவர்த்தியாகும்.

---

# நூ

### காயசித்தி

நூராண்டு சென்ற வேப்பம் பட்டையை யிடித்து வஸ்திரகாயம் செய்து சீனி சக்கரை சமன் கூட்டி மண்டலக்கணக்காக இருவேளையும் திருகடியளவு சாப்பிட்டு வந்தால் தேகத்தில் ஊரிய நாட்பட்ட பித்தம் -வாய்வு- ஊஷ்ணம் யாவும் நிவர்த்தியாகும், கண்கள் பிரகாசிக்கும்- புத்தி நுட்பமாகும் -காயத்தில் யாதொரு வியாதியும் அணுகாது ஞானம் துலங்கும்.

---

# நெ

### நீர்குருகலுக்கு.

நெருஞ்சிக்காயை சூரணித்து பாலில் காச்சியுண்டுவந்தால் நீர்குருகல் நீர்அடைப்பு சதையடைப்பு வெட்டை யெலும்புருக்கி இவைசாந்தியாகும்.

### சகலவிஷத்திற்கு.

நெய்க் கொட்டான் மூலத்தை அறைத்து பாலில்உட்கொண்டுவந்தால் சகலவிஷகடிகளும் கரப்பான் கிறந்தி மேகச்சூலை இவைதீரும்.

### நாதவிருத்தி.

நெய்சிட்டிக்கிழங்கை உலர்த்தி சூரணித்து பாலில்காச்சியுண்டுவந்தால் நாதம்விருத்தியாகும் குட்டைத்தணிக்கும்.

### பித்தசூட்டுக்கு

நெல்லிவற்றல் கிஷாயம்வைத்து சீனிகூட்டி பால்விட்டு அருந்திவந்தால் பித்தசூடு ஆண்குறியில் சிறுகொப்பளம் வாந்தி அரோசிகம் இவைதீரும்.

# நே

நேர்வாளமென்பது வயித்தியரால் கையாடவேண்டுமேயன்றி சாதாரணமானவர்கள் கையாடுவது அசாத்திய மாகும். ஆகையால் அதை விடப்பட்டிருக்கிறது.

# நொ

### கட்டிகள் அமுங்க

நொச்சிச்சாற்றைகட்டிகளின்மேல் பற்றுபோட்டுவந்தால்கரைந்துபோகும் வீக்கங்கள் யிறங்கும் இந்தயிலையை வீட்டில்சிலநெருக்கமான யிடங்களில் போட்டுவைத்தால் சில்லரை பூச்சிகள் சேராது.

### தலைநோய்க்கு.

நொச்சிச்சாற்றைஎடுத்து பின்னிசுப்பு நரம்பிசுப்பு தலைநோய் முதலிய சீதளத்தாலுண்டாகும் வியாதிகளுக்கு தடவி நன்ருய் தேய்ப்பதினல் நிவர்த்தியாகும்.

# ப

### சொற்பவாய்வுக்கு.

பரங்கிப்பட்டையை அறைத்து பாலில் கலக்கி யுண்டு வந்தால், சொற்பவாய்வு-சூலை-கரப்பான்-குட்டம்-கிரந்தி இவைதீரும்.

### அஸ்திகாங்கைக்கு.

பற்பாடகத்தை அறைத்து பாலில் உண்டு வந்தால், அஸ்தி- காங்கை-வெட்டை-மேகம்-எரிவு-காந்தல் இவை தீரும்.

### சரஸ்வதிகடாக்ஷமுண்டாக

பனங்கோரை-பெருங்கோரை என்கிற குறட்டை மூலிகையை பாலில் அறைத்து உபயோகித்து வந்தால் லட்சுமி கடாக்ஷமுண்டாகும் நரைதிரை மாறும்.

### தழுதணைக்கு.

பழுபாகல் சமூலத்தை பாலில் பிரயோகித்து உண்டுவந்தால், தழுதணை-தொழுதணை-கிரிமி இவை தீரும். ஷை மூலிகையின் கிழங்கை பத்தியபாகமாய் காட்படத் தின்றுவந்தால் தேகம் பலக்கும்.

### சகலவிஷத்திற்கும்.

பங்கம் பாளை யென்னும் ஆடுதீண்டா மூலிகையை அறைத்து கொட்டைப்பாக்களவு யெடுத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கி யுண்டுவந்தால் புண்புளவை சகல விஷங்களும் தீரும்.

### இதுவுமது.

பழுபாகலென்னும் ஆடுதீண்டாமூலிகையை கருங்குருவைநெல்லுடன் வேகித்து அவல் இடித்து அந்த அவலை தினம் அரிக்கால்படி வீதம் ஒருமண்டலம் தின்ருல், சொரி-சிரங்கு-வங்கு-தழுதணை-வண்டுகடி-அரணைகடி- செய்யான்கடி - பூரான்கடி- பேய்சொரி- வெள்ளைப் புள்ளிகரப்பான் இவை தீரும். 4-நாளைக் கொருமுறை பாலும் மிளகும் தேய்த்து தலைமுழுகவேண்டும். மூன்றுமாதம் வரையில் நல்லெண்ணை புணற்சியாகாது.

Digital collection of Tamil Heritage Foundation



பேன்சாக.

படிகாரத்தை பொடித்து தண்ணியில் கறைத்து தலையில்தேய்த்து ஒரு ஜாமம் சென்று ஸ்தானம் செய்யவும், பேன்-ஈர் முதலானதும் சாகும்.

பல்லுநோய்க்கு.

படிகாரமும் கொட்டைப்பாக்கும் சமனிடை கொண்டு யிடித்து வஸ்திர காயம் செய்து பல்தேய்த்து வென்னீரில் வாய் கொப்பளித்து வரவும் சவுக்கியமாகும்.

பாம்புவிஷத்திற்கு.

பச்சைத்தவளை மாமிசத்தை, உப்பு-நல்லெண்ணெ - அல்லது வெண்ணெயுடன் கலந்து தின்றால் சகல பாம்பு விஷமும் தீரும். மருதினம் வரையில் நித்திரை கூடாது.

அஸ்திசுரத்திற்கு.

பச்சைத் தவளையை கிறமப்படி சாறுகாச்சிக் குடிக்க, அஸதிசுரம்-நாட்பட்டரோகம் - தீராத யிருமல் இவைகள் தீரும். தேகபுஷ்டி யுண்டாகும் உடம்பு குளிர்ச்சியுண்டாம்.

பிளவைகட்டிகட்கு.

பச்சைத் தவளையை உயிருடன் கொண்டுவந்து பிளவைகள்மேல் வைத்து கட்டிவைக்கவும். அது இறந்தபிறகு எடுத்துவுட்டு வேறொகட்டவும். இப்படி செய்வதினால் கட்டிகள் விஷம் நீங்கும். நோய்தீரும்-பிடிப்புகள் தீரும்.

## பா

அறையாப்புக்கட்டிக்கு.

பாவட்டம்வேரும் பூலாப்பூவும் சமன்கூட்டி அறைத்து கனமாய்ப்பூசக் கட்டிகறையும்.

பல்நோய்க்கு.

பாக்கு அதாவது கொட்டைப்பாக்கை துண்டு துண்டாய் நருக்கி சட்டியிலிட்டு கருகவருத்து, கற்பூரம் சமன்கூட்டி நசுக்கி பல்துலக்கிவரவும்.

சீக்கிரத்தில் பிரசவமாக.

பாம்பு தானுயுரித்து நீக்கிய தோலைக் கொண்டுவந்து இடுப்பிலாவது வயற்றிலாவது கட்டி வைக்க உடனே பிரசவமாகும்.

தினவுநீங்க.

பாம்பு தோலை பொடிசெய்து அல்லது சாம்பலாக்கி உடம்பில் தேய்க்க தினவு தீரும். மயிரற்றயிடத்தில் மயிர் முளைக்கும்.

நீர்கோவைதீர

பாம்பு தோலை அங்கவஸ்திரம்போல் மேலுக்காவது, கச்சையைப்போல் இடுப்பிலாவது கட்டியிருந்தால், பாண்டு-நீர்கோவை இதுகள் தீரும் நீரை யிறக்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



### அருபட்டநரம்புக்கு

பாம்பு தோலின் பொடியும் வயல்நண்டு உலர்த்திய பொடியும் சமன் கூட்டி அருபட்ட நரம்பின்மேல் அவிவந்தால் அருபட்ட நரம்புகூடி மூன்று தினத்திற் குணப்படும்.

## பி

### மேகவெட்டைக்கு

பிரமிசமூலத்தை பாலில் உபயோகித்துவந்தால், கிரந்தி-சூலை-மேகவெட்டை இவை தீரும். நீடித்து உண்டுவந்தால் சுயம்பாட வல்லமையுண்டாகும்-

### கார்வாய்ஜன்னிக்கு.

பிரமி யெலையை துளி விளக்கெண்ணைகுத்தி வதைக்கி பெண்களின் கால்பாதத்திலிருந்து கணுக்கால்வரையிலும் கனமாய் வைத்துக் கட்டினல்கார் வாய்ஜன்னி நிவர்த்தியாகும்.

### பதினெட்டுவண்டுகடிக்கும்

பிராயான் சமூலத்தை பாலில்உட்கொண்டுவந்தால் பதினெட்டு எலிகடி சிராய்போல உடம்பில் உண்டாகும் சுரசுரப்பு இவை தீரும்.

### வாதக்குடைச்சல்மந்தத்திற்கு.

பிண்ணாக்குப் பூண்டை கொண்டுவந்து கடுக்காய்தோல்- மிளகு -சுக்கு இதுகள் கால்பங்கு கூட்டி கிஷாயமிட்டு 4-5-வேளை கொடுக்க, வாதக்குடைச்சல் தீரும். இதை தனியாய் கியாழமிட்டுக் கொடுக்க மேகஅனல் தணியும்.

## பீ

### வெள்ளைக்கு.

பீச்சங்கன் இலையை அறைத்து புன்னைக்காயளவு யெடுத்து புளித்தயிர் அரிக்கால்படியில் கலக்கி காலையில்சாப்பிடவும் இப்படி 3 நாள்சாப்பிடவும் உப்பில்லாத பத்தியமிருக்கவும்.

### இதுவுமது

பீச்சங்கன்யிலை பழம்பாசிலை கீழாநெல்லியிலை இம்மூன்றும் சமனாயெடுத்து மூன்மாதிரி சாப்பிட்டாலும் வெள்ளைவிழுகிரவியாதிதீரும்.

### வயற்றுப்பிடுங்கலுக்கு

பீதரோகணியை கியாழமிட்டுக்குடிக்க வயற்றுப்பிடுங்கல் நிவர்த்தியாகும் சிலதுநாள் விடாமல்சாப்பிட்டால் காமாலைரோகத்தைசாந்தியாக்கும்.

### படர்தேமல்நீங்க

பீதரோகணியை தேனில்வுரைத்துப் பூசிவந்தால் படர்தமாறை மூதியதேமல்களைநிவர்த்தியாக்கும்.

Digital collection of Tamil Heritage Foundation



### வாய்வுகளுக்கு

பீனாரிப்பூண்டு என்னும் மூலிகையை சுக்குமிளகுகூட்டி தியாழமிட்டு உட்கொள்ள வாய்வுகளைக் கண்டிக்கும்.

## பு

### சுக்கிலமேகம் அதிசாரத்திற்கு

புளியம் வித்தின் மேற்றோலை பாலில்அரைத்துக்கலக்கி யுண்டுவந்தால் சுக்கிலமேகம் அதிசாரம்இவைதீரும் உந்திப்புண் சவுக்கியமாகும்.

### எலிவிஷத்திற்கு

புரசு மூலத்தை பாலில்உட்கொண்டுவந்தால் எலிவிஷம் குன்மம் வாய்வுவாதம் இவைதீரும்.

### வயற்றுப்பூச்சிக்கு

புரசு வித்தை யெருமைச்சாணிக்குள் பொதிந்து காலையில்எடுத்து சுமார்இரண்டுவிரையைதோல்நீக்கி அதைத்து பாலில்கலந்துக்கொடுக்கவயறிலுள்ள பெருங்கிரிமிகள் வந்துவிடும் வயற்றுவலியும் தீரும்.

### புண்புரைஅரையாப்புக்கு

புங்கமரத்தின் மூலத்தை பாலில்அறைத்து உட்கொண்டுவந்தால் புண்புரைநோய் சூலைஅறையாப்புக்கட்டி இவைகரையும்.

### மேகத்திற்குஅல்லது வெள்ளைக்கு

புங்கன்கொழுந்து கொண்டுவந்து நெகிழஅறைத்து நல்லெண்ணையில்கூட்டிக் கொடுக்க வெள்ளைதீரும் கடும்பத்தியம்.

### குழந்தைகட்குபேதிகண்டால்

புளியாரை வாழைப்பூ சமன்கூட்டி பிட்டலத்து தேன்குத்திப்பிசைந்து கொடுக்க சாந்தியாகும்

### பசிதீபனத்திற்கு

புதினாரசம் 1 பலம் எலுமிச்சம் பழரசம் 2 பலம் கொஞ்சம்சக்கரைகூட்டிக்கொடுக்க தீபனமுண்டாகும்.

## பூ

### உடல்புஷ்டியாக

பூசினிவித்தின்பருப்பை யெடுத்து பொடித்து காச்சியபாலில்கலந்துஉண்டுவந்தால் உடம்புபுஷ்டியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### இரத்தக்கழிச்சலுக்கு

பூனைக்காலிவிரையை பாலில்காச்சி யுண்டுவந்தால் இரத்தக்கழிச்சல்நிவர்த்தியாகும் விந்துகட்டும்.

### வாதநோய்களுக்கு

பூதவிருட்சமூலத்தைப் பாலில்அறைத்துக் கலக்கியுண்டுவந்தால் வாதநோய்கள் நிவர்த்தியாகும் பலவிஷக்கடிகளும் தீரும்.

### சொறிசிரங்குகரப்பானுக்கு

பூவரசு மூலத்தை பாலிற்கொள்ள சொறிசிரங்கு கரப்பான் வீக்கம்இவை தீரும் சில்லரைவிஷம்சாந்தியாகும்.

### கைகால்குடைச்சலுக்கு

பூமிசக்கரைக்கிழங்கைதண்ணீர்விட்டரைத்துகைகால்குடைச்சலுக்குபூசிவரவும் சிலதடவைகள்பூசிவந்தால் சவுக்கியமாகும்.

### மூச்சுஅடைப்புக்கு

பூமிசக்கறைக்கிழங்கை தேனில்உரைத்துஉள்ளுக்குக்கொடுக்கமூச்சடைப்புதீரும் நாள்பட்டயிருமல் சாந்தியாகும்.

### வீரியவிருத்திக்கு

பூனைக்காலிவித்து காரட்டுவிரை வெங்காயவிரை இதுசமனிடை கூட்டி ஆலம்பால் அல்லது அத்திப்பாலில் அறைத்து ஒருவேளைக்கு இரண்டு விராகனிடை யாக பசும்பாலில் குழைத்து சாப்பிடவும் இப்படி எழுநாள் இருவேளையும் தின்றால் தாதுவிருத்தியாகும் இடுப்புவலிவுண்டாகும்,

### காதுநோய்க்கு

பூண்டுதிரிகளை பஞ்சுபோல் நசுக்கி துணியில் முடிந்து விளக்கில்வாட்டி 2,3,துளிகாதில்பிழிய காதுநோய்தீரும்.

# பெ

### திரிதோஷத்திற்கு

பெருங்குமிள் மூலத்தைப் பாலிற் கொள்ள மேகஎரிவு-சுக்கிலக்கட்டுப்பு பித்தசுரம் வாதசுரம்-திமிர்தோஷம் தீரும்.

### பிடிப்புக்கு

பெருவாகை மூலத்தை பாலில் உட்கொண்டுவந்தாலும் கிஷாயம் செய்து உண்டு வந்தாலும், சூலை-பிடிப்பு-வீக்கம் இவை தீரும். சில்லரை விஷங்கள் சாந்தியாகும்.

### ஆராதமேகரிணத்திற்கு

பெண்கள் மாதவிடாயாகும்போது அந்த உதிரச்சீலை கொண்டுவந்து நெருப்பிலிட்டுக் கருக்கி ஆராத புண்பேரில் தூவினால் ஆறிப்போகும்.

Digital collection of Tamil Heritage Foundation



# பே

## நெஞ்செரிவுக்கு

பேரிச்சம்பழம் அதாவது உலர்ந்த காய்களை பாலில் உபயோகித்து வந்தால்; நெஞ்செரிவு-தாகம்-பித்தம்-மேகம்-வாந்தி இவை சாந்தியாகும்.

## சிரங்குகளுக்கு.

பேன் கொட்டை பருப்பு 1-பலம் இரசகற்பூரம் அரை பலம், ஏலரிசி கால்பலம்-இந்தப்படி நிறுத்தெடுத்து தேங்கா யெண்ணை விட்டரைத்து சிறங்குகளுக்குத் தடவிவந்தால், ஈ எரும்பு முதலியவை சேராது ஆரிப்போகும்.

## பித்தசுரத்திற்கு.

பேய்ப்புடலும் விஷ்ணுகாந்தியும் கிஷாயம் வைத்து துளிதேன் முலை பால் விட்டுக் கொடுக்கவும். இப்படி ஆறுவேளை கொடுக்க சாந்தியாகும்.

## வாதசுரத்திற்கு.

பேரரத்தை யென்னும் துப்பராஷ்டகமும் அதுவேளை கண்டங்கத்திரி கோரைக்கிழங்கு செஞ்சந்தனம் இதுகளுடன் கிஷாயமிட்டு 5,6,வேளைகொடுக்கசாந்தியாகும்.

## பொது

பேய்மிறட்டி யென்னும் மூலிகையை இன்னும்சிலமூலிகையும் சரக்குகளுடனும் கூட்டிமாந்தகிஷாயமிடுவதுண்டு.

# பொ

## இருமல்சாந்தி

பொற்றலைக்கையான் சமூலத்தை பாலில்அரைத்து உண்டுவந்தால்இருமல் சாந்தியாகும் காசம்சோகை பாண்டுஇவைகளும் குணமாகும்.

## பகலில்நட்சத்திரம்தெரிய

பொன்னாங்காணி சமூலத்தை ஒருவர் முகம்காணமல்அதிகாலையில்எழுந்துவாய்கொண்டமட்டும் தின்றுவரவும் இப்படிமண்டலக்கணக்காய் அருந்தினல் உடல்குளிர்ச்சியுண்டாம் கண்குளிர்ச்சியுண்டாம் பகலில்நட்சத்திரம் தெரியும்.

## காமாலைக்கும்பாண்டுசோகைக்கும்

பொற்றலைக்கையான் சமூலமும் அயக்கிட்டம் கடுக்காய் இதுகள்சமனிடைசேர்த்து கிஷாயம் செய்து சாப்பிட்டுவந்தால் சோகைபாண்டுகாமாலை இவைதீரும்

Digital collection of Tamil Heritage Foundation



## அதிமூத்திரத்திற்கு.

பொன்முசட்டை சமூலத்தை பாலில் அறைத்துண்டுவந்தால் கடிவிஷம் மலக்டுவிக்கல் நீங்கும் அதிமூத்திரத்தைநிவர்த்தியாக்கும்.

## மேகப்புண்ணுக்கு.

பொடுதலைக்காயும் மஞ்சளும் சமன்கூட்டி மைபோல்உறைத்து புண்ணின்மேல்வைத்துக்கட்ட 4 – 5. வேளையில் ஆரிப்போகும்.

## பாம்புகடிக்கு

பொன்னுவாரை வேருடன் மிளகு கூட்டி அறைத்து விழுங்கினல் பாம்புவிஷம் உடனேதீரும்.

## படைகளுக்கு.

பொன்னுவாரை வேருடன் சந்தனம்கூட்டி யரைத்து படைகளில்தடவந்தால் உதிர்ந்துமரைந்துபோகும்.

# ம

## கருந்தேமலுக்கு.

மருதோன்றி யிலையுடன் படிகாரம் சேர்த்து அறைத்துப் பூசிவந்தால் கருந்தேமல் படைகள் நரம்பிழுப்பு கால்நோய் இதுகள்தீரும்.

## பித்தநீர்வாந்தியாக

மரக்காளான் சதையை இரண்டுவிராகனிடை எடுத்து இராத்திரியில்வென்னீரில் ஊரவைத்து காலையில் தெளிவாகயிருத்து சாப்பிட வாந்தியாகும்.

## வாய்வுசீதளத்திற்கு

மலைத்தேன் 8 பலத்தை முரித்து நீர்சுண்டியபின் அபினி அரிக்கால்தோலாயிழைத்து,ஓமம் 3 பலம் ஜாதிக்காய் ஜாபத்திரி பவளம்வகைக்கு அறைபலம் பொடித்துப் போட்டுக்கிளரி புளியங்கொட்டையளவு கொடுத்துவரவும்தீரும்

## வாய்வேக்காட்டிற்கு.

மருதணியிலையை ஒன்றிரண்டாயிடித்து இரண்டுகுத்துபோட்டு அறைபடி ஜெலம்விட்டு நாலுக்கொன்ருய் கிஷாயம்வைத்து இருவேளையும் வாய் கொப்பளிக்க வாய்வேக்காடு சாந்தியாகும்.

## சகலகட்டியுங்கறைய

மஞ்சள்மெழுகு 1பலம் வெள்ளைபாஷானம் அரிக்கால்பலம் மெழுகை சட்டியிலிட்டு உருக்கினவுடன் பாஷாணத்தை பொடித்துப் போட்டு கிளரி

Digital collection of Tamil Heritage Foundation



யிரக்கவும் ஆரியபிரகு பில்லேதட்டி கட்டியின்மேல்வைத்து ககைசயினல்கட்டவும் இப்படிமூன்றுகட்டில் கரையும் பிரகுளண்ணே சாப்பிடவும்

பித்தத்தால்கண்டஉடநோக்குவெடிப்புக்கு

மருமாங்காயிலேயை அறைத்து பிஞ்சுக்காயளவு எடுத்துபசும்பாலில் கலேக்கி காலேயில்சாப்பிடவும் மூன்றுநாள் சாப்பிடவும் பத்தியம் பாலும்சாதம்

புண்களுக்கு

மஞ்சள் பொடியை புண்ணின்பேரில் தூவிவந்தால் சிவந்துஆரிப்போகும் இலுப்பக்கட்டி தேய்த்து குளிக்கவும்

தாதுவிருத்திக்கு.

மகிளம் வித்தைஅறைத்துத் பாலில் கலேக்கியுண்டுவந்தால் தாதுவிருத்தியுண்டாம்.

ஓடுவாய்வுக்கு.

மலேவேம்பின் மூலத்தை பாலில் உரவாக்கி யுண்டு வந்தால் மலக்கட்டு கிருமி உடலில் ஒடிஒடிகுத்துகிர வாய்வுதீரும்.

நீரிழிவு பிரமேகத்திற்கு

மருதமரத்தின் சமூலத்தைபாலிற் கொள்ளநீரிழவுபிரமேகம் மயக்கம்தாகம் கபம் கிரிமி வயற்றுவலி இவைதீரும்.

எரிகுட்டம்வண்டுகடிக்கு

மருள்கிழங்கை பாலில்அறைத்து பாலில்கலந்துண்டுவந்தால்மூலம் கரப்பான் புண்சிலந்தி எரிகுட்டம் வண்டுகடி இவைதீரும்.

நாதம்கட்ட

மரவீழிக்கிழங்கை பாலில் அறைத்துக் கலந்து உண்டு வந்தால் மூலக்கிரிச்சினம் மேகவேட்டை தீரும்காமம் அதிகரிக்கும் நாதம்கட்டுபடும் நாவில் அமுதம் ஊறும்.

திரேகபலம்உண்டாக

மரவீழிக்கிழங்கை பாலில்அவித்து உலர்த்தியிடித்து தூள்செய்து வருத்தஉளுந்துமாவும் எள்ளுப்பொரியும் சமன்கலந்து திருகடியளவு சாப்பிட்டுவந்தால் திரேகம் பலமுண்டாகும்.

மேனியழகுண்டாக.

மகாமூலிஎன்ற ஆகாசகெருடன் கிழங்கை அறைத்து கொட்டைப்பாக்களவு ஆவின்பாலில் உண்டு வந்தால் நரைதிரை மாறும். மேனிஅழகுண்டாகும் சர்வரோய்களும் விஷக்கடிகளும் தீரும். பத்தியம் பாலும் அன்னமுண்ணவும் புளி புகை ஆகாது.

Digital collection of Tamil Heritage Foundation



## மா

### மாதவிடாயுண்டாக

மாவிலிங்கம் பட்டை உள்ளி-மிளகு இம்மூன்றும் சமனிடை கொண்டு அரைத்த விழுது கொட்டைப்பாக்களவாக மூன்றுநாள் காலையில்கொடுக்க மாதவிடாயுண்டாகும்.

### வெட்டுகாயத்தின்உதிரப்பெருக்குநிற்க

மாசிக்காய்களை சுட்டு அந்த சாம்பலைதளமாய் வைத்து அழுத்த உதிரப்பெருக்கு நிற்கும்.

### மேகக்கடுப்புக்கு.

மாதளம் வித்தை அரைத்துப் பாலில் கலக்கியுண்டு வந்தால், மேகக்கடுப்பு-சுக்கிலதோஷம் இவைதீரும்.

### இரத்தக்கடுப்புக்கு

மாங்கொட்டைப் பருப்பை அரைத்துப் பாலில் கலக்கி யுண்டுவந்தால் இரத்தக்கடுப்பு சீதக்கடுப்பு இவை தீரும்.

### சுரோணிதக்கட்டுக்கு

மாவிலிங்கம் மூலத்தை பாலில்கொள்ள, சுரம்-வெட்டை-சூலை-சுரோணிதக்கட்டு- கல்லடைப்பு- நீர் அடைப்பு தீரும்.

### சூதகக்கட்டுக்கு

மாவிலிங்கம்பட்டை- மூங்கில் இலை -சித்திரமூலவேர் – சதகுப்பை – சுக்கு-திப்பிலி இவைகள் சமனிடை கொண்டு படி தண்ணி வைத்து வீசம் படியாக யிரக்கி வடிகட்டி பனவெட்டு கொஞ்சம் போட்டுக் கொடுக்கவும். இப்படி 3-வேளை கொடுத்தால் பிரசவகாலத்தில் தடைப்பட்டிருக்கும் சூதகத்தைஉடைக்கும்.

## மி

மிளகை சூரணித்து அப்போது கரந்த பசும்பாலில் போட்டு அருந்தி வந்தால், குளிர்சுரம்-பாண்டு-கபம்-கிருணி-குன்மம் – வாய்வு- மூலம்- பித்தம்- இருமல்-பிரமேகம் இவைதீரும்.

### அஸ்திசூட்டுக்கு

மின்னைக்கீரையை மிளகுதாளிட்டு கிறமப்படி குழம்பு செய்து சாப்பிட்டு வந்தால், அஸ்திசூடு-வெட்டை இதுகள் சாந்தியாகும். கண் குளிர்ச்சியுண்டாம்.

### குளிர்சரத்திற்கு

மிளகை கிஷாயம் வைத்து எட்டுக்கொரு பாகமாய் இரக்கி வடிகட்டிக் கொடுத்து சக்திக்கிசைந்தபடி வங்கணம்போட சாந்தியாகும்.

Digital collection of Tamil Heritage Foundation



### இருமல்சாந்தி.

பிளகரணையை சூரணித்து இந்த சூரணித்திற்க றைபாகம்(திப்பிலி-கடுக்காய்-தோல்-சுக்கு) இம்மூன்றும் சேர்த்திடித்த சூரணம் கூட்டிக் கலந்து திருகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர, இருமல்-ஈளை-கபம்-ஐயம் பித்தம் சாந்தியாகும்.

## மு

### ரத்தகிராணிக்கு.

முள்ளிலவம் பிசினியை தயிரில் அறைத்து மூன்றுநாள் காலையில் தொட்டைப்பாக்களவு கொடுத்துவரத் தீரும்.

### நீர்கருக்குக்கு

முள்ளாங்கிக் கிழங்கை யிடித்து சாறுபிழிந்து வெள்ளைச் சக்கரைக் கலந்து சாப்பிடத்தீரும் மூன்றுவேளைசாப்பிடவும்.

### அறையாப்புக்கட்டிகரைய

முருங்கை வேர்பட்டையும் புழுங்கலரிசியும் உப்பும் சமன்கூட்டியரைத்து கட்டிமேல்வைத்துக் கட்டகறையும் மூன்றுநாள் கட்டவும்.

### காதுசெவுட்டுக்கு.

முருங்கைவேரும் கோண்டைவேரும் சமன்கொண்டுயிடித்து சார்பிழிந்துகாதில் ஒருதுளிவிடவும் இப்படி 3 நாள்விட தீரும்.

### தாதுபுஷ்டிக்கு

முருங்கைவித்தை பாலில்போட்டுக் காச்சியுண்டுவந்தால் இந்திரியங்கட்டுபடும் தாதுபுஷ்டியுண்டாம்.

### ஸ்தனமில்லாதவர்க்கு.

மூத்தெருக்கன் செவிமூலத்தை பாலில்அறைத்துக் கலக்கியுண்டுவந்தால்சிறுகாயுள்ள ஸ்தனங்கள் பெருத்து விம்மும் சுரப்பான் பருவுபிளவைதீரும்

### உமிநீர்சுரப்புக்கு

மூசுமுசுக்கையை கிஷாயம்வைத்து நாலுக்கொன்றுயிரைக்கிகுடிநீராக்கொடுத்து வுந்தால் பித்தவுபரி உமிநீர் சுரப்பு இவைதீரும்.

## மூ

### அறையாப்புக்கு

மூக்குரட்டை வேரை அரைத்து புன்னைக்காயளவு யெடுத்து காலாமுக்கு நல்லெண்ணெயில் கலந்து சாப்பிடவும் மீன் கருவாடு புளிபுகை வாகிஆகாது. இப்படி 3 நாள் கொள்ள தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



### இரத்தபித்தந்திற்கு

மூங்கில்விதையை பாலில் கொள்ள இரத்தபித்தம் கண்ணோய் இவைகள் தீரும்.

### எட்டுவகைகுன்மம் நரை திரைமாற

மூக்கரைச்சாரணை வேரை ஆவின்பாலில் அறைத்துக் கலந்துண்டுவந்தால் ஒருமண்டலத்தில் நரைதிரைமாறும். உடல் இருகும் பகலில்நட்சத்திரம் தெரியும் எட்டுவிதகுன்மம் சாந்தியாகும்.

## வ

### பிள்ளைகள் வயற்றுநோய்க்கு.

வசம்பை சுட்டுகரியாக்கி முலைப்பாலில்இழைத்து நாவில்தடவினால் பிள்ளைகள் வயற்றுநோய் தீரும்.

### புண்களுக்கு.

வல்லாரையிலையை பிடுங்கிவந்து பச்சையாகவே நன்றாய்அரைத்து அந்தயீரத்துடன் புண்களின்மேல் வைத்துக்கட்டினால் 2 3 கட்டில் ஆரிப்போகும்.

### கண்டமாலை-நசள்பட்ட மேகவியாதி-உடம்புமுழுதும்புண் இதுகட்கு.

வல்லாரையிலையை வேண்டியமட்டில் பிடுங்கிவந்து கரணைகளை தள்ளியிலையை மாத்திரம் குருகஅரிந்து ஒருபாயின்மேல்பரப்பி நிழலில் உலர்த்திவைத்து முற்றும் நன்றாய் உலர்ந்தபிரகு யிடித்து துணியில் வடிகட்டி வஸ்திரகாயம்செய்து புதுகலையத்தில் போட்டுமூடிவைத்துக் கொள்ளவேண்டும் 5 கிறையன்முதல் 8 கிறையன் வரையிலும் கொஞ்சம் வென்னீரிலாவதுபசும்பாலிலாவது கலந்துகொடுக்கவும் இப்படி ஒருதினத்திற்கு மூன்றுவேளைகொடுக்கவும். இப்படி கொடுத்துவரும்போது ஷை பொடியை புண்கள் பேரிலும் தூவிக்கொண்டுவரலாம் இப்படிஒரேமுறையாய் சிலவாரங்கள் கொடுத்துவந்தால் வியாதிக்காரன் பலதுன்பமும் நீங்கி விசேஷசுகமடைவான் ஒருசமயம் உடம்பில்சொரியாவது நமையாவது காணுமாகில் மருந்தைநிருத்தி ஒருபேதிக்கு கொடுத்து அதன்பிரகு ஒருவாரம்பொருத்து மருபடியும் மருந்து கொடுத்து வரவும் இப்படியே தொடர்ந்துகொடுத்தால் குரிப்பான குணத்தைக் காணலாம் இந்தசூரணம் செய்யும்போது வெய்யலில் சூடுகாட்டி உலர்த்தினால் மூலிகையின் சத்துபோய்விடும் ஆகையால் நிழலில் உலர்த்திசூரணிக்க வேண்டும்.

### காணாக்கடிசொரி.

வன்னிமரத்தின் சமூலத்தை பாலில்அறைத்துக்கலக்கி யுண்டுவந்தால் வாதம் ஜன்னி தோஷம் காணாக்கடிவிஷம் கபம்சொரி இவை தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



### மருந்ீடு-தேக ஊராலுக்கு.

வல்லாரை சமூலத்தைபாலில் அறைத்துக் கலக்கியுண்டுவந்தால் இருமல் யீளை மருந்திடு கைகாலில் உண்டாகும் ஊரல்நீங்கும் நெடுநாள் உண்டுவந்தால் நரைதிரைமாறும்.

### கிறந்தி வண்டுகடிக்கு.

வக்கணத்திமூலத்தை பாலில்அறைத்துக்கலக்கியுண்டுவந்தால்கிறந்திவண்டுகடிசிலவிடம் கரப்பான் இவைதீரும்.

### ஆண்மையுண்டாகவும் தேகபலத்திற்கும்.

வராகிமூலமென்ற நிலப்பணக் கிழங்கை சூரணித்து காச்சியபாலில் பிரையோகித்து உண்டுவந்தால் விந்துகட்டும் தாதுஉண்டாகும் ஆண்மைஅதிகரிக்கும் தேகம் இருகும்.

### பல் வலிக்கு.

வநாகிமூலமென்ற நிலப்பனைக்கிழங்கைகுப்பைமேனிசாற்ருல் அறைத்துநல்லெண்ணையில் கலக்கிக்காச்சி பல்லுநோயுக்கு அந்தபாகங்களில்துளிதுளியாய் விட்டால் பல்வலிதீரும் புழுக்கள்சாகும்.

### கோசம் பூரிக்க.

வராகிக்கிழங்கும் பூமிசக்கறைக்கிழங்கும் பூனைக்காலிவித்தும் சமனிடையெடுத்து சூரணித்து பாலில்காச்சி யுண்டுவந்தால் கோசம்பூரித்துவிம்மும் விந்துகட்டும்.

### வயற்றில் மரித்த பிள்ளைக்கு.

வசம்பும் பெருங்காயமும் முலைப்பால் விட்டறைத்து அடிவயற்றில் தடவினல் வயற்றில் மரித்தபிள்ளை கீழேவிழும்.

## வா

### மேனியுண்டாக.

வாலுவை யரிசியை சூரணித்தாவது, பால்விட்டறைத்தாவது. பாலில் கலந்து உட்கொண்டுவந்தால் மேனியழகுண்டாகும். சகல நோயும் தீரும்.

### கபம் மூலச்சூட்டிற்கு.

வால்மிளகைச் சூரணித்து திருகடியளவு பாலிற் கலந்துண்டுவந்தால் கபம்-மூலச்சூடு-வெட்டை நீங்கும்.

### போகம் அதிகரிக்க.

வாதுமைப் பருப்பைப் பாலில் உட்கொண்டுவந்தால் போகம் அதிகரிக்கும்-விந்து கட்டும்-ஷை தயிலத்திஞல் கண்படலம்தீரும்.

Digital collection of Tamil Heritage Foundation



## வி

### காச சுவாசத்திற்கு.

விளாமரத்து வேரின்பட்டையை பாலில் அறைத்துக் கலக்கி யுண்டுவந்தால் காசசுவாசம்–அரோசிகம்–தாகம்–பித்தம் இவை தீரும்.

## வெ

### வெள்ளை புண்ணுக்கு

வெள்ளை குங்கிலியத்தைப் பொடித்து வஸ்திரகாயம் செய்து திருகடியளவு பாலிற் கலந்துண்டுவந்தால், வெள்ளை– புண்ணு– பிரமேகம்– வெட்டை இவை தீரும்.

### உதரநோய் மூலத்திற்கு.

வெள்ளைப்பூண்டை பாலில் வேகித்து வெந்தபிறகு அந்த பூண்டைத் தின்று பாலைக்குடிக்கவும். வாய்வு– உதரரோகம் –மூலரோகம்– நெஞ்சடைப்பு இவைகள் நிவர்த்தியாகும்.

### நீர் அடைப்புக்கு.

வெள்ளரி வித்தை பாலில் அறைத்தாவது, வஸ்திரகாயம் செய்துக் கலந்தாவது உட்கொண்டு வந்தால், நீறடைப்பு– கல்லடைப்பு– சதையடைப்பு– நீர்தாரையெரிவு இவை நிவர்த்தியாகும்.

### கரப்பான் வண்டுகடிக்கு.

வெட்பாலையைபாலில் பிரயோகித்துக்கலக்கி யுண்டுவந்தால்,கரப்பான் வண்டுகடி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும்.

### ஆறுபுள்ளி வண்டுகடிக்கு.

வெள்ளெருக்கின் மூலத்தை பாலில் அறைத்துக் கலக்கியுண்டுவந்தால் எல்லரை விடம்–பிரமேகம்–கிறந்தி–வண்டுகடி–செய்யான்கடி–ஆறுபுள்ளி–வண்டுகடி–மரவெட்டைக்கடி நிவர்த்தியாகும்.

### ஊஷ்ணமேகத்திற்கு.

வெள்ளருகு சமூலத்தை பாலிலாவது தயிரிலாவது அறைத்துக்கலக்கி யுண்டு வந்தால், சொரி–சிறங்கு–கிறந்தி –வெட்டை–பிரமேகம்–ஊஷ்ணமேகம்–வெள்ளை நிவர்த்தியாகும்.

### நீர்கட்டை உடைக்க.

வெள்ளை சார்வேளை யிலையின் சாறு–9–விராகனிடை பசும்பால் – 12–விராகனிடை இவ்விரண்டும் கலந்துக் குடிக்க நீர்கட்டை உடனே உடைக்கும்.

### வெண்குட்ட சாந்தி

வெள்ளைப்பூண்டு–நவாச்சாரம் இரண்டும் சரியிடை கொண்டு அறைத்து வெண்குட்டத்தின்மேல் தடவிவந்தால் வெண்மை மாறும்.

Digital collection of Tamil Heritage Foundation



### தாதுபுஷ்டிக்கு.

வெங்காயவிறை கால்பலம் எடுத்து கோழிமுட்டையின் வெண்கருவில் கலக்கிக் குடித்துவர வீரியம் அதிகரிக்கும். ஷை விறையை தேனில் கலந்து குடித்தாலும் தாதுபுஷ்டியுண்டாம்.

### தாதுபுஷ்டிக்கு.

வெள்ளை வெங்காயத்தை அரிந்து நெய்யில்வருத்து சாப்பிடவும். இப்படி ஒருவேளைக்கு ஒரு வெங்காயமாக இருவேளையும் 20-நாள் சாப்பிடவும்

### புண்ணுக்குக்கட்டு.

வெள்ளாட்டுப் புழுக்கையை சிறுபிள்ளைகள் மூத்திரம் விட்டரைத்து ஆராதபுண்களின்மேல் வைத்துககட்ட ஆரிப்போகும்.

## வே

### குத்திருமல் ஈளைக்கு.

வேங்கை மூலத்தை பாலில் அறைத்துக் கலக்கி யுண்டு வந்தால் குத்திருமல்-ஈளை-உளமாந்தை-புண்-சீழ்வடிதல் மலக்கட்டு நீங்கும்.

### பல்வகைக்கிறந்திக்கு.

வேலிப்பருத்தி சமூலத்தை பாலில் அறைத்துக் கலக்கியுண்டுவந்தால் பலவகை கிறந்தி-மருந்தீடு-கைகால்பிடிப்பு வாய்வு தீரும்.

### தீச்சுட்ட புண்ணுக்கு.

வேப்பங் கொழுந்தை சிதைத்து ஆமணக்கு யிலையில் பொதிந்து உமி காந்தலில் பொதிந்து வெந்தப்பதத்தில் எடுத்து ஷை புண்மேல்வைத்துக்கட்ட ஆரிவிடும்.

### கிருமிகள் வீழ.

வேப்பீர்க்கு (பத்து) விராகனிடை கடுக்காய் தோல் 4-விராகனிடை யிரண்டைச்சாற்றில் மைபோல் அறைந்து சுண்டைக்காயளவெடுத்து விளக்கெண்ணெயில் மத்தித்துக் கொடுக்க கிருமிகள் வந்துவிடும்.

## மூலிகைமர்மம்

INDIAN BRITISH COPYRIGHT
18 MY 1900
MUSEUM




முதுசொம் THF

இதில் விட்டவை முதலிய மற்றவைகளை இரண்டாம்பாகத்தில் காட்டப்படும்.